கம்யூனிஸ்ட் கட்சியின் மேதின அறைகூவல்

# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 6 | இதழ் 24 | 28 ஏப்ரல் 1968 | பக்கங்கள் 16 | விலை சதம் 1


**அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவம் ஆகியவற்றின் நலன்களைப் பிரதிநிதித்துவஞ் செய்கின்ற யூ.என்.பி.அரசாங்கம் நெருக்கடிக்குமேல் நெருக்கடிக்கு ஆளாகி கர்ண கடூரமான கஷ்டங்களுக்குள் சறுக்கி விழுந்து வருகின்ற இந்த நேரத்தில்,ஈழத் திருநாட்டுப் பாட்டாளி மக்கள் இந்த வருட மே தினத்தை--உலகத் தொழிலாளர்களின் மகத்தான செந் தினத்தைக் கொண்டாடுகின்றனர். பிற்போக்கு யூ.என்.பி. அரசாங்கம் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளில் ஒன்றையாவது தீர்த்துவைப்பதற்கு முடியாததாகியுள்ளது..மாருக எமது நாட்டின் பொருளாதாரத்தை அந்நிய ஏகாதிபத்தியத்திடம் அடகு வைப்பதன் மூலம் யூ.என்.பி.அரசாங்கம் பொருளாதார நெருக்கடியை மோசமாக்கியுள்ளது.**

# புரட்சிகரமான முறையில் மேதினம் கொண்டாடுவோம்

அதன் விளைவாக யூ.என்.பியின் தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிரான பொது மக்களது அதிருப்தியும், ஆத்திரமும் அசுர உருவில் அதிகரித்துள்ளன. ஆனல் முக்கூட்டு முன்னணியைச் சேர்ந்த கட்சிகளோ யூ.என்.பி-க்கு எதிராக வளரும் பரந்த வெகுஜன எதிர்ப்புணர்ச்சியை பிற்போக்கு சக்திகளைத் தூக்கி எறியக்கூடிய, பயனுள்ள பாதையில் கொண்டு செல்ல இலாயக்கற்றவையாக இருக்கின்றன. முழுக்க முழுக்க பாராளுமன்றப் பாதையை நம்பிக் கொண்டும் எல்லாவிதமான புரட்சிகர நடவடிக்கைகளுக்கும் தமது புறமுதுகைக் காட்டிக்கொண்டும் இருக்கின்ற இந்த முக்கூட்டு முன்னணிக் கட்சிகள் சம்பூரணமாக அரசியல் பங்கலோட்டுத்தனத்தை நோக்கியும் முழுமையாக தம்மை அம்பலப்படுத்திக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றன. லங்கா சமசமாஜக் கட்சியும் கெனமன் திரிபுவாதக் கும்பலும் புரட்சிக்குத் துரோகம் செய்ததன் மூலமும் தமது வர்க்க சமரசக் கொள்கைகள் மூலமும் இந் நாட்டுத் தொழிலாளர் வர்க்கத்தினதும் முற்போக்கு இயக்கத்தினதும் துரோகிகளாக மாறியுள்ளன.

இப்படியான நிலைமையிலே, இலங்கை மக்களுக்குப் புரட்சிகரப் பாதையைச் சுட்டிக் காட்டுவதற்கும், உண்மையான தேசிய சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் அடையவும், எதிர்கால சோஷலிஸ்ச் சமுதாயத்திற்கான அத்திவாரத்தை இடவும் வேண்டி, அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவம் ஆகியவற்றை எதிர்க்கும் சக்திகள் யாவற்றினதும் புரட்சிகர ஐக்கிய முன்னணிக்காக அறைகூவல் விடுவதற்கும் உள்ள ஒரேயொரு அரசியல் கட்சியாக எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மாத்திரம்தான் இருந்துவருகிறது.

இவ் வருட மே தினத்தை முன்னிட்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பின்வரும் பிரதான கோஷங்களை வெளியிட்டுள்ளது:

◎ **வரண்ட பாராளுமன் பாதையை நிராகரிப்போம்!**

◎ **புரட்சிகரப் போராட்டத்திற்கு மக்களை அணிதிரட்டுவோம்!**

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இவ்வருட மே தினத்தை இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் (சி. டி. யூ. எப், அகில-இலங்கை விவசாயிகள் சம்மேளனம், இலங்கை வாலிபர் சங்க சம்மேளனம் ஆகியவற்றோடு இணைந்து கொண்டாடுகிறது.

மே தினப் பொதுக் கூட்டம் கொழும்பு ஹைட்பார்க்கில் நடைபெறும். கூட்டத்திற்கு முன்னர் ஊர்வலமொன்று ஹைட்பார்க்கிலிருந்து புறப்பட்டு மீண்டும் ஹைட்பார்க்கை வந்தடையும்.

இவ்வருட மே தின ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும், தொழிலாளர் வர்க்கத்தை ஐக்கியப்படுத்துவதற்கும், விவசாயிகளோடும் கிராமிய வெகுஜனங்களின் இதர பகுதியினரோடும் நெருங்கிய பிணைப்பை —ஒற்றுமையை ஸ்தாபிப்பதற்கும், அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், யூ. என். பி. மற்றும் அதன் பிற்போக்கு சகாக்கள் யாவற்றையும் தோற்கடிக்க முன்செல்வதற்குமாகத் தாம் பூணுகின்ற திடசங்கல்பத்தினதும் தமது வலிமையினதும் நன்ருக — வெளிப்படுத்தும் வண்ணம் புரட்சிகரக் கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்ளும் அனைவருக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுக்கிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியால் வெளியிடப்பட்டுள்ள இதர கோஷங்கள் பின்வருமாறு:

—16ம் பக்கம் பார்க்க




**புத்தர்களாக மாட்டார்கள்**

**பிற்போக்குவாதிகள் கொலைகாரக் கொடுவாள்களை ஒரு போதும் கீழே வைக்கமாட்டார்கள்….. அவர்கள் ஒரு போதும் புத்தர்களாக மாட்டார்கள்.**

**-மா சே-துங்**

# நீக்ரோ மக்கள் போராட்டம் உலகப் புரட்சியின் பிரிக்க முடியாத அங்கம்

## கறுப்பு மக்களின் போராட்டத்தை ஆதரித்து தலைவர் மா ஓ அறிக்கை

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியினது தலைவரும் உலகின் புரட்சிகர மக்களின் இணையற்ற முதல்வருமான தோழர் மா சே-துங், அமெரிக்காவிலே வெள்ளை இன வெறியர்களதும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளதும் இன ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடும் ஆபிரிக்க – அமெரிக்க மக்களது வீரம் செறிந்த போராட்டத்தை ஆதரித்து ஏப்ரல் 16ம் திகதியன்று அறிக்கையொன்றை விடுத்தார். கறுப்பு மக்களின் போராட்டத்தை எதுவித தயக்கமுமின்றி ஆதரித்த முதலாவதும் தனியொருவருமான உலகத் தலைவர் மாஓவேயாவார். நீக்ரோக்களின் போராட்டத்தை ஆதரித்து அவர் முதலாவதாக 1963 ஆகஸ்ட் 8ம் திகதியன்று சரித்திரப் பிரசித்திபெற்ற அறிக்கையொன்றை விடுத்தார். இப்பொழுது இரண்டாவதாக அவர் விடுத்திருக்கும் அறிக்கையை இங்கு பூரணமாகப் பிரசுரிக்கின்றோம்.



சில நாட்களுக்கு முன்னர், ஆபிரிக்க - அமெரிக்க மத குருவான மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளினால் திடீரெனக் கொலை செய்யப்பட்டார். மார்ட்டின் லூதர் கிங் அஹிம்சாவாதத்தின் பிரச்சாரகர் ஆவார்.

ஆயினும், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் அவர்பால் எவ்விதமான சகிப்புத் தன்மையையும் காண்பிக்கவில்லை; ஆனால் எதிர்ப் — புரட்சிப் பலாத்காரத்தைப் பாவித்து அவரை மனதாரப் படுகொலை செய்தனர். அமெரிக்காவிலுள்ள கறுப்பு மக்களின் பரந்த வெகு ஜனங்களுக்கு இது ஆழ்ந்த கருத்துமிக்க பாடமொன்றைக் கற்பித்துள்ளது. அது, அமெரிக்காவிலுள்ள நூற்றுக் கணக்கான நகரங்களில் பலாத்கார அடக்குமுறைக்கு எதிரான அவர்களது போராட்டத்தில் ஒரு புதிய புயலை, அந்நாட்டின் சரித்திரத்திலே முன்பு எப்பொழுதுமே ஏற்பட்டிராத ஒரு புயலைக் கிளப்பிவிட்டுள்ளது. 2 கோடிக்கும் மேற்பட்ட கறுப்பு அமெரிக்கர்களிடையே மறைந்து இடந்த அளப்பரிய வலிமை படைத்த புரட்சிகர சக்தியை அது காண்பிக்கிறது.

அமெரிக்காவில் எழுந்துள்ள ஆபிரிக்க — அமெரிக்கப் போராட்டத்தின் புயல், அமெரிக்க ஏகாதிபத்தியத்தை இப்பொழுது இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் கூட்டு மொத்தமான அரசியல், பொருளாதார நெருக்கடிகளின் தெட்டத் தெளிவான வெளித்தோற்றமாகும். உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் இடையூறுகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு அது கடுமையான அடியைக் கொடுக்கிறது.

ஆபிரிக்க-அமெரிக்கப் போராட்டம் சுதந்திரத்திற்கும் அடிமைத் தளையை அறுத்தெறிவதற்குமாக சுரண்டப்பட்ட ஒடுக்கப்பட்ட கறுப்பு மக்கள் நடத்துகின்றதொரு போராட்டம் மட்டுமல்ல; ஏகபோக முதலாளி வர்க்கத்தின் காட்டுமிராண்டித்தனமான ஆட்சிக்கு எதிராகப் போரிட அமெரிக்காவிலுள்ள சுரண்டப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் யாவரையும் அறைகூவி அழைக்கும் புதியதோர் சங்கநாதமுமாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலகெங்கணுமுள்ள மக்களது போராட்டத்திற்கும், அமெரிக்க ஏகாதிபுத்தியத்திற்கு எதிரான வியட்நாமிய மக்களது போராட்டத்திற்கும் அது பிரம்மாண்டமான உதவியும் உற்சாகமுமாகும். சீன மக்களின் சார்பாக நான், அமெரிக்காவில் கறுப்பு மக்கள் நடத்தும் நியாயமான போராட்டத்திற்கான உறுதியான ஆதரவை இத்தால் தெரிவிக்கின்றேன்.

அமெரிக்காவிலுள்ள இன பாகுபாடு காலனித்துவ, ஏகாதிபத்திய அமைப்பின் ஓர் உற்பத்தியாகும். அமெரிக்காவிலுள்ள கறுப்பு வெகு ஜனங்களுக்கும் அமெரிக்க ஆளும் வட்டாரங்களுக்குமிடையேயுள்ள முரண்பாடு வர்க்க முரண்பாடாகும். அமெரிக்க ஏகபோக முதலாளி வர்க்கத்தின் பிற்போக்கு ஆட்சியைத் தூக்கி எறிவதன் மூலமும் காலனித்துவ, ஏகாதிபத்திய அமைப்பை நாசஞ் செய்வதன் மூலமும் மட்டுமே அமெரிக்காவிலுள்ள கறுப்பு மக்கள் பூரணமாக அடிமைத்தளையை அறுத்தெறிந்த விடுதலையை ஈட்ட முடியும். அமெரிக்காவிலுள்ள கறுப்பு வெகு ஜனங்களும் வெள்ளை உழைக்கும் மக்களின் வெகு ஜனங்களும் போராடுவதற்குப் பொதுவான நலன்களையும் பொதுவான நோக்கங்களையும் கொண்டுள்ளனர். எனவே, ஆபிரிக்க - அமெரிக்கப் போராட்டம் அமெரிக்காவிலுள்ள வெள்ளை உழைக்கும் மக்களதும் முற்போக்காளர்களதும் பெருகிவரும் எண்ணிக்கையினரின் அனுதாபத்தையும் ஆதரவையும் வென்றெடுத்து வருகிறது.

அமெரிக்காவிலுள்ள கறுப்பு மக்களின் போராட்டம் நிச்சயமாக அமெரிக்கத் தொழிலாளர்களது இயக்கத்தோடு சேர்த்து இணைக்கப்படுவதுடன், கடைசியாக அமெரிக்க ஏகபோக முதலாளி வர்க்கத்தின் கொலைபாதக ஆட்சிக்கு முடிவும் கட்டும்.

1963ல் ''அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இன பாகுபாட்டுக்கு எதிரான போராட்டத்தில் ஆபிரிக்க—அமெரிக்கர்களை ஆதரிக்கும் அறிக்கை''யில் ''காலனியாதிக்கத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் கொடிய முறை நீக்ரோக்கள் மீதான அடிமை முறையோடும் நீக்ரோக்களின் வியாபாரத்தோடும் தோன்றி வளர்ச்சியுற்றது; அத்துடன் அது கறுப்பு மக்களின் அடிமைத் தளை சம்பூரணமாக அறுத்தெறியப்படுவதுடன் நிச்சயமாகத் தனது முடிவுக்கு வந்தே தீரும்'' என்று நான் கூறினேன். இக்கருத்தை நான் இன்னும் கொண்டுள்ளேன்.

தற்பொழுது, உலகப் புரட்சி மாபெரும் புது சகாப்தமொன்றை அடைந்துள்ளது. அமெரிக்காவிலுள்ள கறுப்பு மக்களின் அடிமைத் தளையை அறுத்தெறிவதற்கான போராட்டம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலகின் சகல மக்களதும் பொதுப் போராட்டத்தின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகும்; தற்கால உலகப் புரட்சியின் பிரிக்க முடியாத ஒருபாகமாகும். சகல நாடுகளிலுமுள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், புரட்சிகர புத்திஜீவிகள் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போரிடத் தயாராயுள்ள மக்கள் அனைவரையும், அமெரிக்காவிலுள்ள கறுப்பு மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக நடவடிக்கை எடுக்குமாறும் பலமிக்க ஆதரவைப் பரிமாறுமாறும் நான் அறைகூவி அழைக்கின்றேன்! முழு உலக மக்களே, இன்னும் நெருக்கமாக ஐக்கியமுற்று, எமது பொது எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் கூட்டாளிகளையும் எதிர்த்து இடையறுததும் உக்கிரமானதுமான தாக்குதலைத் தொடுங்கள்! காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் மற்றும் சகல சுரண்டல் முறைகள் யாவற்றினதும் தகர்வும், உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் தேசங்களனைத்தினதும் அடிமைத்தளை சம்பூரணமாக அழித்தொழித்தலும் வெகு தூரத்தில் இல்லை என்று திட்டவட்டமாகக் கூற முடியும்.

# ஜோன்சனின் "சமாதானப் பேச்சுக்கள்" வெறும் ஏமாற்று!

அமெரிக்காவின் ''சமாதானப் பேச்சுக்கள்'' என்ற ஏமாற்று வித்தையை அம்பலப்படுத்தியும், வியட்நாமிய, நீக்கிரோ மக்களது போராட்டங்களை ஆதரித்தும் கம்யூனிஸ்ட் எம்.பி. தோழர் எஸ்.டி. பண்டாரநாயக்கா சென்ற 23ம் திகதி பாராளுமன்றத்தில் நிகழ்த்திய பேச்சை இங்கே வெளியிடுகின்றோம்.

பாராளுமன்றத்தில் பிரதமர் செய்த பிரகடனம் ஒன்றில் வடவியட்நாம்மீது குண்டு வீசுவதை நிறுத்தி, வியட்நாம் யுத்தம் பற்றி சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி கூறிய கூற்றை வரவேற்றார்.

வாரங்கள் பல சென்றுவிட்டன. உருப்படியாக எதுவும் நடைபெறவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக எங்குவேண்டுமானாலும் எப்பொழுதுவேண்டுமானாலும் போகத் தயார் என்று கூறிய அமெரிக்க ஜனாதிபதி, இப்போது கூட்டத்தை எங்கு நடத்துவது என்ற சிறு விஷயத்தில் கூட இணங்க மறுக்கின்றார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனின் கூற்று வெறும் ஏமாற்று என்பது இதிலிருந்து தெரிகின்றது. இந்த வருடத் தாக்குதலின் போது அமெரிக்க ஆக்கிரமிப்புத் துருப்புகள் வீரமிக்க வியட்நாம் மக்களின் கையில் படுதோல்வி அடைந்துவிட்டன. இதற்கு மேலாக அமெரிக்காவிற்குள்ளேயே வியட்நாம் யுத்தத்திற்கு எதிராக ஜனாதிபதி ஜோன்சன் பெரும் கண்டனத்திற்கு ஆளாகியுள்ளார். இந்த நிலைமையை சமாளிப்பதற்காக முதலில், வியட்நாமில் இருந்த அமெரிக்க தளபதி வெஸ்ட்மோர்லண்ட்மேல் பழியைப் போட்டு, அவரைத் திருப்பி அழைத்தார். ஆனால் குற்றம் சாட்டுபவர்களின் வாயை அடைக்க அது போதாது என்று தெரிந்ததும், தான் மறுபடியும் ஜனாதிபதிப் போட்டியில் கலந்துகொள்ளவில்லை என்று கூறியதுடன், வடவியட்நாம் மீது குண்டு வீசுவதை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு உடன் படுவதாகக் கூறினார்.

சில நாட்களுக்குள்ளாகவே வட வியட்நாமுக்குமேல் கடுமையான விமானத் தாக்குதல்கள் செய்யப்பட்டதும், மேலும் அதிகமான அமெரிக்க ஆக்கிரமிப்புத் துருப்புகள் வியட்நாமுக்கு அனுப்பப்பட்டதும், மேற்கூறிய நோக்கங்கள் கபடமானவை என்பதை நிரூபிக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதியின் ஆலோசனைகள், சோவியத் திரிபுவாத தலைமைக் கும்பலும் ஏனைய அமெரிக்க அடிவருடிகளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு வக்காலத்து வாங்குவதற்கு சாதகமாக அமையலாம். வியட்நாமில் நடைபெறும் மக்கள் யுத்தத்தின் தீச்சுவாலை அடக்குவதற்கு வீண்முயற்சி எடுக்க உதவலாம். ஆனால் வியட்நாம் பிரச்சினைக்கு அது தீர்வு காண்பதாகாது.

அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள், வெறுமனே நேரங்கடத்தி, குழப்பத்தை உருவாக்கி, வியட்நாமிய மக்களின் வெற்றியைத் தடை செய்ய முயல்கின்றனர். வியட்நாம் யுத்தத்திற்கான ஒரே ஒரு பரிகாரம் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் அடிவருடிகளும் வடவியட்நாம் மேல் குண்டுவீசுவதை பூரணமாக கைவிட்டு தென்வியட்நாமைவிட்டு, தமது சகல துருப்புக்களுடனும், இராணுவத் தளங்களுடனும் வெளியேறி தமது பிரச்சினைகளை தாமே தீர்த்துக் கொள்ள வியட்நாமிய மக்களை அனுமதிப்பதேயாகும். வேறு எந்த வகையிலும் பிரச்சினை தீராது.

இன்று சகல முனைகளிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. வியட்நாம் யுத்த களங்களில் மட்டும் அது தோற்கடிக்கப்படவில்லை. இருதயத்தில் ஈட்டி குத்தப்பட்டதுபோல், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பலவீனம், சக்திவாய்ந்த நீக்ரோ மக்களின் கிளர்ச்சியால் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. இன்று அக்கிளர்ச்சி ஏனைய அமெரிக்க ஏகாதிபத்திய விரோத இயக்கங்களுடன் சேர்ந்து, உலகம் பூராவிலும், உலக மக்களின் முதல் எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கடைசி காலத்தை சுட்டிக் காட்டுகின்றது.

## சபையில் எஸ்.டி.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு வக்காலத்து வாங்கிய, அகிம்சாவாதியான வண. லூதர் கிங் கொலை செய்யப்பட்டது வர்க்க பேதங்கள் உள்ள சமுதாயத்தில் அகிம்சை பயனற்றது என்பதை மறுபடியும் நிரூபித்துள்ளது. வெள்ளை வகுப்புவாதிகளின் எதிர்ப் புரட்சி பலாத்காரத்தை புரட்சிகரப் பலாத்காரத்தினால்தான் முறியடிக்க முடியும் என்பதையும் இச் சம்பவம் நீக்ரோ மக்களுக்கு புரிய வைத்துள்ளது.

எமது நாட்டு புரட்சிகர மக்களின் சார்பில், வீரமிக்க வியட்நாமிய மக்களுக்கும் போராடுகின்ற நீக்ரோ மக்களுக்கும் எமது உறுதியான ஒற்றுமையை பிரகடனம் செய்வதுடன், அமெரிக்க ஏகாதிபத்தியத்தை இறுதியாக தோற்கடிப்பதற்கு சர்வதேச ஐக்கிய முன்னணி ஒன்று அமைப்போம் எனவும் அறைகூவல் விடுக்கின்றேன்.

# மே தினத்தில் சபதமேற்போம்!

மே தினத்தின் வரலாறு போராட்டத்தின் வரலாறு. தொழிலாளி வர்க்க ஐக்கியத்தின் வரலாறு. முதலாளி வர்க்கத்தின் ஆயுதம் தாங்கிய அடக்கு முறைக்கு எதிராக தொழிலாளி வர்க்கம் தனது உரிமைகோரி கிளர்ந் தெழுந்த வரலாறு. முதலாளி வர்க்கத்தின் துப்பாக்கிகளை எதிர்த்து நின்று தொழிலாளி வர்க்கம் இரத்தம் சிந்திய வரலாறு உயிர்த் தியாகம். செய்த வரலாறு.

# மாஓவின் அறைகூவலை ஏற்று புரட்சிப் பாதையில் செல்வோம்

அன்று, 1886 ம் ஆண்டு அமெரிக்காவிலே சிக்காகோ நகரத்திலே, தொழிலாளர்கள் உலகில் முதல் முறையாக எட்டுமணி நேரம் வேலை என்ற உரிமை கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர். அன்றும் முதலாளித்துவ அரசு யந்திரத்தின் துப்பாக்கிகள் தொழிலாளர்களை சுட்டுக் கொன்றன.

1888 ம் ஆண்டு பாரிஸ் நகரில் நடைபெற்ற சகல நாடுகளினதும் சோஷலிஸ்டுக்களின் மாநாட்டில் மே மாதம்1-ம் திகதியை சர்வதேசத் தொழிலாளர் தினமாகக் கொண்டாடுவதென முடிவெடுக்கப் பட்டது.

அன்று முதல் இன்று வரை தொழிலாளி வர்க்கம், முதலாளி வர்க்கத்திற்கெதிராக பல போராட்டங்களை நடத்தி வந்துள்ளது. பல வெற்றிகளையும் பெற்றுள்ளது. முதலாளி வர்க்கத்தை ஆட்சி அதிகாரத்திலிருந்து தூக்கி எறிந்து விட்டு தொழிலாளர்கள், தம தாட்சியையும் நிறுவினர். அக்டோபர் புரட்சிக்குப் பின் முதல் சோஷலிஸ அரசு, சோவியத் யூனியனில் தோன்றியது. பின்பு பல நாடுகளுக்கும் பரவியது. இன்று ஆசியாவின் ஒளிவிளக்காகிய சீனாவில் தொழிலாளிவர்க்க ஆட்சிநிலவுகிறது. இன்றைய சகாப்தத்தின் தலை சிறந்த மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் ஆன தோழர் மா சே-துங் உலகம் பூராவிலும், தேசிய விடுதலைக்காகவும், சோஷலிஸத்திற்காகவும் போராடுகின்ற மக்களுக்கு வழி காட்டுகின்ருர்.

## லெனினின் அறைகூவல்

1904 ம் ஆண்டு மே தினத்தை ஒட்டி விடுக்கப்பட்ட அறை கூவலில் மா மேதை லெனின் பின்வருமாறு கூறுகின்ருர்.

''தொழிலாளத் தோழர்களே! மே தினம் வருகின்றது. சகல நாடுகளினதும் தொழிலாளர்கள் தமது வர்க்க உணர்வுடன் மனித வர்க்கத்தின் சகல விதமான அடக்கு முறைகளுக்கெதிராகவும், மனித வர்க்கத்தை பசி, பட்டினி, கொடுமை ஆகியவற்றிலிருந்து விடுவிப்பதற்காகவும், உணர்வு பெற்றவர்களாய் இத் தினத்தை கொண்டாடி வருகின்றனர்; இந்த மா பெரும் போராட்டத்தில் இரு உலகங்கள் நேருக்கு நேர் மோதுகின்றன. முதலாளித்துவ உலகமும், தொழிலாளி வர்க்க உலகமும் மோதுகின்றன. சுரண்டுகின்ற, அடிமைப் படுத்துகின்ற உலகமும், ஒன்று பட்ட விடுதலைக்கான உலகமும் மோதுகின்றன.

''முதலாளி வர்க்கத்திற்கு எதிராக தொழிலாளி வர்க்கம் நடத்துகின்ற மகத்தான போராட்டத்தில், சகல நாடுகளின் தொழிலாளர்களும் அளப்பரிய தியாகங்களைச் செய்துள்ளனர். சீரான வாழ்வுக்காகவும் உண்மையான சுதந்திரத்திற்காகவும் அவர்கள் பெருமளவு இரத்தம் சிந்தி உள்ளனர். தொழிலாளர்களுக்காக போராடுபவர்கள் தமது அரசாங்கங்களின் அடக்கு முறைகளுக்கு ஆளாகின்றனர். ஆனால் அடக்கு முறைகளுக்கு மத்தியில் உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமை பெரிதும் வளர்ச்சி அடைந்து வருகின்றது. தொழிலாளர்கள் மென்மேலும் கோடிக் கணக்கில் சோஷலிஸக் கட்சிகளில் அணி திரள்கின்றனர். படிப்படியாக முதலாளித்துவ சுரண்டல் காரர்களை எதிர்த்த பூரணமான வெற்றிப் பாதையை நோக்கி முன் செல்கின்றனர்.''

## ஸ்டாலின் பிரகடனம்

1921ம் ஆண்டு தோழர் ஸ்டாலின் விடுத்த மே தின அறை கூவலில் பின்வருமாறு கூறினார்.

''சகல நாடுகளின் தொழிலாளர்களும் இத் தினத்தை மே மாதம் முதல் தேதியில் கொண்டாடுவதென முடிவெடுத்தனர். இயற்கை குளிர்காலத் தூக்கத்திலிருந்து விழித்தெழுகின்ற வேளையில், காடுகளும், மலைகளும் பச்சைப்பசேலெனக் காட்சி அளிக்கும் வேளையில் வயல்களும், தோட்டங்களும், மலர்களினால் தம்மை அலங்கரிக்கையில், கதிரவன் தன் அன்புக்கரங்களை நீட்டுகையில் புதுமை பூத்துக் குலுங்கையிலே, இப் படிப்பட்ட நாளிலே, தொழிலாளி வர்க்கம் மனித வர்க்கத்திற்குத் தென்றலைக் கொண்டுவரும் என்றும், முதலாளித்துவத்தில் இருந்து விடுதலை பெற்று உலக மக்களுக்கு சுதந்திரத்தையும், சோஷலிஸத்தையும் பெற்றுத்தரும் என்றும் உலகறியப் பிரகடனம் செய்வதென முடிவெடுத்துக் கொண்டது.''

### ''நவாலியான்''

மறுபடியும் 1917ல் தோழர் ஸ்டாலின் கூறினார்.

''பேராசை கொண்ட முதலாளித்துவக் கழுகுகள் உலகம் பூராவையும் இரத்தக் களமாக்கி மூன்று வருடங்களாகின்றன. கடந்த மூன்று வருடங்களாக, முன்பு சகோதரர்களாயிருந்த உலக நாடுகளின் தொழிலாளர்கள், இன்று படை வீரர்களின் உடைகளை அணிந்து கொண்டு ஒருவரை ஒருவர் எதிர்த்து, பாட்டாளி வர்க்கத்தின் எதிரிகளைக் கண் குளிர கொன்று குவிக்கின்றனர்.

''மனித வர்க்கம் முழுமையாக அழிக்கப்படுகின்றது. தேசங்கள் அழிக்கப்படுகின்றன. மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். இவையெல்லாம் எதற்காக? ஒரு சில முடிதரித்த அல்லது முடிதரியாத கொள்ளைக்காரர்கள், அன்னிய நாடுகளைக் கொள்ளை அடிப்பதற்காக. யுத்தம் இதற்காகத்தான் நடத்தப் படுகின்றது. யுத்தம் உலகத்தை நெருக்கிப் பிடிக்கத் தொடங்கிவிட்டது.

''ஐரோப்பிய மக்கள் இனி மேலும் இதனைத் தாங்கமாட்டாது, முதலாளித்துவத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்றனர். தொழிலாளர்களைப் பிரித்துவைக்கும் சுவரை ருஷ்யப் புரட்சிதான் முதலில் உடைத்தெறிந்துள்ளது. உலகம் பூராவிலும் குழப்பமடைந்த இவ் வேளையில் ருஷ்யத் தொழிலாளர்கள், ''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'' என்ற மறந்து போயிருந்த கோஷத்தை மறுபடியும் கிளப்பியுள்ளனர். ருஷ்யப் புரட்சியின் இடி முழக்கத்தில், மேற்கத்திய நாடுகளின் தொழிலாளர்களும் கண் விழித்தெழுகின்றனர்.''

## சோஷலிஸத்திற்கான போராட்டம்

இன்று சீனாவில் நடைபெறுகின்ற மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் இடி முழக்கத்திலே ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்கள், விழித்தெழுந்து தேசிய விடுதலைக்காகவும், சோஷலிஸத்திற்காகவும்ஆயுதம் தாங்கிப்போராட முன்வந்துள்ளனர்.

ஏகாதிபத்தியத்தின் தலைநகரான அமெரிக்காவில் நீக்ரோ மக்களின் புரட்சிக் குரல் உலகெங்கும் கேட்கின்றது. ''மனித வர்க்கம் முழுவதையும் விடுவிப்பதன் மூலம் தான் பாட்டாளி வர்க்கம் தன்னை விடுவிக்க முடியும்'' என்ற கார்ல்மார்க்ஸின் போதனைக்கு உயிரூட்டி இன்று உலக மக்கள் யாவருக்கும் வழி காட்டுகின்ருர் தோழர் மாசே துங். தோழர் மாசே-துங் தலைமையில் இன்று சீனாவில் நடைபெறுகின்ற மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி, முதலாளித்துவப் பாதையை எடுக்க முயன்ற கட்சியின் உயர் மட்ட நபர்களை அம்பலப்படுத்தி அமெரிக்க, மற்றும் ஏகாதிபத்திய வாதிகளை கதிகலங்கச் செய்து வழிகின்றது. தேசிய விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும், சோஷலிஸத்திற்காகவும் போராடுகின்ற உலக மக்களுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றது.

1886-ம் ஆண்டு அமெரிக்காவில் தோன்றிய தொழிலாளர் இயக்கம் இன்று உலகம் பரந்த இயக்கமாக பல வெற்றிகளை ஈட்டியுள்ளதுடன் இன்று சக்திவாய்ந்த ஏகாதிபத்திய வல்லரசாக உள்ள அமெரிக்காவையே கதிகலங்கச் செய்துள்ளது. தோழர் மா சே—துங் அமெரிக்க நீக்ரோ மக்களின் போராட்டத்தை ஆதரித்து அண்மையில் வெளியிட்ட அறைகூவலில் பின்வருமாறு குறிப்பிடுகின்ருர்.

''கொடிய முறையான காலனி ஆதிக்கமும ஏகாதிபத்தியமும் நீக்ரோக்களை அடிமைகளாக்கியதிலிருந்து வர்த்தகம் செய்ததில் இருந்தும் தோன்றி வளர்ந்தது. கறுப்பு மனிதர்களின் விமோசனத்துடன் அது நிச்சயமாக ஒழிந்து போகும்'' என்று நான் கூறினேன். இன்றும் நான் அதனையே கூறுகின்றேன்.

''இன்று உலகப் புரட்சி புதிய ஓர் மகத்தான சகாப்தத்தை அடைந்துள்ளது; அமெரிக்காவில் உள்ள கறுப்பு மக்களின் விமோசனத்திற்கான போராட்டம், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான உலக மக்கள் யாவரினதும் போராட்டத்தில் ஓர் பிரிக்க முடியாத அங்கம், தற்கால உலகப் புரட்சியின் ஓர் அங்கம். சகல நாடுகளினதும் தொழிலாளர்களையும் விவசாயிகளையும், புரட்சிகர புத்திஜீவிகளையும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட விரும்பும் சகலரையும் அறைகூவி அழைக்கின்றேன். அமெரிக்காவின் கறுப்பு மக்களுக்கு உறுதியான ஆதரவளிக்க நடவடிக்கை எடுங்கள்! உலக மக்கள் யாவரும் மேலும் உறுதியாக ஒன்றுபடுங்கள்! எமது பொது எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளையும் எதிர்த்து திடமான துரிதமான தாக்குதலை நடத்துங்கள்.

''காலனி ஆதிக்கம், ஏகாதிபத்தியம் மற்றும் சகல வித சுரண்டல் பூரணமாக ஒழிக்கப்படுகின்ற, உலகின் சகல ஒடுக்கப்பட்ட மக்களினதும், தேசங்களினதும் பூரண விமோசனம் தோன்றுகின்ற காலம் வெகுதூரத்திலில்லை என்று கூறமுடியும்.''

இந்த வருட மேதினத்தின் போது தோழர் மாசே-துங்கினது இந்த அறைகூவலை நாம் ஏற்றுக்கொள்வதென சபதமெடுப்போம். வரண்ட பாராளுமன்றப் பாதையை நிராகரிப்போம். தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில், தொழிலாள- விவசாய ஒற்றுமையின் அடிப்படையில் சகல புரட்சிகர சக்திகளையும் அணிதிரட்டி, ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும், யு. என். பி. யையும் அதன் பிற்போக்கு சகாக்களையும் தோற்கடிப்பதென சபதமேற்போம்.



கொழும்பில் புரட்சிகர மே தினம்

## நம்மைச் சுற்றி

நவம்

# 'ஹோப்'பிற்கென ஒரு தத்துவம்!

அமெரிக்கா, அகில உலகமும் ஆதிக்கம் செலுத்த வேண்டும்; ஏகாதிபத்தியத்தின் ஏகபோக நாயகனாக விளங்கும் அமெரிக்காவை, வாழ்வற்று, வறுமைமிஞ்சி, விடுதலையின்றி வாழும் நாடுகளின் பொதுமக்கள் போற்றிப் புகழவேண்டும்; தமது இரட்சகனாக கருத வேண்டும்; இந்த அபிப்பிராயத்தை நேரடியாக மக்கள் மனதிற் பதிப்பதற்கு யாது செய்யலாம், இக் குள்ளநரிச் சிந்தனையின் விளைவே 1958ல் ஐசன்ஹோவரால் உருவாக்கப்பட்ட 'ஹோப்' வைத்தியத் திட்டம். வறுமையால் வாடித்தவித்து நோய்வாய்ப்பட்ட மக்களுக்கு பிணிதீர்க்கும் இரட்சகனாக உருவெடுத்தால் மக்கள் ''ஹோப்'' வைத்தியக் கப்பலுக்கு காட்டும் அன்பும் மரியாதையும், தம்மையும் அறியாமல் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சிரம்தாழ்த்தி துதி செய்யத்தூண்டும்; இதைக் கொண்டு, தொடர்ந்தும் இந் நாடுகளை நாசூக்காகவும், லாவகமாகவும் சுரண்டலாம். 'ஹோப்'' இன் அரசியற் தத்துவம் இதுவே! ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நினைப்பது போல் யாவும் சுலபமாக நடப்பதில்லையே. உலக அரங்கில் அமெரிக்காவின் சாயம் வெளுப்பதை உள்நாட்டு முதலாளி வர்க்கமும் அவர்களின் பத்திரிகைகளும் உணராததொன்றல்ல. அதிசயக் கப்பல், கடவுளே கப்பல் உருவில் வருகிறார் என்றெல்லாம் புகழ்ந்தாலும் மக்கள் மசியமாட்டார்கள் என்று தெரியும் இவர்களுக்கு. இதனால், ஒரு பத்திரிகை வானளாவ புகழ, ஒன்று 'நடுநிலை வேஷம்' போட மற்றது ஓரளவு தாக்குவதாகப் பாசாங்கு செய்ய ஹோப்பிரான் எழுந்தருளியுள்ளார்.

ஹோப் வரும் வேளையில் அமெரிக்காவின் செல்வாக்கு ஓரளவு மங்கி உள்ளதாம் இன்று U.S.A. என்பதை United States of Assasination (அதாவது கொலைகார ஐக்கிய நாடுகள்) என்று கூறலாம் போலத் தெரிகிறதாம்; இந் நிலையில் ஹோப்பில் வரும் அமெரிக்கர்கள் ஓரளவு அடக்கத்துடன் நடந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறாராம். இவ்வாறு டெயிலிமிரரின் தலையங்க வீரர் எழுதி தனது ''சுதந்திரத்தையும் நடுவு நிலையையும் மக்களுக்குக் காட்டுகிறார்'' இதற்கெல்லாம் மக்கள் மயங்கப் போவதில்லை இன்னும் பத்து மாதத்தில் ஹோப்பின் 'சேவைகளை' பொது மக்கள் நேரிற்கண்டு கொள்வார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு ''ஹோப்'' சென்றபோது, துறைமுகங்களில் 'யாங்கியே திரும்பிப்போ' என்ற கோஷத்துடன் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களை கண்டு கலங்கிய, ஹோப் அதிகாரிகளுக்கு 'நாமிருக்கப்பயம் ஏன்' என்று அபயகரம் கொடுத்து அழைத்துவந்த யூதர் ஆட்சி இதனால் மக்களின் வெறுப்பை மேலும் சம்பாதித்துக் கொண்டது. அந்த வகையில் நாம் ஹோப்பை வாழ்த்தலாம். சீரழியும் முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் தாம் வாழ்வதற்கு எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும், அவற்றின் அழிவுக்கு மேலும் வகை செய்கின்றதெனும் சமூக வரலாற்று உண்மைக்கு ஹோப் ஒரு சான்று!

# மார்க்சிஸத் "தந்தை" க்கு கிழடு தட்டிவிட்டது

★

### ஐ. ஜி. பியின் கண்டுபிடிப்பு!

பொலிஸ் இலாகா முழுவதும் ஊழல் நிரம்பி விட்டதாம் 20சதவீதமான பொலிஸ் படையினர் முழுவதாக கைலஞ்சம் வாங்குகின்றனராம்; இப்போதுதான் இதைக் கேள்விப் பட்டவராக ஐ. ஜி. பி. (பொலிஸ் தலைவர்) பதைபதைக்கின்றார்; ஊரறிந்த இரகசியத்தை இன்றுதான் கண்டுபிடித்தது போல் கதறும் ஐ. ஜி. பி. யின் பம்மாத்தும் பொலிஸ் இலாகாவின் சீர்கெட்ட நிர்வாகத்தைக் காட்டுகின்றது. இதுபற்றி ஒரு பொலிஸ் உயர்தர அதிகாரி நண்பர் ஒருவருடன் சதைத்த பொழுது சில தகவல்கள் கிடைத்தன. சாதாரண பொலிஸ்காரரின் ஊதியமும் வாழ்க்கை நிலையும் மிக மோசமாக இருப்பது லஞ்சம் வாங்குவதற்குத் தூண்டுதலாக இருப்பது ஒரு புறம் இருக்க, இவர்களுக்கு மேல் உள்ள பெரிய அதிகாரிகளின் நடத்தையே மிகத் தூண்டுதலாக உள்ளதாம் இவ்வதிகாரிகள் (இன்ஸ்பெக்டர்கள், ஏ. எஸ். பி, எஸ். பிக்கள்) நடாத்தும் தாம் தூம் என்ற திமிரான வாழ்வையும், அதற்கு அவர்களின் சம்பளம் ஒரு மூலைக்கும் போதாதென்பதையும் ஒவ்வொரு பொலிஸ்காரனும் அன்றாடம் கண்டு, புரிந்து கொண்ட விஷயமே; இன்ஸ்பெக்டர்கள் ஒரு புதிய ஸ்டேசனுக்கு மாற்றலாகிச் சென்றவுடன் முதல் வேலையாக அங்குள்ள பெரும் புள்ளிகளை வீட்டில் போய் தரிசனம் பண்ண வேண்டுமாம்! இவர்கள் பெரிய மனுஷர் வேஷத்துடன் காணப்படும் உலுத்த பேர்வழிகளே. வெளியில் இவர்கள் மத முதல்வர்களாகவும், முதலியார், முகாந்திரம் போன்ற கௌரவ பட்டங்களைப் பெற்றவராய் காணப்படினும், உண்மையில் தமது கள்ள நடவடிக்கைகளுக்கு பொலிசின் உதவியை நாடி நிற்பவர்கள். ஏழைகள் வாழும் சேரிக் காணிகள், கசிப்பு வியாபாரம், கள்ளக் கடத்தல் போன்றவை இப் பெரியவர்களின் கைக்குள்ளேயே உள்ளன. இவர்களைத் தரிசிக்க ஓர் இன்ஸ்பெக்டர் விரும்பாவிடில், சந்திக்காவிடில் இன்ஸ்பெக்டருக்கு ஏற்படும் 'நஷ்டத்தையும்' தீங்குகளையும் கூறி வெருட்டுவதற்கென தூதுவர்கள் அனுப்பப்படுவர். இதற்கும் இன்ஸ்பெக்டர் மசியாமல் தனது கடமையே 'கண்ணுயிருப்பின், செய்யாத குற்றத்துக்கு தண்டனையாக இடமாற்றமும், பதவி உயர்வுக்கு முட்டுக் கட்டையும் இடப்படும், இச் சூழலில் எவ்வாறு ஒருவன் நேர்மையாக இருப்பது எனக் கூறி அங்கலாய்த்தார் மனிதாபிமான உணர்ச்சி நிறைந்த இந்த இளம் உயர்தர பொலிஸ் அதிகாரி!

அவ்வப்போது எமது பூர்ஷுவா பத்திரிகைகளும் இது பற்றி எழுதத் தவறுவதில்லை. எடுத்துக் காட்டாக சென்ற வாரம் டெயிலி மிரர் இது பற்றி தீட்டிய தலையங்கத்தில் பின்வருமாறு கூறுகின்றது ''இவை எல்லாம் (அதாவது ஊழல்கள்) வாக்குச் சீட்டுகளின் மோகம் பிடித்தலையும் அரசியல் வாதிகளால் தோற்றுவிக்கப்பட்ட புதிய கால கட்டத்தில் காணப்படும் குணக்குறிகள்'' என மழுப்புகின்றது. ஒவ்வொரு பத்திரிகையும் இவ்வாறு மழுப்பு வேலையில் இறங்குவதும் திட்டமிட்டே செயல்படுவதொன்றாகும். தாங்கள் இவ்வூழல்களை ஒழித்துக்கட்டுவதில் எவ்வளவு முழுமூச்சுடன் பாடுபடுகின்றோம் பார்த்தீர்களா, எமக்கு உள்ள பத்திரிகைச் சுதந்தரம் அல்லவா இவ்வாறு எழுதுகின்றது. நல்லவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பினால் இப் பிரச்சினைகள் யாவும் மாயமாய் மறைந்துவிடும் என்றெல்லாம் கூப்பாடு போடுகின்றார்கள். ஆனால் மக்கள் இவற்றைக் கேட்டு மயங்கும் காலம் மலையேறி விட்டது. முதலாளித்துவ அமைப்பில் காணப்படும் சீரழிவுகளில், ஊழல்களும் ஒன்று என்பதை இன்ஸ்பெக்டர்களும் பொலிஸ்கார ஊழியர்களும் படிப் படியாக அறிகின்றார்கள்.

ஏன் இந்த ஊழல் என்ற கேள்வி மக்களின் மனதில் தோன்றி, அதற்கான சரியான விளக்கத்தைத்தேடி அலைய முற்படுவது முதலாளித்துவத்தின் அழிவை நோக்கி புரட்சி நடைபெறுவதற்கான முதற் கட்டமே!

★

### டட்லி மாமாவின் சோஷலிஸம்

''இலங்கை ஒரு விவசாய நாடு'' பராக்கிரமபாகு காலத்தில் கிழக்கு நாடுகளின் நெற் களஞ்சியம் இலங்கை, தொடர்ந்தும் இவ்வாறே இருத்தல் வேண்டும்'' யார் இக் கோஷத்தை எழுப்புவது? தமது பொருட்களை இங்கு திணிக்கவும், நாட்டைச் சுரண்டவும் முற்படும் ஏகாதிபத்திய நாடுகளும் அவற்றின் உள்ளூர் தரகர் மாமாக்களான யூ. என். பி. கூட்டமுமே? அரை குறையாகத் தொடங்கப்பட்ட உள்ளூர் கைத்தொழில்களையும் படிப் படியாக நசுக்குவதே ஏகாதிபத்தியத்தின் காவலனான உலக வங்கியின் விருப்பு. இப் பணியை தலைமேற் கொண்டு டட்லி மாமா செய்கின்றார். ஒரு புறம் கமராவும் சுங்கானுமாக தொழிற் சாலைகளைப் பார்வையிடுகின்றார். மறு புறம் கைத்தொழில்களுக்கு வேண்டிய தளபாடங்கள் கருவிகள் வாங்குவதற்கான அந்நிய செலாவணியை ஆண்டுதோறும் 25 வீதத்தால் வெட்டுகின்றார். இதை நாம் மட்டும் சொல்லவில்லை. எமக்கு ஏற்கனவே தெரிந்ததே; ஆனால் இன்று கொழுத்த முதலாளி வர்க்கத்துக் கைத்தொழில் அதிபர்களே டட்லி மாமாவின் செய்கையைக் கண்டு கொதிக்கின்றார்கள். எமது தொழில்கள் பெருகவும் பெரும் பணமீட்டவும் யூ. என். பி. இடம் கொடுக்குமென எதிர்பார்த்த இத் தொழிலதிபர்கள், தம்மையும் உதறித் தள்ளிவிட்டு அந்நிய முதலாளித்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் ஏவல் புரியவேண்டி ஏற்பட்டுவிட்டதே யூதர் ஆட்சி என்பது அவர்கள் கவலை! அதாவது உள் நாட்டு முதலாளித்துவத்துக்கும் யூதர் ஆட்சிக்கும் பூசலும் முரண்பாடும் தோன்றுவதை இன்று காண்கிறோம். இலங்கையை இலத்தீன் அமெரிக்க நாடுகள் போலாக்கி, தங்களின் யந்திர உற்பத்திப் பொருட்களை எமது தலையில் சுமத்தி, ஒரு முழு காலனித்துவ நாடாக்குவதற்குத் திட்டமிட்ட சதி யூதர் ஆட்சி மூலம் நடைபெறுகின்றது. இதனாலேயே ஏதேனும் அரை குறை யந்திர உற்பத்திகள் ஆரம்பித்தவுடனேயே உலக வங்கி ஐயோ போச்சே, விசர் வேலை என ஒப்பாரிவைக்கத் தொடங்குகின்றது,

இந்த லக்ஷணத்தில், டட்லி மாமா பேசும் சுதந்திரம், சுகம், சோஷலிஸம் எல்லாம் ஏகாதிபத்தியத்தின் சுரண்டும் சுதந்திரத்தையும், சுகபோகத்தையும் பாதுகாக்கவே; இதற்கிடையில் பம்மாத்துக் காட்டுவதற்காக மக்களின் மொழியையும், மதத்தையும் கலாச்சாரத்தையும் பேணுவது தம் கடமை என கோஷமிடுகிறார் தரகர் டட்லி.

★

# தொழிலதிபர்களின் கொள்ளை கண்டு "சகிக்காத" லேக் ஹவுஸ்

### ஏரிக் கரையின் முதலைக் கண்ணீர்

உள்ளூர் கைத்தொழிலதிபர்களை நினைக்கும் போது அண்மையில் ஒப்சேவர் ''இவர்களைத் தாக்கி'' மக்களுக்காக விட்ட முதலைக் கண்ணீர் நினைவுக்கு வருகின்றது. உள்ளூர் முதலாளிகளின் கொடுமை சகிக்க முடியவில்லையாம். அவர்களின் ஈவிரக்க மற்ற சுரண்டல், மனச்சாட்சிக் கொவ்வாத இலாப கொள்கை பாதுகாத்துக் கொடுக்கப்பட்ட ஏகபோக சந்தை, வருமான வரிச்சலுகைகள் யாவையும் பற்றி ''ஒப்சேவர் விளாசித் தள்ளியது.'' இம் முதலாளிகள் தொழிலதிபர்கள் 25 வீதம் அல்லது 50 வீதம் லாபம் வைத்தால் அது நியாயமாக இருக்குமாம். ஆனால் இவர்களின் இலக்கு 400 அல்லது 500 சதவீதம் லாப வேட்டையாம்! இதைக் கேட்பார் மேய்ப்பார் இல்லையா

15-ம் பக்கம் பார்க்க

# மாஓவை நோக்கி மனதைத் திருப்பும் மேற்கத்திய இளம் சந்ததியினர்

**உலக வலம்**

★

**உஸ்மான்**

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்றொரு வாசகம் உண்டு. உருவத்தில் ஒரு பொருள் சிறியதாகத் தெரிந்தாலும் அதனுள் மகத்தான சக்தி அடங்கியிருக்கும் என்பது வாசகத்தின் பொருள். இரண்டு வருஷங்களுக்கு முன்னர் சிகப்பு அட்டை கொண்ட சிறிய நூலொன்று பீகிங் நகரத்திலிருந்து— உலகப் புரட்சியின் மைய நிலையத்திலிருந்து— வெளி வந்தது. கையடக்கமான சிறிய அந்த நூல் தலைவர் மா சே-துங் மேற்கோள்கள்.

ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கும் திரிபுவாதத்தையும் வரட்டுத் தத்துவ வாதத்தையும் எதிர்ப்பதற்கும் ஒரு சக்தி மிக்க தத்துவார்த்த ஆயுதமாயும், மக்களது எல்லையற்ற பலத்தின் தோற்றுவாயாகவும் அளவற்ற ஆற்றல் வாய்ந்த ஒரு ஆத்மீக அணுகுண்டாகவும் அச் சிறு நூல் விளங்குகிறது என்னும் உண்மையை உலகெங்கிலுமுள்ள மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகள் உடனேயேகண்டுகொண்டனர் இதனைக் கண்டு சன்னி கண்ட சோவியத் திரிபுவாதிகள் ''திசை தவறிய செங்காவலர்களின் பைபிள்'' என்று அந்த மகத்தான நூலை வர்ணித்தனர். திரிபுவாதிகளை பின்பற்றி அவர்களின் சகாக்களான ஏகாதிபத்தியவாதிகளும் சந்திரனைப் பார்ப்பது நாய்கள் குரைப்பது போல மேற்கோள்கள் நூலை எள்ளி நகையாடினர்.

ஈராண்டுக் காலத்தில் அந் நூல் உலகையே வலம் வந்து பிற்போக்கு வாதிகளை ஒரு கலக்குக் கலக்கியுள்ளது. சென்ற வருடம் அதிகம் விற்பனையாகிய பிரசுரம் என்று மன உளைச்சலுடன் சமீபத்தில் ஒரு பிரபல அமெரிக்க சஞ்சிகை எழுதியிருந்தது. ''திசை தவறிய செங்காவலர்களுக்கான பால பாடம்'' என்று திரிபுவாதிகள் பிதற்றிய பெருந் தத்துவ ஆயுதமாகிய அந் நூல், உண்மையில், திக்கு திசை தெரியாது, மது, மயக்க மருந்து, லாகிரி வஸ்து, யோகாசனம் ஆகிய விஷயங்களின் துணையுடன் உலகை மறக்க முனையும் இலட்சக் கணக்கான அமெரிக்க—ஐரோப்பிய இளைஞர்களுக்கு ஒளிமயமான உலகைக் காட்டியுள்ளது என்ற உண்மையை திரிபுவாதிகள் உணரமாட்டார்கள்.

கடந்த சில காலமாகச் ''செல்வம் கொழிக்கும்'' நாடுகளில் பலவிதமான ஜனநாயக இயக்கங்களில் யுவர்களும் யுவதிகளும் குதித்துள்ளனர் என்றால் அதற்குத் தோழர் மாஓவின் குரலும் ஒரு காரணமாகும். மேற்கு நாடுகளில் இளந்தலைமுறையினர் மனநோய் பிடித்தவர்கள் என்றும் மிதமிஞ்சிய ''சுதந்திரம்'' அனுபவிப்பவர்கள் என்றும் பால் விவகாரத்தால் பாழாய்ப் போனவர்கள் என்றும் ''பெரியவர்கள்'' கண்டித்துச் செய்வதறியாது தலையிலடித்துக் கொண்டிருக்கும் பொழுது மாஓவின் குரல் —மேற்கோள்— கேட்டது.

''உலகம் உங்களுடையதும் எங்களுடையதும் தான்; ஆனால் இறுதி ஆராய்வில் அது உங்களுடையதே. இளைஞராகிய நீங்கள் வீறும் ஜீவத்துடிப்பும் நிரம்பி, காலை எட்டு, ஒன்பது மணிச் சூரியனைப் போல வாழ்வின் வசந்தத்திலே உள்ளவர்கள். எமது நன்னம்பிக்கை உங்களில் தான் வைக்கப் பட்டுள்ளது. உலகம் உங்களுக்குச் சொந்தம்; எதிர்காலம் உங்களுக்குச் சொந்தம்.''

சமீபத்தில் அமெரிக்கப் பத்திரிகை நிருபர் ஒருவருக்குப் பேட்டியளித்த செக்கோஸ்லாவிய நாட்டுப் பேராசிரியர் ஒருவர், எமது இளைஞர்களுக்குப் 'போர்' அடிக்கிறது, (அலுப்புத் தட்டுகிறது) அதுதான் மேனாட்டு நூல்களைப் பெருமளவில் நாடுகின்றனர்'' என்றாராம். மேனாட்டுத் துடிப்புள்ள வாலிபர்கள் மா சே—துங் சிந்தனையை நாடும் பொழுது திரிபுவாத நாட்டு இளைஞர்கள் என்ன செய்வார்களோ?

◎

வியட்நாம் மீது சுட்டுப் பாடான குண்டுவீச்சை நடத்துவதாகவும், தான் ஜனாதிபதிப் போட்டிக்கு முன் வரப் போவதில்லை என்றும் அறிவித்து ''ஸ்டண்ட்'' நாடகம் ஆடும் ஜோன்சன் அண்மையில் நூலாசிரியனாக வேடந் தாங்கியுள்ளான். இளைப்பாற எண்ணும் ஜோன்சன் பெயரை நிலை நிறுத்துமாறு பிரபல நூல் நிலையம் ஒன்று, தலைவர் ஜோன்சன் மேற்கோள்கள் என்ற பிரசுரத்தைச் சிவப்பு மேலட்டையுடன் வெளியிட்டுள்ளது. கென்னடியாவது கற்றோரை மயக்கும் வகையில் ''பொன்மொழிகள்'' கூறினான். பாவம் டெக்ஸாஸ் கோவலனை ஜோன்சன் மாடு பிடிப்பதுபோல் நாடு பிடிக்கும் ஏகாதிபத்திய வார்த்தைகளை அன்றி வேறெதையும் அறியாதவன். தலைவர் மாஓவின் மேற்கோள்களின் அபரிதமான செல்வாக்கைப் பார்த்து விட்டுத் தானும் தன் பொல்லா வார்த்தைகளைத் தொகுப்பித்துள்ளான் ஜோன்சன்.

## கக்கியதை விழுங்க அமெரிக்கப் பத்திரிகைகளின் அமர்க்களம்

ஆனால், அமெரிக்க மக்களோ பொய்யன், கொலைகாரன் என்று நன்கு கண்டு கொண்ட பின் உலகமா யுத்த வெறியன் ஜோன்சனின் மேற்கோள்களை மதிக்கப் போகிறது?

உதாரணமாகச் சென்ற வாரம் அமெரிக்காவிலுள்ள பெரு முதலாளித்துவப் பத்திரிகையாசிரியர்களே கசப்பான ஓர் உண்மையை ஒப்புக் கொண்டுள்ளனர். வட கொரியா கடற்கரையில் வேவு பார்த்த ''பியூப்லோ'' என்ற அமெரிக்க நாசகாரிக் கப்பல் பிடிபட்டபொழுது, அது நடுக்கடலில் நடத்தப்பட்ட அடாத செயல் என்று ஜோன்சன் கொதித்தான். ஆயினும் உலக மக்கள் உண்மையைத் தாமாகவே இனங்கண்டு கொண்டனர். டொங்கின் வளைகுடாவில் அமெரிக்கக் கப்பல் தாக்கப்பட்டதாகக் கூறிப் புனைந்து, வியட்நாம் மீது குண்டுத் தாக்குதலை ஆரம்பித்ததை உலகம் அறிந்ததுதானே? ஜோன்சனும் வெளிநாட்டு அமைச்சும் கூறிய முழுப் பொய்யையே அமெரிக்கப் பத்திரிகைகளும் பிரசுரித்துப் பிரமாதப்படுத்தின. திரிபுவாதிகளும் அதை நம்பி இரு நாடுகளும் பேச்சு வார்த்தைகள் மூலம் சுமுகமாய்ப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று புத்திமதி கூறினர்.

## கொலைகார ஜோன்சனின் ''புகழ்'' நாட்ட ஒருமேற்கோள்!

சென்ற வாரம் குட்டு வெளிப்பட்டது. கப்பலின் பதிவுப் புத்தகத்தின் தாள்கள் படமாக்கப்பட்டு அமெரிக்கச் செய்தித் தாபனம் ஒன்றின் மூலம் காட்டப்பட்டது. அதன்படி உளவுக் கப்பல் கொரியாக் கடலில் பிடிபட்டது ஊர்ஜிதமானது.

தம்மையும் தமது பத்திரிகைகளின் ''மானத்தையும்'' விற்பனையையும் பாதுகாப்பதற்காக பத்திரிகையாளர் ''ஜோன்சன் பொய்யன்'' என்று வெளிப்படையாகக் கண்டித்துள்ளனர். தாம் நல்லவர்கள் போலவும், வேண்டுமென்றே ஜோன்சன் நிர்வாகம் கூறிய பச்சைப் பொய்யை நம்பி ஏமாந்ததாகவும் அப்பத்திரிகையாளர்கள் இப்போது கூறுகின்றனர். யாரை யார் ஏமாற்றுவது? எல்லாருமாக உலகத்தை ஏமாற்றப் பார்த்தார்கள். குட்டு வெளிப்பட்டதும் நான் முந்தி நீ முந்தி என்று தப்பிக்கொள்ளப் பார்க்கின்றனர். பிக்ஸ் வளைகுடாச் சம்பவத்திலிருந்து (கியூபா மீதான தோல்வி கண்ட படையெடுப்பு) பியூப்லோ விவகாரம் வரை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பையும் அதிகாரந் தலைக்கேறிய அசட்டுத்தனத்தையுமே காட்டுகின்றன. இவற்றைத்தான் ஜோன்சன் மேற்கோள்கள் காட்டும்.

◎

சமீபத்தில் யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோ ஜப்பான் முதலிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ள, கொஸிஜின் பாகிஸ்தான், ஈரான் முதலிய நாடுகளுக்கும் புது டில்லிக்கும் விஜயம் செய்தார். சாந்தியும் சமாதானமும் போதிக்கும் சமயத் துறவிகளைப் போல போகும் இடமெல்லாம் சமாதான சக ஜீவனம், பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தைகளினால் தீர்த்தல் என்பவற்றை உபதேசித்துள்ளனர்.

## கொஸிஜின்-டிட்டோ எதிர்ப்-புரட்சி சுற்றுலா

உலகின் பல்வேறு பகுதிகளில் முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் விளைவால் போர்கள் மூளுகின்றன. தேசிய இன உரிமைகள், சமூக உரிமைகள, தேச நலன் முதலியன பாதிக்கப் படுகின்றன. பலமே வெல்லும் என்ற நம்பிக்கையுடன் ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றன. இத்தகைய தகராறுகளிலெல்லாம் ஒரு பக்கம் நீதியும், மறுபக்கம் அநீதியும் இருக்கின்றன: காஷ்மீர் மக்களின் அடிப்படை உரிமைகளைத் துச்சமென மதித்து அப்பிரதேசத்தை இந்தியா ஆக்கிரமித்துள்ளபோது நீதி காஷ்மீரிகள் பக்கமும், அநீதி இந்தியா பக்கமும் இருக்கிறது. அமெரிக்காபிரித்தானியாவின் பலத்துடன், சோவியத் நம்பிக்கைத் துரோகத்தைப் பயன் படுத்தி இஸ்ரேல், பாரம்பரியமாக வாழ்ந்து வரும் அராபிய மக்களைத் தாக்கி, வம்புச் சண்டை புரியும் பொழுது நியாயம் அராபியர் தரப்பிலும் அநியாயம் யூதர்கள் பக்கமும் உள்ளது. கேட்கக் கேள்வியின்றி அழையா உதவியாளராக அமெரிக்கர் வியட்நாமில் நுழைந்து ஆக்ரமிப்பு நடத்தும் பொழுது தர்மம் வியட்நாமிய விடுதலை வீரர் பக்கமும், அதர்மம் ஏகாதிபத்தியவாதிகள் பக்கமும் இருக்கிறது. இது போலவே உலகெங்கும், எங்கெல்லாம் தர்ம— அதர்ம யுத்தம் நடக்கும் பொழுது இரு தரப்பினரையும் ஒரே நிலையில் கொண்டு பரஸ்பரம் விட்டுக் கொடுத்து சமாதானமாகப் பேச்சுவார்த்தைகளினால் சண்டையைத் தீர்த்துக் கொள்ளுங்கள் என்று கொஸிஜின், டிட்டோ கும்பல் கூறுவதைத்தான் ஜோன்சன், வில்சன், சாட்டோ முதலியோரும் கூறுகின்றனர்.

உதாரணமாக அமெரிக்கா அத்துமீறி அநியாயமாக அமெரிக்க ஆக்கிரமிப்பு நடத்துகையில் வியட்நாமியர் 'பரஸ்பரம்' விட்டுக் கொடுக்க என்ன இருக்கிறது? திரிபுவாதத்தின் மிகத்தாழ்ந்த சீரழிவு நிலை இதுதான். நன்மை தீமைகளுக்குக்கூட வேறுபாடு காண முடியாதுள்ளது. பழங்கால ஞானியொருவன் சொன்னான், ''மற்றொருவரை ஆக்கிரமித்து அடக்க முனையும் யுத்தம் அநாகரிகமானது. தனது தாயகத்தைக் காக்கும் யுத்தம் புனிதமானது.''

இத்தகைய மனித நீதியை மார்க்சிஸ—லெனினிஸ வடிவில் ஆணித்தரமாக, தோழர் மா ஓ கூறியுள்ளார்.

''யுத்தங்கள் நீதியானவை, அநீதியானவை என இரு வகையாக வகுக்கப் பட்டுள்ளதை வரலாறு எமக்குக் காட்டுகின்றது...., கம்யூனிஸ்டுகளாகிய நாம் நீதியான யுத்தங்களை எதிர்க்காதிருப்பது மட்டுமல்ல, அவற்றில் தீவிரமாகப் பங்கு பற்றுகிறோம்''

அஹிம்சையைப்பேசிய வண. மார்ட்டின் லூதர் கிங் கொல்லப் பட்டது எதைக் காட்டுகிறது? ஏகாதிபத்திய வாதிகள் 'பரஸ்பரம்' விட்டுக் கொடுத்துப் பேச்சு வார்த்தைகளினால் பிரச்சினைகளைத் தீர்க்க மாட்டார்கள். சோவியத் யூனியன் 'பரஸ்பரம்' அமெரிக்காவுடன் சேர்ந்து விட்டுக் கொடுத்தும், சீன எதிர்ப்பை முன்னின்று நடத்தியும், ஜெனீவாவில் பேச்சு வார்த்தைகள் ஏற்படுத்தியும், கண்ட பயன் என்ன? கிழக்கு ஐரோப்பிய சோஷலிஸ்டு நாடுகளில் சி. ஐ. ஏ. தோற்றுவித்த எதிர்ப் புரட்சிகள் தான். இன்று போலந்தில் நடப்பது, நாளை சோவியத் யூனியனில் நடக்கப் போகிறது. அப்போதும் கொஸிஜின் ஊருக்கு உபதேசஞ் செய்வாரா? அல்லது வெள்ளம் தலைக் கெட்டிய பின் அணையைப் பற்றி யோசிப்பாரா?

# குடியேற்ற விவசாயிகளின் விமோசனப் பாதை எது?

## இரணைமடு நீர் யாருக்குச் சொந்தம் ?

## அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளிநொச்சி கிளை அறிக்கை

கடந்த 4-4-68 அன்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுபோகத் தண்ணீர்ப் பாகுபாடு பற்றிய கூட்டத்தில் நடந்தேறிய சம்பவங்களின் பின் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள குடியேற்ற விவசாயிகள் மத்தியில், ''இரணைமடு நீர் யாருக்குச் சொந்தம்?'' என்ற கேள்வி இன்று ப்ரந்தளவில் எழுந்து நிற்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து காரில் வந்து காலில் மண் படாமல் கமத்தைப் பார்வையிடுபவர்களும் பெரும் கடைகள், தியேட்டர்கள், மில்லுகள் முதலியவற்றிற்குச் சொந்தக்காரர்களுமான பெரும் நில உடமையாளரா அல்லது குடியேற்ற நிலத்தையே நம்பி தங்கள் பெருங்குடும்பத்தை நடத்த வேண்டிய நிலையிலுள்ள ஏழைக் குடியேற்ற விவசாயிகளா இரணைமடு நீருக்குச் சொந்தக்காரர்கள்? இது பற்றிச் சரியான ஒரு முடிவுக்கு வருவதன் மூலம் இங்குள்ள குடியேற்ற விவசாயிகளாகிய நாம் எமது விமோசனப் பாதைக்கான நடவடிக்கைகளுக்கு அடிகோல வேண்டியவர்களாயிருக்கிறோம்.

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளைகள் குடியேற்ற விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட முழு நிலத்திலும் சிறுபோகம் விதைப்பதற்கு அனுமதியளித்துப் பூரண நீர் வசதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தன. அதன் காரணமாக தண்ணீர்ப் பாகுபாடு பற்றிய கூட்டத்தில் இப்பிரச்சினை எழுப்பப்பட்டது. ஆனால் படுபிற்போக்கு யு. என். பி. அரசாங்கத்தின் விசுவாசமிக்க சேவகனும் பெரும் நிலச் சொந்தக்காரனுமான மேலதிக அரசாங்க அதிபர் தனது விஷேஷ அதிகாரத்தைப் பாவித்து அதை நிராகரித்தது மட்டுமின்றி குடியேற்ற விவசாயிகளுக்குச் சிறுபோகம் விதைப்பதற்கு ஒரு ஏக்கர் நிலம் மட்டுமே வழங்கமுடியும் என்றும் கூறினார். ஆனால் அங்கு கூடியிருந்த விவசாயிகள் செய்த பெரும் கிளர்ச்சிக்கு முகம் கொடுக்க முடியாத அவர் குடியேற்ற விவசாயிகளுக்கு $1\frac{1}{4}$ ஏக்கர் வழங்கப்படும் என்ற முடிவை அறிவித்துவிட்டு கூட்டத்தை முடித்ததும் முடியாததுமாக எழுந்தோடி விட்டார். ஆனால் இந்தத் தண்ணீர்ப் பாகுபாடு பற்றிய கூட்டத்தில் நடந்த சில சம்பவங்களும் பேசப்பட்ட சில வார்த்தைகளும் மிகவும் பரிசீலனைக்குரியனவாயிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### எங்கள் கட்டளைகளை ஏற்க முடியாவிடில் காணியை விட்டு வெளியேறுங்கள்!

குடியேற்ற விவசாயிகளைப் பொறுத்தவரையில் நாங்கள் அரசாங்கக் கடனை எதிர்பார்த்து விவசாயம் செய்வதைத் தவிர வேறு வழி எதுவுமே கிடையாது. நாளாந்தம் வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்கள் முதல் போட்டுக் கமம் செய்ய முடியுமா? ஆனால் அரசாங்கமோ காலபோகக் கடன் ஐப்பசிக் கடைசியிலும், கார்த்திகை ஆரம்பத்திலும் தான் வழங்குவது வழக்கம். இதனால் எங்களது வயல்கள் வருடாவருடம் வெள்ளத்தால் அழிந்து போவதற்கு அரசாங்கத்தின் திமிர்த்தனமும், அலட்சியப் போக்குமே காரணமாகும். ஆகவே குடியேற்ற விவசாயிகள் தங்கள் சீவியத்திற்கு காலபோகத்தை நம்பியிருக்க முடியாத நிலையில் எங்களுக்கிருக்கக்கூடிய ஒரே நம்பிக்கை சிறுபோகமாகும்? அந்தச் சிறுபோகமும் எங்கள் விடிவுக்கான வழியில் அமைய முடியாமல் பெரும் நிலச் சொந்தக்காரர்கள் மேலும் பணத்தின் மேற்பணம் சேர்த்து (பெரும் நிலச் சொந்தக்காரர்கள் மேலும் பணத்தின் மேற்பணம் சேர்த்து) பெரும் லட்சாதிபதிகளாகி வாழ வழிகோல வேண்டுமென்பதற்காக நாம் வஞ்சிக்கப்பட்டால் நாம் போவது எங்கே? எங்களுக்கு வழங்கப்பட்ட மேட்டு நிலங்களில் கூட பயிர் செய்து வயிற்றை நிரப்புவதானால் கூட அதற்கும் நீர் வசதி இடையாது. கோடை காலங்களில் குடிப்பதற்குக், குளிப்பதற்குக் கூட நீரின்றி நாங்கள் அவதிப்படுவது சகலரும் அறிந்த விசயமாகும்! அப்படியானால் எங்களுக்கும் எங்களை நம்பியிருக்கும் ஏழு, எட்டு பிள்ளைகளுக்கும் சீவியத்திற்கு வழி என்ன? இதே கேள்வி யாழ்—மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் கேட்கப்பட்டபொழுது, ''அப்படியானால் காணியை விட்டு வெளியேறுங்கள்!'', என்று மிகவும் திமிருடன் பதிலளித்தார். நாங்கள் எங்கள் ஊரை உற்றாரைப் பிரிந்து, இருந்த சிறு சொத்துபத்துக்களையும் விற்று இக் குடியேற்றக் காணிகளுக்குள் கொட்டி எங்கள் உழைப்புச் சக்தியை முற்று முழுதாகக் கலந்து காடாய்க் கிடந்த மண்ணை வளப்படுத்தி நெல்லு விளையும் பூமியாக மாற்றியபின் இவர்கள் சொல்லுகிறார்கள் ''வெளியேறுங்கள்!'', என்று காற்றாடிக்குக் கீழ் சுழல் கதிரையில் இருந்து கொண்டு கோப்பிகளிலும், புத்தகங்களிலும் விவசாயம் செய்யும் இவர்களின் கையில் விவசாயிகளைப் பற்றித் தீர்மானிக்கும் அதிகாரம் இருக்கும்வரை விவசாயிகளுக்கு விமோசனத்திற்கான பாதை ஏது? இதிலிருந்து நாங்கள் ஒரு உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். இவர்கள் பணக்காரர்களுடைய வயல்களைக் காட்டு மிருகங்களிலிருந்து பாதுகாக்கும் வேலிகளாகவும் பணக்காரர்களின் வயல்களில் வேலை செய்வதற்குக் கூலிகளை உற்பத்தி செய்வதற்குமே எம்மை இங்கு கொண்டுவந்து இருத்தினர்களேயன்றி எமது நன்மை கருதியல்ல. நாம் இனியும் இப் பணக்காரர்களின் பாவனைப் பொருட்களாகப் பயன்பட்டுத் துன்பம் அனுபவிக்க வேண்டுமா? அல்லது எமக்கு விமோசனத்திற்கான ஒரு பாதையைத் தெரிந்தெடுத்துக் கொண்டு அதில் முன் செல்ல வேண்டுமா? இதில் இரண்டில் ஒரு முடிவுக்கு வருவது எங்கள் பசிப் பிரச்சினையுடன் இரண்டறக் கலக்கப்பட்டிருப்பதால் நாம் விரைவானதும் விடிவுக்கானதுமான தீர்மானத்திற்கு வர வேண்டியவர்களாயிருக்கிறோம்.

### அரசாங்கத்தை மாறறுங்கள் என்கிறார் அரசாங்க அதிபர்

தண்ணீர்ப் பாகுபாடு பற்றிய கூட்டத்தில் விவசாயிகள் முழு குடியேற்ற நெற்காணியிலும் விதைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டுமென வாதிட்டபொழுது மேலதிக அரசாங்க அதிபர்,'' இது அரசியல், இங்கு பேச வேண்டாம்'', என்றார். விவசாயிகள் தமது உரிமைக்காக வாதிடுவது அரசியலா? அப்படியானால், விவசாயிகள் தங்கள் பசியைப் போக்கச் சில முயற்சிகளில் ஈடுபடுவது அரசியலானால் விவசாயிகளைப் பட்டினி போட இவர்கள் எடுக்கும் சகல நடவடிக்கைகளும் கூட அரசியல்தானே! குடியேற்ற விவசாயிகளுக்கு மட்டும் தமது உரிமைகளுக்காகப் போராடும் அந்த அரசியல் உரிமை அவர்களுக்கு மட்டும் உண்டா? உண்மையும் அதுதான்: இந்த அரசாங்க அதிகாரிகளும் பெரும் நிலச் சொந்தக்காரர்களும் மேலும் ஏழைகளை வருத்திச் சுரண்டிச் சுகபோகம் அனுபவிக்கும் அரசியலுக்கு மட்டும்தான் நமது நாட்டில் சட்டப்படி உரிமை இருக்கும் காரணத்தால்தான் அரசியல் தங்களது தனிச் சொத்தாக இந்தத் திமிர் பிடித்தவர்கள் கணிக்கிறார்கள். அப்படியானால் அவர்கள் அரசியல் ஆட்சி புரிய எமது அரசியல் உறங்கிக் கிடப்பதா?

மேலும் விவசாயிகள் பொங்கியெழுந்தபோது மேலதிக அரசாங்க அதிபர் கூறினார், ''இந்த அரசாங்கத்தில் உங்கள் வாலாட்டம் ஒன்றும் செல்லாது. வேண்டுமானால் அரசாங்கத்தை மாற்றுங்கள்'' என்று அமெரிக்க முதலாளிகளினதும் பிரித்தானிய முதலாளிகளினதும் பணப் பைகளை நிரப்புவதன் மூலம் யு. என். பி. யும் அதன் ஏழு கட்சிக் கூட்டாளிகளும் தமது வீட்டு நலன்களைப் பாதுகாத்து எமது நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவது நாங்கள் அறியாததல்ல. பத்திரிகைகளிலும், செய்திப் படங்களிலும் 'உணவு உற்பத்தி இயக்கம், எனப் பெரும் வாய்ப் பந்தல் போடும் இந்த அரசாங்கம் விவசாயிகளுக்குப் பெரும் கொடுமை இழைப்பதும், பெரும் நிலச் சொந்தக்காரர்களுக்குச் சலுகை அளிப்பதும் நாம் நேரடியாகக் காணும் விஷயங்கள். அரசாங்கத்தை மாற்றினால்தான் எமக்கு விமோசனம் என்று அவர் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆனால் நாங்கள் அரசாங்கத்தை மாற்றுவதென்பது அவர் கருதுவதைப் போல் நாகரீகமாகப் புள்ளடி போட்டல்ல. நாம் அரசாங்கத்தை மாற்றும்பொழுது விவசாயிகளைப் பற்றித் தீர்மானிப்பது அவராகவோ, அல்லது அவரைப் போன்ற நிலச் சொந்தக்காரர்களான அரசாங்க அதிகாரிகளாயிருக்க மாட்டார்கள். சாதாரண ஏழை விவசாயிகளாகத்தானிருப்பார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

### அரசாங்கம் யார் பக்கம்?

கடந்த தண்ணீர்க் கூட்டத்திலிருந்து அரசாங்கம் யாருடைய பக்கம் நிற்கிறது என்று நாங்கள் தெளிவாக உணரக் கூடிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. காலமெல்லாம் பாடுபட்டும் கடைசியில் ஏழ்மையிலும் பசியிலும் வாடும் ஏழை விவசாயிகள் பக்கமா அல்லது விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில நிலமுதலைகளின் பக்கமா? அரசாங்கம் யார் பக்கம்? ஏழை விவசாயிகளுக்கு $1\frac{1}{4}$ ஏக்கர் விதைப்பதற்கும் பணக்காரர்களுக்கு இருக்கும் நிலத்தில் 1/3 பகுதி விதைப்பதற்கும் அனுமதி வழங்கப்படும் என்றும் மேலதிக அரசாங்க அதிபர் தன்னுடைய தீர்ப்பை வெளியிட்ட பின் ஒரு பணக்கார விவசாயியே எழுந்து நின்று தங்களுக்கு 1/4 பங்கு போதுமென்றும் குடியேற்றவாசிகளுக்கு 1'/2 ஏக்கர் வழங்கப்பட வேண்டும் என்று கூறினார். அரசாங்க அதிபரோ சர்வாதிகாரமான முறையில் அதை நிராகரித்து பெரும் நிலமுதலைகள் கூடிய பங்கு அனுபவிப்பதை மாற்ற முடியாது என்றார். பெரும் நிலச் சொந்தக்காரர் ஒருவரே ஏழைகளுக்காக வாதிட முயன்ற போது, அவரை அடக்கி பணக்காரருக்குச் சலுகை செய்யும் யூ. என். பி: யின் கொள்கை தான் என்னே இதிலிருந்து நாம் எவ்விதம் இந்த யூ. என். பி. யும் அதன் ஏழுகட்சி கூட்டாட்சிகளும் வாயளவில் ஏழைகள் பால் தேனும் பாலும் சொரிந்தாலும், நடைமுறையில் தங்கள் வர்க்கமான நிலபிரபுக்களுக்கே சாதகமாக இருப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டிவர்களாயிருக்கிறோம். இந்த நிலைமையில் அரசாங்கம் எமக்காகச் சலுகைகளைச் செய்ய முடியும் என்று எதிர்பார்க்க முடியுமா? தொடர்ந்தும் அரசாங்கமும் பெரும் நிலச் சொந்தக்காரர்களும் கூட்டுச்சேர்ந்து இப் பகுதி ஏழை வியசாயிகளுக்குச் செய்யும், கொடுமைகளை ஏற்றுக்கொண்டு எமது மனைவியரையும், குழந்தைகளையும் பசியிலும் பஞ்சத்திலும் வாடவிட வேண்டியது அவசியந்தானா?

### இரணைமடு நீர் யாருக்கு சொந்தம்?

இந்த இரணைமடுக் குளம் பெரும் கமக்காரருக்குத் தான் சொந்தமானது என்றும் அவர்களின் கருணையால் தான் ஏழைக் குடியேற்ற விவசாயிகளுக்கு சிறிதளவு நீர் வழங்கப் படுகிறது என்றும் திமிருடன் கூறிக்கொள்கிறார்கள். உண்மையில் இது யாருக்கு சொந்தம்? வெள்ளம் பெருக்கெடுத்துக்குளம் உடைத்தால் பாதிக்கப்படுபவர்களும், பாடசாலைகளில் தஞ்சமடைபவர்களும், பசியில்கிடப்பவர்களும் குடியேற்ற விவசாயிகள். ஆனால் அதே நீர் குளத்தில் தேங்கி நின்றால் அதற்குரிமை கொண்டாடுபவர்கள் பெரும் நிலச்சொந்தக்காரர்கள்! இது தான் யூ. என். பி. ஏழுகூட்டாட்சியின் நியாயமா? யாழ்ப்பாணத்திலிருந்து வந்து குடைபிடித்துக் கமம் பார்வை யிட்டு விட்டுச் செல்லும நில உடைமையாளர்களுக்கு இரணைமடு நீர் சொந்தமாம்! ஆனால் இந்தக் கிளிநொச்சிநிலத்தில் வாழ்ந்து, மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து. நிலத்தில் இறங்கி உழைக்கும் குடியேற்ற விவசாயிக்கு இரணைமடு நீரில் உரிமையில்லையாம்! குடியேற்ற விவசாயிகளின் வாழ்க்கை கிளிநொச்சி மண்ணுடனும் காடுக

12-ம் பக்கம் பார்க்க

# சி. டி. யூ. எப்-பை பலமிக்க புரட்சிகரத் தொழிற் சங்க மத்திய ஸ்தானமாக்குவோம்!

**தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும், தொழிலாளர் வர்க்கமும், புரட்சிகர இயக்கமும் மிகச் சிறந்த ஓர் நிலைமைக்கு முகங்கொடுக்கும் வேளையில் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் 18வது மாநாடு நடைபெறுகின்றது.**

**ஏப்ரல் 28,29,30ம் திகதிகளில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடக்கும் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் 18வது மாநாட்டில் அதன்பொது செயலாளர் தோழர் என்.சண்முகதாசன் சமர்ப்பிக்கும் அறிக்கை.**

சர்வதேசரீதியில் வெல்லற்கரிய சிந்தனைகளான மார்க்சிஸம்—லெனினிஸமும் மா சே-துங் சிந்தனையும், உலக ரீதியான அங்கீகாரம் பெற்று வருகின்றன, இப் புரட்சிகர சித்தாந்தத்தினால் வழி காட்டப்பட்டு ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க புரட்சிகர மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான உலக ஏகாதிபத்தியத்திற்கு எழுந்து நிற்க முடியாத அடிகொடுத்து வருகின்றனர். மகத்தான ஏகாதிபத்திய விரோத பெரும் புயல் வியட்நாமிலிருந்து வீசுகின்றது. அங்கு வீரமிக்க வியட்நாமிய மக்கள் துணிகரமான மக்கள் யுத்தம் நடத்துவதன் மூலம் காட்டுமிராண்டித்தனமான அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களைத் தலை குனிய வைக்குமளவிற்கு தோற்கடித்துள்ளனர். இந்த வருட முற்பகுதியில் தென் வியட்நாம் விடுதலை முன்னணிப் படையினர் நடத்திய எதிர்த் தாக்குதலுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி, கசாப்புக் கடைக்கார ஜோன்சன், வியட்நாமிலுள்ள அமெரிக்கத் துருப்புக்களின் தளபதி வெஸ்ட்மோர்லாண்டை திருப்பி அழைக்க வேண்டி ஏற்பட்டதோடு, தானும் மறுபடி ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடவில்லை என்று பிரகடனம் செய்ய வேண்டியதாயிற்று. இது வியட்நாமிய மக்களின் வெற்றிக்கும், அமெரிக்காவுக்குள்ளேயே அதிகரித்து வரும் யுத்த எதிர்ப்பு உணர்ச்சிக்கும் கிடைத்த பரிசாகும்.

ஆனால் ஜோன்சனின் சூழ்ச்சிகளைக் கண்டு நாம் ஏமாந்து விடக்கூடாது. அவரது சமாதான முயற்சி ஓர் மாபெரும் ஏமாற்று. அது நேரத்தை கடத்தி, குழப்பத்தை உண்டு பண்ணி வியட்நாமிய மக்களின் பூரண வெற்றியைத் தடைசெய்யும் முயற்சியாகும். வியட்நாமியப் பிரச்சினைக்கு ஒரே ஒரு தீர்வுதான் உண்டு. அதாவது, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் வட வியட்நாம் மீது குண்டு வீசுவதைப் பூரணமாக நிறுத்த வேண்டும். தமது படைகளையும் இராணுவத் தளங்களையும் எடுத்துக் கொண்டு வியட்நாமை விட்டு வெளியேற வேண்டும். தமது பிரச்சினைகளை தாமே தீர்த்துக்கொள்ள வியட்நாமியரை அனுமதிக்க வேண்டும்.

ஏகாதிபத்தியக் கட்டிடம் அதன் அத்திவாரத்திலிருந்தே சரிந்துவிழுகின்றது என்பதற்கு, அமெரிக்காவிற்குள்ளே, இனப் பாகுபாட்டிற்கெதிரான நீக்ரோ மக்களின் கிளர்ச்சி இன்னுமோர் அறிகுறியாகும். கோபாவேசங் கொண்ட நீக்ரோ மக்கள் புரட்சிகரப் பாதையில் செல்வதைத் தடுத்து இனவெறி அமெரிக்காவைப் பாதுகாக்க முயன்றவண. மார்ட்டின் லூதர் கிங் கொலைசெய்யப்பட்டமை, அகிம்சைத் தத்துவத்தின் பயனற்ற தன்மையை அம்பலப்படுத்தியுள்ளது. எதிர்ப் - புரட்சிப் பலாத்காரத்தை, புரட்சிகரப் பலாத்காரத்தின் மூலம்தான் எதிர்க்க முடியும் என்பதையும் இந்த நிகழ்ச்சி பல காலம் கஷ்டப்பட்ட நீக்ரோக்களுக்குப் புகட்டியுள்ளது.

நீக்ரோ மக்களின் போராட்டத்திற்கு தங்கு தடையற்ற ஆதரவைப் பிரகடனம்செய்து நீக்ரோ மக்களின் விமோசனத்திற்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்தை ஒழித்துக் கட்ட வேண்டுமென அறைகூவல் விடுத்த ஒரே ஒரு உலகத் தலைவர், மகத்தான சீன மக்களின் தலைவரும் சர்வதேசப் புரட்சிகர இயக்கத்தின் தலைவருமான தோழர் மாசே-துங் என்பது ஏதோ தற்செயலான ஓர் நிகழ்ச்சியல்ல.

## அழிவு நோக்கி உலக ஏகாதிபத்தியம்


ஆசிய, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகள் யாவற்றிலும் பரவுகின்ற, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான உலக ஏகாதிபத்தியத்திற்கெதிரான விடுதலை யுத்தங்கள் எல்லாம், உலக ஏகாதிபத்தியம் தனது அழிவுப் பாதையில் செல்கின்ற சகாப்தத்தில் நாம் வாழ்கின்றோம் என்பதை நிரூபிக்கின்றன.

உலக ஏகாதிபத்தியத்தின் பொதுவான நெருக்கடி மோசமடைவதும் இதற்கான ஏனைய அறிகுறிகள். இவற்றின் பிரதிபலிப்பை, முதலாளித்துவ உலகில் இரண்டாவது செல்வாக்குப் பெற்ற நாணயமான பவுண் ஸ்டர்லிங் மதிப்பிறக்கம் செய்யப்பட்டதிலிருந்தும், சர்வ வல்லமையுள்ள டாலர் ஈடாட்டம் கண்டதிலிருந்தும் காணலாம். சூயஸ் கால்வாயின் கிழக்குப் புறத்திலிருந்து வாபஸ் பெறுவதற்கு பிரித்தானிய ஏகாதிபத்தியம் எடுத்த முடிவும், ஏகாதிபத்தியங்கள் மத்தியில் வளர்ந்து வரும் முரண்பாடுகளும், ஏகாதிபத்தியத்தின் நெருக்கடி மோசமடைவதை வலியுறுத்துகின்றன.

உலக ஏகாதிபத்தியம் வீழ்ச்சி அடைகின்ற தறுவாயில், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் சட்சியை மையமாகக் கொண்ட நவீன திரிபுவாதிகள், சரிந்து விழுகின்ற உலக ஏகாதிபத்தியத்திற்கு முண்டு கொடுக்கும் விதத்தில் நடந்து கொள்கின்றனர். இவர்கள் சமாதான சகஜீவனம், சமாதான மாற்றம், இத்தியாதியான கொள்கைகளைப் போதனை செய்கின்றனர். ஏகாதிபத்தியத்தை அழகுபடுத்த முனைகின்றனர். ஏகாதிபத்தியத்தின் பலத்தை அதிகப்படுத்திக் காட்டுவதன் மூலம், ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதற்கான மக்களின் உற்சாகத்தை மழுங்கடிக்க முயல்கின்றனர்.

**மனச் சாட்சி**

உலகில் உண்மையில் பிரதானமானது மனச்சாட்சி; மனச்சாட்சியுடையோராக இருப்பதைக் கம்யூனிஸ்ட் கட்சி மிக வன்மையகக் கோருகிறது. -மா சே-துங்



எமது பொதுச் செயலாளர்

சகலவிதமான வெளிநாட்டுக் கொள்கைகளிலும் சோவியத் நவீன திரிபுவாதிகள் வெட்கங் கெட்ட முறையில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் ஒத்துழைத்தல், வியட்நாம் பிரச்சினையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு வக்காலத்து வாங்குதல், சீன எதிர்ப்புப் பிரசாரத்தில் கலந்து கொள்ளல், இந்தோனேசிய, இந்திய, ஜப்பானிய, இத்தியாதியான பிற்போக்கு அரசாங்கங்களை ஆதரித்தல், சகல தேசிய விடுதலை யுத்தங்களையும் காட்டிக் கொடுத்தல், அண்மையில் அமெரிக்க ஆதரவுடன் நடைபெற்ற இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் போது அராபிய மக்களைக் காட்டிக் கொடுத்தமை ஆகிய இவர்களின் நடவடிக்கைகள் யாவும் நவீன திரிபுவாதம் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் உள்ள முதலாளித்துவச் செல்வாக்கே அன்றி வேறொன்றுமில்லை என்பதையும், உலக ஏகாதிபத்தியத்தை ஒழித்துக் கட்டுவதாயின், நவீன திரிபுவாதம் பூண்டோடொழிக்கப்பட வேண்டியது என்பதையும் நேர்மையாக சந்தேகப்படுபவர்களையும் கூட நம்ப வைத்துள்ளது.

நவீன திரிபுவாதிகள் சரிந்து வீழ்கின்ற உலக ஏகாதிபத்திய அரசை தூக்கிப் பிடிக்க முனைகின்ற வேளையில், உலக ஏகாதிபத்தியத்தை இறுதியாக ஒழித்துக் கட்டுவதற்கான சரியான பாதையை, மார்க்சிஸ்ட் — லெனினிஸ்டுகள், குறிப்பாக சீனாவினதும், அல்பேனியாவினதும் அரசாங்கங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக எமது சகாப்தத்தின் தலைசிறந்த மார்ச்சிஸ்ட் — லெனினிஸ்டான தோழர் மாசே — துங் சுட்டிக் காட்டியுள்ளார்.

## சீனக் கலாச்சாரப் புரட்சி ஒரு பெரும் வெற்றி

சீனாவில் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் வெற்றி உலகிலுள்ள தொழிலாளர் வர்க்கத்திற்கும், புரட்சிகர இயக்கத்திற்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். அது முதலாளித்துவம் மறுபடியும் புகுத்தப்படுவதை தடுத்துள்ளது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாத்துள்ளது. உலகப் புரட்சியின் தளமாக சீனாவைப் பாதுகாத்துள்ளது. சீனாவில் புரட்சியை முன்னெடுத்துச் சென்றுள்ளது. மார்க்சிஸம்-லெனினிஸம் மா சே-துங் சிந்தனை என்ற புரட்சிகர சித்தாந்தத்தினால் வழிகாட்டப்பட்டு, சகல நாடுகளின் தொழிலாளர் வர்க்கம், தமது நாட்டு மக்களின் சகல முற்போக்கு, ஏகாதிபத்திய— விரோத சக்திகளுடன் ஒன்றுபட முன்வரவேண்டும். அந்த ஒற்றுமையின் அடிப்படையில் சகல நியாயமான விடுதலை யுத்தங்களையும் ஆதரிக்கவேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் போராடுகின்ற சகல மக்களுடனும், சக்திகளுடனும், ஐக்கியப்படவேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை இறுதியாக ஒழித்துக் கட்டுவதற்கு அதற்கு எதிரான சர்வதேச ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்கவேண்டும்.

8-ம் பக்கம் பார்க்க

# கிராமப்புற விவசாயிகளையும் தோ

# அணி திரட்டி, அ

◎ —7ம் பக்கத் தொடர்

இலங்கையில் எமது 17வது மாநாடு நடைபெற்றபின் கடந்த இரண்டரை வருடங்களாக, யு. என். பி. யின் தலைமையிலான அரசாங்கம், நாட்டை நெருக்கடிக்குமேல் நெருக்கடிக்கு உள்ளாக்கிவந்துள்ளது. இன்று எமது நாடு படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. 1929-31-ம் ஆண்டைய காலத்திலும் மோசமான நிலையை அடைந்துள்ளது.

## ஏகாதிபத்திய சில்லுகளுடன் பொருளாதாரம் பிணைக்கப் படுகிறது.

இந்த நெருக்கடி ஏற்படுவதற்குக் காரணம் வெளிநாட்டு ஏகாதிபத்திய மூலதனக்காரர்கள் மேலும் சுரண்டுவதற்கு இடமளிக்கின்ற கொள்கையை யூ. என். பி. கடைப்பிடித்ததனலேயேயாகும். இந்த சக்திகள் படிப்படியாக எமது ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளதோடு எமது இறக்குமதிப் பொருட்கள் யாவற்றினதும் விலையை படிப்படியாகக் கூட்டியும் உள்ளன. இந்த வகையில் நாம் இருமருங்கும் கொள்ளையடிக்கப் படுகின்றோம். இது நவ—காலனி முறையிலான சுரண்டலுக்கு ஓர் சிறந்த உதாரணமாகும்.

இந்த ஏகாதிபத்திய ஆதிக்சத்திலிருந்து எமது பொருளாதாரத்தை விடுவிப்பதற்குப் பதிலாக, யு. என். பி. எமது நெருக்கடியை மேலும் மோசமாக்கும் விதத்தில், வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தின் தேர்ச் சில்லுகளுடன் எமது அடிமைச் சங்கிலிகளை மேலும் இறுகப் பிணைத்துள்ளது.

இதன் பலனாக அத்தியாவசியத் தேவைப் பொருட்கள் ஒன்றில் கிடைப்பதில்லை அல்லது அதிக விலைக்குத்தான் கிடைக்கின்றன. வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துள்ளது. மக்கள் வாழ்க்கைத் தரம் இன்றுபோல் என்றும் பாதிக்கப்பட்டதில்லை. பாண் விலை கூட்டப்பட்டது. கூப்பன் அரிசி அரைவாசியாகக் குறைக்கப்பட்டது. முதல் முறையாக குழந்தைகளின் பால் உணவுகூட வாங்க முடியாது போயிற்று. இவை யாவற்றிற்கும் மேலாக ரூபாவின் மதிப்பு குறைக்கப்பட்டது. வாழ்க்கைச் செலவு மேலும் உயர்ந்தது. நாணய மதிப்பிறக்கம் நடைமுறையில் பாரதூரமான சம்பளக் குறைப்பாகும். இதன் காரணமாகத் தொழிலாளர்கள் போராடத் தொடங்கியது இயல்பேயாகும். இதுபற்றி நாம் பின்பு குறிப்பிடுவோம்.

யூ. என். பி. மறுபடியும் ஆட்சிக்கு வந்த காலகட்டத் இந்த நாட்டின் தொழிற் சங்க, தொழிலாளர் வர்க்க இயக்கத்திற்கு எதிராகப் பாரதூரமான அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. கடந்த பொதுத் தேர்தலில் யூ. என். பி-யை ஆதரிக்காத அரசாங்க ஊழியர்களும், கூட்டுத்தாபன ஊழியர்களும் பெருமளவில் இடமாற்றம் செய்யப்பட்டனர். இதனை விட மோசமாக ஜனவரி 8ம் திகதி வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். வேலை நிறுத்தம் செய்கின்ற தொழிலாளர்கள் தமது வேலை ஸ்தலங்களுக்கு முன்னல் கூடுதல், வேலை நிறுத்தத்தை மீறிச் செல்பவர்களை தடுக்க முயல்தல் (பிக்கெட்) போன்றசாதாரண உரிமைகள் கூடக் கட்டுப்படுத்தப்பட்டன. இந்த அரசாங்கத்தின் முதல் ஒன்பது மாதங்களைத் தவிர தொடர்ச்சியாக அவசர காலச் சட்டம் அமுலில் இருந்து வருகின்றது. இதுபோன்ற ஜனநாயக ஆட்சியை மீறிய நிலைமை இதற்கு முன் காணப்பட்டதில்லை.

## முதுகெலும்பற்ற முக் கூட்டு முன்னணியினர்

தொழிலாளர் வர்க்கத்தின் மேலும் மக்கள் மேலும் யூ. என். பி. இந்த விதத்தில் தாக்கியதற்கு எதிராக, முக்கூட்டு முன்னணியின் தலைமையிலான தொழிற் சங்கங்கள் செயலற்று, முதுகெலும்பற்றக் கொள்கைகளைக் கடைப்பிடித்துவந்தன. யூ. என். பி. அடக்குமுறைக்கு எதிராக ஒன்றுபட்ட நடவடிக்கை எடுக்க முன்வரும்படி சி. டி. யூ. எப். விடுத்த சகல அறைகூவல்களையும் அத்தொழிற் சங்கங்கள் புறக்கணித்தன. இந்தத் தொழிற் சங்கங்களும் அவற்றின் தலைவர்களும் அர்த்தமற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை பாராளுமன்றத்தில் கொண்டு வருவதிலும், வெளியே தாக்கமில்லாத கூட்டங்கள் மூலமும் மட்டுமே தமது எதிர்ப்பைக் காட்ட முன்வந்தனர்.

ஜனவரி 8ம் திகதி வேலை நிறுத்தத்தினல் ஆயிரக்கணக்கானத் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டபோது கூட, ஜனவரி 8ம்திகதி வேலை நிறுத்தம் செய்தவர்கள் மேல் கொடுக்கப்பட்ட தண்டனைகள் யாவும் அகற்றப்பட வேண்டுமெனக் கோரி, உறுதியான ஐக்கியத் தொழிற சங்க நடவடிக்கை எடுக்க முன்வருமாறு சி. டி. யூ. எப். விடுத்த அறைகூவலைக் கூட்டு முன்னணியின் தலைமையிலான தொழிற சங்கங்கள் புறக்கணித்தன என்பதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க சம்பள உயர்வு வேண்டும் என்ற பிரச்சார இயக்கத்தின் போதும் இதே நிலைதான் இருந்தது.

சமசமாஜக் கட்சித் தலைவர்களினதும் கெனமன் திரிபுவாதக் கும்பலினதும் காட்டிக் கொடுப்பின் காரணமாக 21 கோரிக்கைகளுக்கான இயக்கத்தின் ஐக்கியம் சிதறுண்டு போன பின்னர் தனியார் துறை தொழிலாளர்களின் சி. டி. யூ. எப். 12 கோரிக்கைகளை உருவாக்கி 1965 ல் முதலாளிகளுக்கு சமர்ப்பித்தது. ஒரு வருடத்திற்குப் பின்னர் கூட்டு முன்னணிக் கட்சிகளின் தலைமையிலான தொழிற் சங்கங்களும் 15 கோரிக்கைகளை உருவாக்கின. ஆனல் தொடர்ச்சியாக கூட்டு முன்னணித் தலைமையிலான தொழிற் சங்கங்கள், சி. டி. யூ. எப்—புடன் பேச்சு, வார்த்தை நடத்தவோ, கூட்டுத் தொழிற் சங்க நடவடிக்கை எடுக்கவோ மறுத்து விட்டன. சி. டி. யூ. எப். பொதுக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக பொது நடவடிக்கைகளில் ஈடுபடும்படி கூட்டு முன்னணித் தொழிற் சங்கங்கட்கு வேண்டுகோள் விடுத்த போதிலும் பயனேதுல்லாது போயிற்று. 1066 ம் ஆண்டில் சி. டி. யூ, எப். மூன்று அடையாள வேலை நிறுத்தங்களை நடத்தி இத் தொழிற் சங்கங்களையும் சேரும்படி கேட்டுக் கொண்டது. எமக்கு அழைப்பு விடுக்காமலே, அவர்கள் தீர்மானிக்கின்ற திகதிகளில் எமது சி. டி. யூ. எப்: அங்கத்தவர்களையும் வேலை நிறுத்தில் குதிக்கச் செவோம் என்ற எவரும் விடுக்காத வேண்டுகோளைக் கூட நாம் விடுத்தோம். நாம் இவற்றை எல்லாம் நேர்மையாகவும் உண்மையாகவும் செய்தோம். முதலாளிகளுக்கும் அரசாங்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமைக் குரலை பிரகடனம் செய்ய நாம் விரும்பினேம்.

ஆனல் கூட்டு முன்னணித் தலைமையிலான தொழிற் சங்கங்களின் தனித்தம்பிரான் போக்கும், வர்க்க சமரசக் கொள்கைகளும் குறுக்கே நின்றன. நாணய மதிப்பிறக்கத்தின் பின் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தொழிலாளர்கள் வந்த பின்பும் விட தொழிலாளர் போராட்டங்களை ஒரு முகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை இத்தொழிற் சங்கங்கள் நிராகரித்தன.

இத்துறையிலும் தொழிலாளர்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொண்டதில் சி. டி. யூ. எப். பெருமை அடைகின்றது. நாளுக்கு ரூ. 1/55 சம்பள உயர்வு கோரி சி. டி. யூ. எப், 1967 டிசம்பர் 12ம்திகதி கொம்பிலும் தோட்டங்களிலும் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றில் குதித்து ஆர்ப்பாட்ட ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தியது. இந்த வகையில் மறுபடியும் சி. டி. யூ. எப். போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்தது. அங்கத்தவர்களின் பலவந்தத்தினல் சகல பிரதான தொழிற் சங்கங்களும் விரைவில் வேலை நிறுத்தம் செய்ய முடிவெடுக்க வேண்டியதாயிற்று. இருந்த போதிலும் சகல தொழிற் சங்கங்களும் கூட்டாக இயங்க முடியவில்லை. தனித்தனியாக முடிவெடுத்தபோதிலும் சகல சங்கங்களும் 1967 டிசம்பர் 20ம் திகதி வேலை நிறுத்தம் செய்வதென முடிவெடுத்தன. வேலை நிறுத்த முடிவு ஏதும் எடுக்காத வேலை நிறுக்கத்தில் பங்கே கொள்ளாத ஒரே ஒரு பிரதான தொழிற் சங்கம் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமாகும். (சி. எம். யூ.) ஆனல் ஆரம்பத்திலிருந்தே வேலை நிறுத்தம் காட்டிக் கொடுக்கப்பட்டது.

முதலாவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் பிரதமருடன் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி தோட்டத் தொழிலாளர்களுக்கு பிச்சைக்காசு 15 சதம் பெற்றுக்கொண்டு முதல்நாளிலேயே வேலை நிறுத்தத்திலிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டார். இரண்டாவதாக வேலை



நிறுத்கம் ஆரம்பித்த பின்பும் கூட சி. டி. யூ. எப்.புடன் ஐக்கியப்பட்ட தலைமையை உருவாக்க மறுத்து, வேலை நிறுத்தத்திற்கு புரட்சிகரத் தலைமை அளிப்பதற்குப்போதிய தயாரிப்புக்கள் செய்யாது, முக்கூட்டு முன்னணித் தலைமையிலான தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தம் தோல்வி அடைய வழி வகுத்துக் கொண்டன. வேலை நிறுத்தத்தைப் பொறுத்தவரை அவர்கள் எப்போதும் அரைமனதுடன் தான் இருந்தார்கள். தொழிலாளர்களின் வற்புறுத்தலின் பேரில் வேலை நிறுத்தத்திற்கு முன் வந்தபோதிலும் அவர்கள் அதில் முழுமனதுடன் பங்கு கொள்ளவில்லை. வேலைநிறுத்தக் கூட்டங்களில் இந்தமூன்று கூட்டு முன்னணிக் கட்சிகளின் பாராளுமன்றத் தலைவர்களில் ஒரு சிலர்மட்டும் கலந்துகொண்டதிலிருந்து இது தெரிய வருகின்றது. ஒரு மாத காலம் திரிபுவாத மாஸ்கோவில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு திருமதி பண்டாரநாயக்க நாடு திரும்பியதும், நிலைமை படுமோசமடைந்தது. அங்குஅவர் சமாதான சகஜீவனக் காற்றை நன்கு முகர்ந்திருக்கக் கூடும்.

இதற்குப் பின் வேலை நிறுத்தத்தை முடிப்பதற்கு ஒரு காரணம் கண்டு பிடிப்பதுதான் பிரச்சினையாக இருந்தது. யூ. என் பி. அமைச்சர் முகம்மதுவுக்கு பெரும் முயற்சி ஏதும் எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவர் உதவி செய்யக் காத்துக்கொண்டிருந்தார். தமது புதிய நண்பர் அஸீஸுடன் சேர்ந்து முக்கூட்டு முன்னணித் தொழிற் சங்கத் தலைவர்கள் செய்த மாபெரும் துரோகச் செயல்தான் தோட்டப் பகுதிகளில் வேலை நிறுத்தத்திற்காக எந்தவித தயாரிப்பும் செய்யாததாகும். கொழும்பில் இருந்துகொண்டு இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் தமது தலைமையில் வேலை நிறுத்தம் செய்துள்ளனர் என்று பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விட்டுக்கொண்டு, வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக அவர்கள் எடுத்த ஒரே ஒரு நடவடிக்கை

தனி ஒ
வெளியி
முன்ன
தலைவர்
களில்
மான ஆ
விட்டது
மாயிரு
இகழ்ச்சி
கொள்
பட்டதற்

## சி. டி. யூ
## ஒப்பற்ற

சி. டி.
துள்ள
தொழில
சங்கம்
ளர்களுக்
மை அ
மாறுன
ண்டமா
அம்பல
லாளர்க
போராட
கோரிநா
துண்டுப்
யோகித்
தோட்ட
கங்களும்
தனல்,
வேலை
தோட்ட
ளின் வே
பாட்ட

கொடு
டு முன்
தலைவர்
பான்மை
வில்லை.
கைகள்
கூவல்
ஏப்ரல்-
தின்போ
புரட்சிக
தொழி
போது
போர்க்
நிலையை
திரிபுவ
அங்கு

தெ
அதை
நலன்
வெறு
நலன்
பார்
அவ
தொ
தோ
தொ
தொ
ஜன
கல்வ
வேல

# தோட்டத் தொழிலாளர்களையும் அவர்களோடு ஐக்கியமுறுவோம்!

தனி ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டதேயாகும். கூட்டு முன்னணித் தொழிற் சங்கத் தலைவர்கள் தோட்டப் பகுதிகளில் தமக்கிருந்த சொற்பமான ஆதரவைக்கூட இழந்துவிட்டதும் இதற்கு ஓர் காரணமாயிருக்கலாம். இவர்களின் இகழ்ச்சிமிக்க வகுப்புவாதக் கொள்கையே இந்த நிலை ஏற்பட்டதற்குக் காரணமாகும்.

## சி. டி. யூ. எப்-பின் ஒப்பற்றத் தலைமை

சி. டி. யூ. எப்—பில் இணைந்துள்ள இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்குப் புரட்சிகரத் தலைமை அளித்தது இதற்கு நேர் மாறுன சம்பவமாகும். தொண்டமானின் துரோகத்தை அம்பலப்படுத்தியும் தொழிலாளர்கள் புரட்சிகர ரீதியில் போராட வேண்டுமெனவும் கோரி நாம் இலட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தோம். ஆனுல் ஏனைய தோட்டத் தொழிலாளர் சங்கங்களும் காட்டிக் கொடுத்ததனுல், பல நாட்கள் தனியாக வேலை நிறுத்தம் செய்த பின், தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை நிற்பாட்ட வேண்டியதாயிற்று.

கொழும்பிலும்கூட, முக்கூட்டு முன்னணித்தொழிற் சங்கத் தலைவர்கள் போராட்ட மனப்பான்மை எதையும் காட்டவில்லை. புரட்சிகர நடவடிக்கைகள் எதற்குமே அறைகூவல் விடுக்கவில்லை. 1958 ஏப்ரல்-மே வேலை நிறுத்தத்தின்போது சி. டி. யூ. எப்-பின் புரட்சிகரத் துவஜத்தின் கீழ் தொழிலாளர்கள் போராடியபோது லிப்டன் சதுக்கத்தில் போர்க்களம்போல் இருந்த நிலைமைக்கும் இந்தத் தடவை திரிபுவாதிகளின் தலைமையில் அங்கு வேலை நிறுத்தம் நடை

பெற்றபோது இருந்த நிலைமைக்கும் எவ்வளவு வித்தியாசம்! வேலை நிறுத்தத்தை சீர்குலைக்கும் முயற்சிகளை தடைசெய்வதற்கும் கருங்காலித்தனத்திற்கு எதிராகவும் போராட்ட நடவடிக்கைகள் ஏதேனும் எடுப்பதற்கு திரிபுவாதிகளோ சமசமாஜத் தலைவர்களோ தயாராக இருக்கவில்லை. மறுபுறம் வேலை நிறுத்தத்தைமுன்னெடுத்துச்செல்ல ஐக்கியப்பட்ட தலைமையை உருவாக்கவும் அவர்கள் தயாராக இருக்கவில்லை. தொழிலாளி வர்க்கத்தின் ஏனைய பகுதிகளை சம்பந்தப்படுத்தி வேலை நிறுத்தத்தை விரிவடையச் செய்யவும் அவர்கள் தயாராக இருக்கவில்லை.

சி. டி. யூ. எப். தனது புரட்சிகரப் பாரம்பரியத்திற்கிணங்க எப்போதும் வேலைநிறுத்தத்திற்கு சரியான தலைமை கொடுத்து வந்தது. புரட்சிகர தொழிற் சங்க நடவடிக்கையின் முக்கியத்துவத்தை பல துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், கூட்டங்கள் மூலமாகவும் தொழிலாளர்களுக்கு விளங்கப்படுத்தியது. ஆனுல் எமது அங்கத்தவர்களைத் தவிர கணிசமான பகுதிகளை எமது எண்ணத்திற்குத் திருப்பமுடியாமல் போயிற்று.

ஆதலால் 1968 ஜனவரி 16ம் திகதி, யூ. என். பி. தொழில் அமைச்சரினதும், கூட்டு முன்னணித் தலைவர்களினதும் ஒத்துழைப்பின் மூலம் வேலை நிறுத்தம் முடிவடைந்தது. கூட்டு முன்னணித் தொழிற் சங்கத் தலைவர்களின் விருப்பத்திற்கு மாறுக செயல்படுவதுபோல் பாசாங்கு செய்து அமைச்சர் பிரச்சினையைக் கட்டாய மத்தியஸ்தத்திற்கு விடுத்தார். கூட்டு முன்னணித் தலைவர்களும் பகிரங்கமாக அமைச்சரைத் "திட்டுவதாகப்" பாசாங்கு செய்துவிட்டு வேலை நிறுத்தத்தை முடித்துக்கொள்ள சம்மதித்தனர். இந்த வகையில் எமது நாட்டுத் தொழிற் சங்க சரித்திரத்தின் வெட்கக் கேடான ஓர் அத்தியாயம் முடிவடைந்தது.

தொடர்ந்தும் இரண்டுநாட்களுக்கு சி. டி. யூ. எப். வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தியது. கூட்டு முன்னணித் தொழிற் சங்கத் தலைவர்களின் ஒரு பகுதியினர் மட்டும் வேலை நிறுத்தம் செய்வதில் பயனில்லை என்று கருதியதால் சி. டி. யு. எப். 1968 ஜனவரி 18ம் திகதி வேலை நிறுத்தத்தை நிறுத்தியது. தோட்டத் தொழிலாளர்களைக் கணக்கில் எடுக்காமலேயே, கூட்டு முன்னணிக் கட்சிகள் யாவற்றின

தும் தலைமையில் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை விட அதிகமானவர்கள் சி. டி. யூ. எப்-பின் தலைமையில் வேலைநிறுத்தம் செய்தனர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

## கடந்த வேலை நிறுத்தத்தின் பாடங்கள்

டிசம்பர் — ஜனவரி வேலை நிறுத்தம் தொழிலாள வர்க்கத்திற்கு பல பயனுள்ள பாடங்களைக் கற்பித்துள்ளது. எந்த ஒரு வேலை நிறுத்தமும் தொழிலாளர்களின் ஒற்றுமை இல்லாமல் வெற்றிபெற முடியாது என்பது முதலாவது பாடமாகும். பல தனிப்பட்ட வேலை நிறுத்தங்கள் தோல்வி அடைந்த பின் இந்த வெளிப்படையான உண்மையை சி. டி. யூ. எப். இந்த நாட்டுத் தொழிலாளர் முன் 1963ல் கொண்டுவந்து நிறுத்தியது. இந்த உண்மையை உணர்ந்ததன் காரணமாகவே தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டி நிறுவப்பட்டு புகழ்பெற்ற 21 கோரிக்கைகளும் உருவாக்கப்



சி. டி. யூ. எப். தலைவர் தோழர் வாட்சன் பெர்ணுண்டோ

பட்டன. இக்கோரிக்கைகளின் பின்னுல் இந்த நாட்டில் என்றுமே ஏற்படாத அளவு உயர்ந்த தொழிற் சங்க ஐக்கியத்தை எம்மால் உருவாக்கமுடிந்தது. ஆனுல் அந்த ஐக்கியம் தலைவர்களின் ஐக்கியமாக உருவெடுத்து, சில தலைவர்களுக்கு மந்திரி சபையின் பல பதவிகள் எடுப்பதற்காக சந்தர்ப்பவாத ரீதியில், சீர்குலைக்கப்பட்

டது. இன்று சர்லச் சக்கரம் பூரணமாக சுற்றி வந்து நிற்கின்றது. 1963ல் இருந்ததைப் போல், தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்தை உருவாக்காமல் பலனுள்ள தொழிற் சங்கப் போராட்டம் நடைபெறமுடியாது என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது.

1963ல் தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியில் ஏற்பட்டதுபோன்று மறுபடியும் ஏற்படுவதற்கு அனுமதிக்க முடியாது என்பதை இன்று தொழிலாளி வர்க்கம் உணர்கின்றது. அத்தலைவர்களில் அதிகப்படியானேர் துரோகப் பாதையில் வெகுதூரம் சென்றுவிட்டனர். இன்று தொழிலாளர் வர்க்கம் புதிய வகையான ஒற்றுமையை உருவாக்க முனையவேண்டும். செல்வாக்கிழந்த இத்தலைவர்களை விட்டுவிட்டு சகல தொழிலாளர்களும் ஒன்றுபடல் வேண்டும். இது கடுமையான முயற்சி. இதற்குக் காலதாமதம் ஆகலாம். ஆனுல் வேறு வழி இல்லை. சமசமாஜக் கட்சியினுலும், நவீன திரிபுவாதிகளினுலும், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தினுலும், (சி. எம். யூ.) தொண்டமானினுலும் ஏமாற்றப்படுகின்ற சகல தொழிலாளர்களையும் நாம் ஐக்கியப்படுத்த வேண்டும். தமது தலைவர்களை விட்டு விட்டு தொழிலாளர் வர்க்க ஒற்றுமைப் பாதையில் அவர்களை அழைத்துச் செல்லவேண்டும்.

இரண்டாவதாக, தொழிலாளர் வர்க்கம் கற்றுள்ள பாடம் யாதெனில், சொத்துடமையுள்ள தலைவர்களிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளாவிடில்தொழிலாளர் வர்க்கத்தின் நலன் கருதாத் தலைமையிலிருந்து விடுவித்துக் கொள்ளாவிடில் தொழிலாளர் வர்க்கத்தை பாராளுமன்ற ஆசனங்களுக்குப் போகப் பாவிக்கும் படிக் கல்லாக மட்டும் பாவிக்கின்ற தலைமையில் இருந்து விடுவித்துக் கொள்ளாவிடில் தலைவர்களின் சொத்துக்களைப் பறி முதல் செய்துவிடுவோம் என்ற அரசாங்கத்தின் பயமுறுத்தல்களுக்கு அஞ்சாத இழப்பதற்கு அடிமை விலங்குகளைத்தவிர வேறொன்றுமில்லாததால் புரட்சிகரத் தலைமை கொடுக்க அஞ்சாத தனது சொந்தத் தலைமையை உருவாக்காவிடில் தொழிலாளர் வர்க்கத்திற்கு விமோசனம் இல்லை என்பதாகும்.

நாம் வற்புறுத்திக் கூற வேண்டிய முக்கியமான பாடமிது. பெருமைக்குரிய சி.டி.யூ.எப்-தவிர்ந்த ஏனைய தொழிற் சங்கங்கள் அதிகப்படியானவற்றில் தலைவர்கள் ,ஒன்றில் தோட்டச் சொந்தக்காரர்கள், வர்த்தகர்கள், பெரும் கம்பனிகளின் பங்குதாரர்கள், அல்லது ஆலைச் சொந்தக்காரர்கள் இப்படியானவர்கள் தொழிலாளர் வர்க்கத்தைச் சுரண்டி வாழ்பவர்கள், எப்போதாவது தொழிலாளவர்க்கத்தின் உண்மையான நலன்களுக்காக உழைப்பவராக மாறுவதுஎப்படி? இப்படியான முறையில் தொழிலாளர்கள் ஏமாற்றப் பட்ட சில நாடுகளில் இலங்கையும் ஒன்ருகும். தொழிலாளர்கள் தலைமையை தமது கைக்குள் எடுக்கும் போதுதான் புரட்சிகரமான விட்டுக் கொடுக்காத தலைமை உருவாக முடியும்.

மூன்ருவதாக பொருளாதாரப் போராட்டங்கள் வரையறுக்கப்பட்ட ஓர் எல்லைக்குள் மட்டும்தான் ஏற்படுத்த முடியும் என்பதை தொழிலாளர் வர்க்கம் உணர வேண்டும். சம்பள உயர்வுக்கான போராட்டத்தினுல் முதலாளித்துவ ஒழித்துக்கட்டிவிட முடியாது. உண்மையில் முதலாளிகளிடமிருந்து தான் நாம் சம்பள உயர்வு கேட்கின்ருேம் இதன் மூலம் முதலாளித்துவம் தொடர்ந்தும் இருக்கும் என்ற அடிப்படையில்தான் இயங்க வேண்டியுள்ளது. தொழிற் சங்க வேலையில் இது சி[illegible]ருத் தவாத முறையாகும்

ஆனுல் புரட்சிகர தொழிற் சங்க வாதிகளாகிய ந[illegible] அத்

—10ம் பக்க[illegible]ர்க்க

---

# கல்வி

தொழிலாளர் வர்க்கம் அதன் பரந்துபட்ட தூரகால நலன்களை மறந்து விட்டு வெறுமனே உடனடி பகுதி நலன்களை மட்டும் அவர்கள் பார்க்கக் கூடாது என்பதை அவர்கள் உணரும்படி தொழிற் சங்கங்களிலுள்ள தோழர்கள் மத்தியிலும், தொழிலாளர் மத்தியிலும் தொழிலாளர்களின் வெகு ஜனங்களின் மத்தியிலும் கல்வி கற்பிக்கப்படல் வேண்டும். —மா சே-துங்

# பொருளாதாரப் போராட்டம் அரசியல் போராட்டமாக மாற வேண்டும்

## சம்பள உயர்வுப் போராட்டத்தால் முதலாளித்துவத்தை ஒழிக்க முடியாது

◎ —9ம் பக்கத் தொடர்

துடன் நின்றுவிட முடியாது. தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நாம் இயக்கம் நடத்தவேண்டும் என்பது உண்மை. ஆனல், முதலாளித்துவ சமூக அமைப்பு ஒழிக்கப்படாமல், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் அடிப்படையான முன்னேற்றம் இருக்க முடியாது என்பதை நாம் உணரவேண்டும். அதாவது தொழிலாளர்களின் பொருளாதாரப் போராட்டம் ஏதோ ஒரு கட்டத்தில் அரசியல் போராட்டமாக சோஷலிஸத்திற்கான போராட்டமாக, தொழிலாள வர்க்கத்தை முதலாளி வர்க்கம் சுரண்டுகின்ற முறை ஒழிக்கப்படுகின்ற போராட்டமாக மாறவேண்டும் என்பதாகும்.

### அரசியலை முன் வைப்போம்

இந்த அரசியல் பாடத்தை நாம் எமது அங்கத்தவர்கள்



சி. டி. யூ. எப். பொருளாளர் தோழர் கே. குலவீரசிங்கம்

யாவருக்கும் போதிக்க வேண்டியது அவசியம். சதா காலமும் அரசியலை முன்னுக்கு வைக்க அவர்களை நாம் பழக்கிக்கொள்ளவேண்டும். சி. டி. யூ. எப். அங்கத்தவர்களை அரசியல் ரீதியில் வளர்த்தெடுப்பது எமக்கு முன்னுலுள்ள மிக முக்கிய கடமையாகும். ஏனைய தொழிற் சங்கங்களை விட நாம் கூடுதலாக அரசியல் பேசிவந்துள்ளபோதிலும் எமது அங்கத்தவர்கள் யாவரும் போதியளவு அரசியல் ரீதியாக வளர்ச்சி அடைந்துள்ளனர் என்று எம்மால் கூற முடியாது.

இத்துறையில் நாம் கூடுதலான வேலைசெய்ய வேண்டியுள்ளது. சமுதாய அமைப்பில் புரட்சிகர மாற்றம் ஏற்படாமல் வாழ்க்கைத் தரத்தில் அடிப்படையான வளர்ச்சி ஏற்படமுடியாது என்ற உண்மையை எமது அங்கத்தவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். தொழிலாளர்களினுல் மட்டும் இதனைச் சாதிக்க முடியாது என்பதையும் அவர்கள் உணரவேண்டும். அவர்கள் கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகளுடனும் தோட்டத் தொழிலாளர்களுடனும் ஐக்கியப்பட வேண்டும்.

எமது அங்கத்தவர்களில் பலர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். விவசாயிகளை அணிதிரட்டுவதிலும், தொழிலாளி—விவசாயி ஐக்கியம் உருவாக்குவதிலும், அதன்மூலம் எமது நாட்டின் பெரும் பகுதி மக்களை அணிதிரண்டும் பணியில் எமது அங்கத்தவர்கள் முன்னணியில் நிற்க வேண்மென எமது 18வது மாநாடு அறைகூவல் விடுக்கவேண்டும்.

பொதுவான ஓர் ஐக்கிய முன்னணியின் கீழ் தொழிலாளர்களையும் விவசாயிகளையும், புரட்சிகர புத்திஜீவிகளையும் சகல தேசபக்த, முற்போக்கு சக்திகளையும் அணிதிரட்டுவதில் தலைமைதாங்கும் கடமை தன்னுடையது என்பதை தொழிலாளர் வர்க்கம் உணரவேண்டும். நகரப்புறத் தொழிலாளர்களை மட்டும் அணிதிரட்டினல் போதாது என்பதை தொழிலாளர் வர்க்கம் உணரவேண்டும். நாம் கிராமப்புறங்களுக்குச் சென்று, நகரப்புறத் தொழிலாளர்களின் நெருங்கிய நண்பர்களான விவசாயிகளையும் தோட்டத் தொழிலாளர்களையும் அணிதிரட்ட வேண்டும். வெளிநாட்டு ஏகாதிபத்தியம் நிலப்பிரபுத்துவம், அவற்றின் அடிவருடிகள் ஆகியவற்றிற்கு எதிரான சகல சக்திகளின் உறுதியான ஐக்கிய முன்னணியின் மூலமாகத்தான் இந்தப் பிற்போக்கு சக்திகளை ஒழித்துக் கட்டமுடியும்.

### முதலாளித்துவ அமைப்பை ஒழித்துக் கட்டும் போராட்டம்

ஒரு தொழிற் சங்கத்தின் உடனடி நோக்கம் தனது அங்கத்தவர்களின் பொருளாதார, வாழ்க்கைத் தரத்தை சீர்படுத்துவது என்பது உண்மை. ஆனல் சி. டி. யூ. எப். தனது சட்ட திட்டங்களில், இலங்கையில் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவதை தனது நோக்கங்களில் ஒன்ருக பிரகடனம் செய்துள்ளது. இதன் பொருள், சுரண்டல் முறையை ஒழித்துக் கட்டல், முதலாளித்துவ அமைப்பைபே ஒழித்துக் கட்டல் என்பதேயன்றி வெறுமனே இன்னுமொரு சம்பள உயர்வு மட்டுமல்ல,

இந்த சமுதாய மாற்றம் ஏற்படக் கூடிய முறைகளையும் நாம் எமது அங்கத்தவர்களுக்குப் போதிக்க வேண்டும். தொழிலாளர்களின் வர்க்க உணர்வை மங்கச் செய்யவும், அவர்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்கவும் எண்ணி, வர்க்க சமரசத்தைப் போதித்ததன் மூலமும், பாராளுமன்றம் மூலமும் சமாதானமாக சோஷலிஸத்தை அடைய முடியும் என்ற தவருன கொள்கையைப் பரப்பியதன் மூலமும் சமசமாஜத் தலைவர்களும், கொமன் திரிபுவாதத் தலைவர்களும் மாபெரும் துரோகம் செய்து விட்டனர்.

முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகம் பற்றிய மயக்கத்திலிருந்து தொழிலாளர்களையும் சகல முற்போக்காளர்களையும் தெளிய வைப்பதற்கு பரந்த பிரச்சார இயக்கம் ஒன்று நடத்த வேண்டியது சி. டி. யூ. எப்-பிற்கு அவசியம். சமாதானமாக பாராளுமன்றம்மூலமாக தொழிலாளர் வர்க்கம் ஆட்சி பீடம் ஏறியதாக எந்த ஒரு நாட்டிலும் ஒருஉதாரணமேனும் கூற முடியாது.

பாராளுமன்றம் என்பது, மக்களை ஏமாற்ற, சமாதான மாற்றம் பற்றிய மயக்கத்தை பரப்பி அவர்களின் வர்க்க உணர்வை மழுங்கடிக்க, உண்மையான அதிகார பீடங்களான ஆயுதப் படைகளில் இருந்தும் ஏனைய முதலாளித்துவ அடக்கு முறை அரசு இயந்திரத்திலிருந்தும் மக்களின் கவனத்தை திசை திருப்ப, முதலாளி வர்க்கத்தினர் உருவாக்கிய ஆயுதம் என்பதை நாம் தொழிலாளர்களுக்குப் போதிக்க வேண்டும். பாராளுமன்றம் என்பது உண்மையில், ஆயுதந் தாங்கிய போராட்டத்திற்குப் பதிலாக வார்த்தைகளிலான போராட்டத்தை நிலை நிறுத்தும் முயற்சியேயாகும்.

> **அரசியல் வேலை**
>
> அரசியல் வேலையே சகல பொருளாதார வேலைகளுக்கும் ஜீவநாடி.
>
> -மா சே-துங்

இலங்கை இந்த பங்கலோட்டான பாராளுமன்றப் பாதையில் 36 வருடங்களுக்கு முன்பதாக காலடி எடுத்து வைத்தது. இந்தக் காலங்களில் பல கல்விமான்களும், திறமைசாலிகளும், இடது சாரிகள் எனப்படுவோரும் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டனர். இரு பண்டாரநாயக்க அரசாங்கங்களும் சமசமாஜிகள் சேர்ந்த கூட்டரசாங்கம் ஒன்றும் வந்து போயின. ஆனல் 36 வருடங்களுக்கு முன்னிருந்த தொழிலாளர்களையும், விவசாயிகளையும், சுரண்டும் அமைப்பு, இந்தக் கட்சிகள் யாவற்றினதும் நபர்களினதும் பாராளுமன்ற நடவடிக்கைகளினல் கொஞ்சமேனும் அசைக்கப் பட்டுள்ளதா? இல்லை என்றுதான் பதில் கூற வேண்டியுள்ளது. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம், ஒரு கபடமான முறை. தூர சிந்தனையுள்ள ஏகாதிபத்திய எஜமான், எமது மக்களை ஏமாற்றி, பிரித்து வைத்து புரட்சிகரப் பாதையில் செல்வதை தடுப்பதற்காக எம்மேல் திணித்துள்ள ஒரு கருவி.

### உண்மை அதிகாரம் இருக்கும் இடம்


தொழிலாளர் வர்க்கமும் அதன் சகாக்களும் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, எந்த ஒரு நாட்டிலும் உண்மையான அதிகாரம் வெறும் பேச்சுத் திண்ணையான பாராளுமன்றத்தில் இல்லை அடக்குமுறை அரசு இயந்திரத்தில் குறிப்பாக ஆயுதப் படைகளில் தான் உள்ளது. சுரண்டும் முறையை தூக்கி எறிய ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் முயற்சிக்கும் போது, அந்த முயற்சிகளை நசுக்குவதற்கு தயாராக பூரணப்படுத்தி வைத்திருக்கும் ஆயுதம்; வேலை நிறுத்தங்கள் நடைபெறும் காலங்களில் முதலாளியையும் அவனது உடமைகளையும் பாதுகாக்க பொலிஸ் அல்லது போர்ப் படையினர் துப்பாக்கியுடன் காவல் புரியும் போது தொழிலாளர்கள் இதனை இலகுவில் புரிந்து கொள்வர். இவர்கள்தான் முதலாளித்துவத்தின் காவல் நாய்கள்.

இந்த அடக்கு முறை அரசு இயந்திரத்தை தூக்கி எறியாமல் துப்பாக்கிகள் தொழிலாளர் களினதும் விவசாயிகளினதும் கைக்கு மாருமல் அதாவது புரட்சி இல்லாமல், புதிய பாட்டாளி வர்க்க அரசு இயந்திரம் ஒன்றை உருவாக்காமல், தொழிலாளர் வர்க்கம் ஒரு போதும் சோஷலிஸத்தை அடைய முடியாது. ஆதலால் தான் தோழர் மா சே—துங் ''அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழாய்க்குள் இருந்து தான் பிறக்கிறது'' என்று தெளிவாக எமக்குப் போதித்துள்ளார், இதைவிட உண்மையான வார்த்தை வேறேதுமில்லை.

இவ்வளவு பொருத்தமான வார்த்தை இதற்கு முன் கூறப் பட்டதில்லை. அதன் உண்மையை புரிந்துகொண்டு சகல தொழிலாளர்களுக்கும் புரட்சிவாதிகட்கும் அதனைப் புகட்ட வேண்டும். இது எமக்கு முன்னுலுள்ள மிக முக்கிய கடமைகளில் ஒன்ருகும்.

அழிவின்றேல் ஆக்கமில்லை. இன்று தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியிலும் முற்போக்கு சக்திகள் மத்தியிலும் முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் பற்றியும், சமாதான மாற்றம் ஏற்பட முடியும் என்பது பற்றியும் உள்ள மயக்கத்தை ஒழித்துக்கட்டாமல், அவர்களை புரட்சிகரப் பாதையில் அழைத்துச் செல்ல முடியாது.

வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், எமது அங்கத்தவர்களை பரவலாகவும் ஒழுங்காகவும் அரசியல் மயப்படுத்தல்



சி. டி. யூ. எப். உதவிச் செயலாளர் தோழர் ஏ. ஆர். எட்மண்ட்

எமது சம்மேளனத்தின் உணர்வுபூர்வமான நோக்கமாயிருத்தல் வேண்டும். அவர்களது அரசியல் உணர்வை ஆழமாக்கி அவர்களது வர்க்க உணர்வையும் எதிரிக்கு மேல் உள்ள வர்க்க ரீதியிலான வெறுப்புணர்ச்சியையும் உயர்த்த வேண்டும். விவசாயிகளுடனும் கிராமப்புற மக்களுடனும் ஐக்கியப்பட வேண்டிய அவசியத்தை நாம்

— 11ம் பக்கம் பார்க்க

# எமது அங்கத்தவர்களை அரசியல் ரீதியில் வளர்த்தெடுப்போம்!

— 10-ம் பக்கத் தொடர்


அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அப்படியான அடிப்படையில் மட்டும் தான் நாம் புதியதோர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முடியும். அதன் மூலம் புதிய தலைமை தோன்றும். அதன் மூலம் புதுப் புது புரட்சிகரப் போராட்டங்கள் தோன்றும்.

அறிக்கைக்குரிய காலகட்டத்தில் சி. டி. யூ. எப்-பின் அங்கத்தவர்கள் கணிசமான அளவு அதிகரித்துள்ளனர். பிரதானமாக இந்த அதிகரிப்பு எமது இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் (செங் கொடிச் சங்கத்தில்) ஏற்பட்டுள்ளது. அது வர்க்க சமரசம் பேசும் தொண்டமானுடைய இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு மாற்ருன ஒரே ஒரு சங்கமாக வளர்ந்துள்ளது. நல்ல தொழிற்சங்க வேலை செய்வதன் மூலமும் தொண்டமான் அரசியல் ரீதியிலும், பொருளாதாரக் கோரிக்கைகள் வென்றெடுக்கும் ரீதியிலும் தோட்டத் தொழிலாளர்களுக்குச் செய்த துரோகத்தை அம்பலப் படுத்துவதன் மூலமும், மலைநாட்டு தோட்டப் பகுதிகளில் எமது செங்கொடிச் சங்கம் துரிதமான வளர்ச்சிஅடையக்கூடிய சிறந்த சூழ்நிலை இருக்கின்றது. சப்ரகமுவ மாகாணத்திலும் கணிசமானத் தோட்டத் தொழிலாளர்கள் எமது சங்கத்தில் சேர்ந்துள்ளனர். நாவலப்பிட்டி, அக்கரபத்தனை, நுவரேலியா போன்ற இடங்களிலெல்லாம் மேலதிகமாக சங்கக் காரியாலயங்கள் திறக்கப் பட்டுள்ளன.

நாம் முன்னேறியுள்ள இன்னுமோர் துறை அச்சகத் தொழில் துறையாகும். பல ஸ்தாபனங்களில் இருந்து தொழிலாளர்கள் எமது சங்கத்தில் சேர்ந்துள்ளனர். குறுகிய காலம் பிரிந்திருந்த பின் மறுபடியும் எமதணியில் சேர்ந்துள்ள போனஸ்லிமிடட் ஸ்தாபன தொழிலாளர்களையும் நாம் வரவேற்கின்ருேம். சேர்ந்ததற்கு அவர்கள் பெரும் விலை கொடுக்க வேண்டியுள்ளது. அவர்களது முதலாளிகளின் ஆத்திரத்தை அது தூண்டிவிட்டுள்ளது. இத் தொழிலாளர்களை ஒட்டிய பல தொழில் தகராறுகளும் வழக்குகளும் இருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில் நாம் அவர்களுடன் தோளோடு தோள் நின்று அவர்களுக்காக இறுதிவரை போராடுவோமென உறுதி கூறுகின்ருேம். கடந்த வேலை நிறுத்தத்தில் பங்குபற்றியகாக பழிவாங்கப்பட்டுள்ள சிலோன் டயர் கிருப்ட், சில்வர் கிறவுண் பிரிண்டர்ஸ் ஆகியவற்றின் தொழிலாளர்களுக்கும் இதேபோல் உறுதி கூறுகின்ருேம்.

## எமது பொருளாதார ரீதியான வெற்றிகள்

அறிக்கைக்குரிய கால கட்டத்தில் சி. டி. யூ. எப். தனது அங்கத்தவர்களுக்காக பல பொருளாதார வெற்றிகளை பெற்றதில் பெருமை கொள்கின்றது. இவற்றில் மிகவும் சிறப்பான தொன்றுதான் 1967ம் ஆண்டு செப்டம்பர் 14ம் திகதி எமது இலங்கை சினிமா அன் பிலிம் ஸ்டுடியோ ஊழியர் சங்கத்திற்கும், பிரதான சினிமாக் கம்பனிகளான சிலோன் தியேட்டர்ஸ், சினிமாஸ், சிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ், லிபர்டி சினிமாஸ், சவோய் ஆகியோருடன் கைசாத்திட்ட கூட்டு ஒப்பந்தமாகும்.



சி. டி. யூ. எப்
உதவிச் செயலாளர்
தோழர் எம். சி. எம் ஷாபி

இந்த ஒப்பந்தத்தின்படி வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் கொழும்பு வாழ்க்கைச் செலவு புள்ளி விபரத்தின் அன்று-மட்டத்தில் கணக்கிடப்படுமென்றும், தொழிலாளர்கள் பெற்ற சம்பள உயர்வுகள் உட்பட உண்மையான அடிப்படைச் சம்பளத்தில் கணக்கிடப்படும் எனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அத்துடன் அரசாங்க அளவு பஞ்சப்படியும் கொடுக்கப்படுமென ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்த 1967ம் ஆண்டு ஜுலை மாதத்தில் இருந்து அமுலாக்கப்படும் எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் காரணமாக சினிமா ஊழியர்களுக்கு சாதாரணமாக மாதம் 25/- ரூபா மட்டில் கூடுதலாகக் கிடைத்தது. சிலருக்கு 85/- ரூபா வரை கூடுதலாகக் கிடைத்தது. இது அண்மையில் எந்தத் தொழிலாளரும் வென்றிராத கூடுதலான சம்பள உயர்வாகும்.

அச்சகத்தொழிலாளர்கட்கு அரசாங்க அளவு விசேஷ அலவன்ஸ் கொடுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வெகு காலமாக இருந்து வந்தது. 1966 அக்டோபரில் வெற்றிகரமான தீர்வுகாணக்கூடியதாயும் இருந்தது. மோட்லேக் அச்சகத்தில் இக்கோரிக்கைக்கு ஆதரவாக நடைபெற்ற ஓர் வேலை நிறுத்தத்தின் விளைவாக இப்பிரச்சினை தொழில் நீதிமன்றத்திற்கு விடப்பட்டது. அங்கு நாம் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடன் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தியதன் மூலம் அச்சகத் தொழில் சம்பள நிர்ணய சபையில் இருந்த சி. டி. யூ. எப். அங்கத்தவர் கொண்டுவந்து வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி அச்சகத் தொழிலாளர்கள் யாவருக்கும் அரசாங்க அளவு பஞ்சப்படி கொடுப்பதென முடிவெடுக்கப்பட்டது.

சென்ற வருடம், என்ஜினியரிங், தேயிலை, றப்பர் ஏற்றுமதி வர்த்தகம் ஆகியவற்றிற்கான சம்பள நிர்ணய சபைகளின் சி. டி. யூ. எப். அங்கத்தவர்கள் இந்த சம்பள நிர்ணய சபைகள் மூலம், இச் சபைகளின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கிய சகல தொழிலாளர்களுக்கும் சராசரி நாளுக்கு 1/- ரூபா சம்பள உயர்வு கொடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் வெற்றி கண்டுள்ளனர். என்ஜினியரிங் தொழிலில் உள்ள பயிற்றப்பட்ட தொழிலாளர்களுக்கு நாளுக்கு 1/35 சம்பள உயர்வு கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த குறைந்தபட்ச சம்பள அடிப்படையில் தான் முதலாளிமார் சம்மேளனம் தமது ஊழியர்களுக்கு, பலதரப்பட்ட தொழிலாளர்களுக்கு நாளுக்கு 30 சதம் முதல் 45 சதம் வரை சம்பள உயர்வு வழங்கியது. சி. டி. யூ. எப். இச் சம்பள உயர்வினுல் திருப்தி அடையவில்லை. ஏனெனில் அரசாங்கம் அவ்வேளையில் தனது ஊழியர்களுக்கு நாளுக்கு 75 சதம் சம்பள உயர்வு கொடுத்துவிட்டது. இந்தச் சம்பள உயர்வு போதாதென்ற போதிலும், முதலாளிகள் சம்மேளனம் குறைந்தபட்சம் அரசாங்கத்தையாவது பின்பற்றி நடக்கவேண்டுமென சி. டி. யூ. எப். கோரியது.

நாம் முதலாளிமார் சம்மேளனத்துடன் இன்னுமொரு பேச்சுவார்த்தையை கிட்டத்தட்ட முடித்து ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தும் தறுவாயிலுள்ளோம். இதன்படி எமது அங்கத்தவர்களுக்கு முதலாளிகள் கொடுக்கும் புரவிடன்பண்ட் ஆறு சத விகிதத்தில் இருந்து எட்டு சத விகிதத்தில் உயர்த்தப்படுவதுடன் தொழிலாளர்களின் பங்கு நான்கு சத விகிதத்தில் இருந்து ஆறு சத விகிதத்திற்கு உயர்த்தப்படும். இனிமேல் ஊழியர் சேமலாப நிதி. (புரவிடன்பண்ட்)

> **முற்போக்கான கட்சி**
>
> **உலகிலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் கட்சிகளில் கம்யூனிஸ்ட் கட்சி தான் உறுதி படைத்த, மிக முற்போக்கான கட்சி.**
>
> **-கார்ல் மார்க்ஸ்**

## ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், யூ. என். பி. ஆகியவற்றை முறியடிக்க முன் செல்வோம்!

தோன்றுவதற்கு முன் உள்ள சேவைக்காகக் கொடுக்கப்படும் பணம் ஒரு வருட சேவைக்கு இரண்டுவார மொத்தச் சம்பளம் என்று கணக்கிடப்படும். இன்று ஒரு வருட சேவைக்கு பதினெட்டு நாள் அடிப்படைச் சம்பளம் தான் கணக்கிடப்படுகின்றது. ஆனல் புதிய திட்டத்தின்படி 1959 மே மாதம் முதலாம் திகதி கொடுக்கப்படும் மொத்தச் சம்பளத்தில் கணக்கிடப்படும் என்பதனால் இரு பெரும் சம்பளஉயர் வாகும்.

முதலாளிமார் சம்மேளத்னதுடன் 1958-ல் ஏற்படுத்திய கூட்டு ஒப்பந்தத்தில் கண்டுள்ளபடி பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும் என்ற அடிப்படையில் முதலாளிமார் சம்மேளனம் எமது அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தை செக்ருேலில் கழித்துத் தரவும் சம்மதித்துள்ளது.

விரைவில் நாம் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இருக்கின்ருேம். இது ஒரு பெரும் வெற்றி என்றே கூறவேண்டும்

தனியார் துறைத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளதன் காரணமாகவும் நாணய மதிப் பிறக்கத்தின் காரணமாகவும் அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் அளவில் அதாவது நாளுக்கு 1-35 சதம் அல்லது மாதம் 35 ரூபா கொடுக்கப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கை தொழில் நீதிமன்றத்தின் முடிவுக்கு விடப்பட்டுள்ளதால் நாம் வருங்காலத்தையும் மனதிற் கொள்ளவேண்டும்.

உண்மையான தொழில் உற்பத்தியில் ஈடுபடுகின்ற காரணத்தால் தொழிலாளர்கள் கம்பனிகளின் அதிகப்படியான லாபத்தைப் பெற்றுத் தருகின்றனர் என்ற பொழுதிலும் ஒரே முதலாளியின் கீழ் உடல் உழைப்பாளிகளுக்கும் லிகிதர் சேவைகளில் உள்ளவர்களுக்கும் பெரும் வேறுபாடு நிலவுகின்றது. ஒரு உதாரணத்தை இங்கு எடுத்துப் பார்ப்போம் தேயிலைக் கம்பனியில் காரியாலயத்தில் வேலை செய்கின்ற காரியாலய பியூன் அல்லது டீ போய் ஒருவனுக்கு ஆரம்பச் சம்பளம் மாதம் 160 ரூபாவும் நாணய மதிப்பிறக்க அலவன்சாக மேலும் 10 ரூபாவும் பெருகின்ருன். 26 வேலை நாட்கள் அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு நாளுக்கு 6 ரூபா 50 சதம் பெறுகின்ருன். அதே கம்பனியில் கீழே கிட்டங்கியில் வேலை செய்கின்ற இரண்டாந்தா பயிற்றப்படாத (கிறேட் II அன்ஸ்கில்ட் லேபர்) நாள் ஒன்றுக்கு 4/50 சதமும் நாணய மதிப் பிறக்க அலவன்ஸ் 40 சதமும் பெறுகின்ருன். இவ்விரு தொழிலாளர்களின் சம்பளத்தில் 1/60 சத வேற்றுமை இருக்கின்றது. இது பெரும் அநியாயமாகும். மூதலாம்தர பாரம் தூக்கும் தொழிலாளியின் சம்பளத்தை எடுத்துக் கொண்டாலும் அவனுக்குக்

16-ம் பக்கம் பார்க்க

# சாதிக் கோட்டை சரிந்து வருகிறது!

# அதன் வீழ்ச்சியைத் துரிதப்படுத்துவோம்!

## தீண்டாமை ஒழிப்பு

### வெகுஜன இயக்கம் அறிக்கை

தியாகங்கள் என்றுமே வீண்போனதில்லை. தியாகி முதலி சின்னத்தம்பியின் தியாகநாளை மையமாக வைத்துக் கொண்டு பார்த்தால் அதற்கு முன்னும், அதைத் தொடர்ந்தும் உயிர் தியாகங்களும், இரத்தச் சொட்டுக்களும் சிந்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகும். அந்தத் தியாகங்களை யெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் அவைகளுக்கும் இன்றைய நிலைக்கும் ஒட்டுறவு இல்லாத வகையில் பிரசாரம் செய்ய முற்படுபவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் தொடர்ச்சியான விடுதலைப் போரைச் சரியான முறையில் கணக்கெடுத்துக் கொள்ளாதவர்களாவார்கள்.

ஒவ்வோர் காலகட்டத்திலும் அப்போதைக் கப்போது ஏற்பட்ட போராட்ட முறைகளுக் கூடாகத்தான் உரிமைகளை வென்றெடுக்கவும் அவைகளை ஸ்திரப்படுத்தவும் முடிந்ததென்பதை சகலரும் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். பாராளுமன்றத்தில் சாதிக் குறைபாடுகள் நீக்க மசோதா கொண்டுவரப்படுவதற்கு முன்பதாகவே சங்கானை ஆலயப் பிரவேச வழக்கு உயர் நீதிமன்றம் வரை சென்றதென்பதையும், ஆலயப் பிரவேசத்திற்கான அந்த உயர் நீதிமன்றத் தீர்ப்பை அடுத்துச் செய்யப்பட்ட கிளர்ச்சிகளும் இயக்கங்களும் தான் நல்லூர்க்கந்தன் ஆலயம், சிவன்கோவில், பெருமாள்கோவில் ஆகியவை திறப்பதற்கான நிலையை ஏற்படுத்தியதென்பதையும், 1956ம் ஆண்டை அடுத்து யாழ் நகரில் தேநீர்க்கடைப் பிரவேசம் வெற்றியளித்ததும், அப்போது செய்யப்பட்ட கிளர்ச்சிகளின் பலாபலன்தான் என்பதையும் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். எனவே போராட்டங்கள் ஓய்ந்து நிற்கவில்லை. போராட்டங்களால் சிந்தப்பட்ட இரத்தங்களு வீண்போனதில்லை. இப்போது மிகக்கடினமான நிலையில் இந்து ஆலயக் கதவுகளும் திறப்பதற்கான ஒரு சூழ் நிலை ஏற்பட்டிருக்கின்றதென்றால் அதுவும் தானக ஏற்பட்ட தொன்றல்ல. சமீபத்தில் இரத்த சாட்சிகளான சின்னர் கார்த்திகேசு, குமரேசு, இரத்தினம் ஆகியோர் சாதிக் கோட்டைக்குக் கொடுத்த மூச்சான தாக்குதல்தான் இத்தகைய நிலைக்கான சூழ்நிலையைச் சிருஷ்டித்துள்ளதென்பதை யாராலுமே ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது. இதை ஒப்ப மறுக்கும் சிலர் இன்னும் வீராப்புப் பேசி நிற்பதும், ''சாதி வெறியைப் போக்க அந்நியர் தலையீடு ஏன்?'' என்று கேட்பதும், ''ஓர் அரசியல் கட்சியின் போர்ப்பயிற்சியேயொழிய வேறில்லை'' என்று நாலும்பத்தும் தெரிந்த எம். பி.க்கள் என்போர் அறிக்கைகள் விடுவதும் விந்தையானவையாகும்.

### மன மாற்றம் ஏன்?

ஒடுக்கப்பட்ட மக்களை 'மலம்' என்று பேசியவர்களும் ''செத்தாலும் சின்னச்சாதிக்காரனை ஆலயத்துள் அனுமதித்து ஆகமவிதிகளை மீறேன்'' என்று சபதமெடுத்த ஆதின கர்த்தாக்களும் எப்படி மனம் மாறினார்கள்? ''மனமாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் மூலைக்கு மூலை சங்கானைகள் பல தோன்றும்'' என்று. ஆதின கர்த்தாக்களின் கூட்டத்தில் ஒரு பிரமுகர் சுட்டிக்காட்டியிருப்பது ஒடுக்கப்பட்டோரின் கவனத்திற் குரியதாகும்.

பல மாதங்கள் தொடர்ச்சியாக சங்கானைப் போராட்டம் நடக்கின்றது. இரு உயிர்கள் பலியிடப்பட்டு விட்டன. வீராங்கனை உட்பட 15 பேர்கள்வரை சுடப்பட்டனர். வீடுகள் எரிக்கப்பட்டன, உடைமைகள் அழிக்கப்பட்டன. ஆனாலும் அந்த மக்கள் வீராவேசத்துடன் தொடர்ந்து போராடியே வருகின்றனர். அவர்களது தொடர்ச்சியான போராட்டத்தின் நோக்கம் என்ன? ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் கூட அவ்வப்போது போராட்டங்களின் மூலமே கிடைத்தன. 1931-ம் ஆண்டில் இதே சங்கானை மக்கள் பிணத்தை சுடலையில் எரிப்பதற்கு போராட்டம் நடத்தி இறுதியில் அவ் உரிமையை வென்றெடுத்தனர். சங்கானை சுடலைப் போராட்டத்தை தொடர்ந்துதான் 1944-ம் ஆண்டு வில்லூண்டிச் சுடலைக்கான போராட்டம் நடைபெற்று வெற்றியீட்டப்பட்டது. இந்த அனுபவ பூர்வமான கடந்த கால நடவடிக்கைகளில் இருந்து பல விஷயங்களை மக்கள் அறிந்துள்ளார்கள். சங்கானையில் சாதி வெறி வீழ்ந்தால் நாடெங்கிலும் சாதி வெறி சாயும் நிலைமைகள் உருவாகும் என்பது அனுபவ பூர்வமாக உண்மைப் பட்டு வருகின்றது.

மிகச் சமீபத்தில் கொடிகாமத்தின் இரத்த சாட்சியாகிய இரத்தினமும், அதற்கு முன்பதாக சங்கானையின் இரத்த சாட்சிகளான குமரேசு, சின்னர் கார்த்திகேசு ஆகியோரும், அதற்கும் முன்னதாக பளையின் இரத்த சாட்சியான வீராங்கனை இலட்சுமியும், இவற்றுக் கெல்லாம் முன்னதாக வில்லூண்டியில் இரத்த சாட்சியான முதலி சின்னத்தம்பியும், காரணங்கள் கற்பிக்கப்படாமல் நாட்டின் பல பாகங்களிலும் இரத்த சாட்சிகளாகி விட்ட எண்ணற்றோரும் ஒரே அரசியல் நோக்குடையவர்களல்லவாயினும் ஒரே இலக்கை நோக்கித்தான் இரத்த சாட்சிகளாயினர். இந்தத் தியாக வழியின் தொடர்ச்சியான போராட்டமே இப்போது நடந்து வருகிறது.

ஆலயப் பிரவேசப் போராட்டம் தனித்த ஒரு போராட்டமா? ஒடுக்கப்பட்ட மக்களின் சகல உரிமைப் போராட்டங்களில் இதுவும் ஒன்று, சங்கானை, அச்சுவேலி, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் பரவலாக எழுந்த பொதுப் போராட்ட உணர்வு சங்கானையில், கோவில், தேநீர்க்கடைப் போராட்டமாகப் பேருருவம் எடுத்தமைதான் மாவிட்டபுரம் போன்ற பேராதீனக் கதவுகளை அசைத்திருக்கிறது: பேசாத நாவுகளைப் பேசவைத்திருக்கிறது; அசையாத மனதுகளை அசைய வைத்திருக்கிறது. எனவேதான் தேநீர்க்கடை போராட்டமே ஆலயப் போராட்டம், ஆலயப்போராட்டமே தேநீர்க்கடைப் போராட்டம், இவைகள் உள்ளடக்கப்பட்டவையே, ஒடுக்கப்பட்ட மக்கள் பரிபூரண சுதந்திரம் பெறுவதற்கான முடிவான அரசியல் போராட்டமாகும்.

### ஒடுக்கப்பட்டோரே, நல்லெண்ணம் கொண்டோரே!

இரத்த சாட்சிகளாகி விட்டவர்கள் சாதிக் கோட்டையின் அடித்தளத்தை அசைத்துச் சென்று விட்டனர். எமக்குள்ள கடமை அதைச் சரித்து தரைமட்டத்திற்கு ஆக்கிவிடுவதே! அதை நாம் செய்ய வேண்டும்.

சமீபத்தில் அரசாங்க அதிபரால் கூட்டப்பட்ட கூட்டத்தில் கோவில் உபயகாரர்களையும் எஜமானர்களையும் அரசாங்க அதிபர் அழைத்துப் பேச வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் பட்டுள்ளது. மேலும் மேலும் காலதாமதத்தை ஏற்படுத்துவதன் மூலம் பிற்போக்காளர்கள் தங்களைத் தயார் செய்வதற்கு அவகாசம் தேடிக்கொண்டனர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு சிறு அளவு மன ஆறுதலை உண்டாக்குவதன் மூலம் போராடி நிற்பவர்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பி விடுவதற்கான வழியாகவும். சமீபத்தைய சம்பவங்களால் சீற்றமடைந்து நிற்கும் வாலிபப் போராளிகளின் கண்களில் மண்ணைத் தூவி விடவும் இச்சந்தர்ப்பம் பாவிக்கக்கப்படாமல் இருக்க போராட்ட அணிகள் எங்கும் அமைக்கப்படல் வேண்டும்.

16-ம்பக்கம் பார்க்க

---

## 'ஹோப்' பிற்கென ஒரு தத்துவம்

—4-ம் பக்கத் தொடர்

அரசாங்கம் இவர்களின் லாப இலக்கைக் கட்டுப்படுத்தலாமே என முதலைக் கண்ணீர் விடுகின்றது. அடிக்கடி ஆளும் கட்சியைத் தாக்கி விமர்சித்து எழுதுவதாக மக்களை ஏமாற்றுகின்றது ஒப்சேவர். சரி குறைகளை எடுத்துக் காட்டிய ஒப்சேவர், அதற்கு ஏன் தக்க மாற்று நடவடிக்கைகளைக் கூறவில்லை! எப்படிக் கூறமுடியும். ஏரிக் கரையும், யூதர் ஆட்சியும் சேர்ந்து வளர்க்கும் முதலாளித்துவத்தில் இதற்கு மருந்து கிடைக்குமா,? சோஷலிஸ அமைப்பின் கீழ் கைத்தொழிற் துறைகளை முதலாளிகளிடமிருந்து விடுவித்து நாட்டின் பொதுச் சொத்தாக்குவதே இதற்கான ஒரே யொரு மருந்து. இதை ஏரிக் கரை கூறுமா? சோழியன் குடும்பி சும்மா ஆடாதே! ஏரிக் கரையின் குமுறலுக்கும் காரணம் உண்டு. உள்ளூர் முதலாளிகளிலும் பார்க்க அந்நிய முதலாளிகளும் அவர்களின் ரக்குகளும் மலிவானவை சிறந்தவை என்பதை மறைமுகமாகக் காட்டுவதே ஏரிக் கரையின் பணி. உள் நாட்டு முதலாளித்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் உள்ள முரண்பாடுகளையே இங்கும் காண்கிறோம். டட்லி மாமாவின் பாட்டை வேறு ராகத்தில் பாடுகின்றது ஏரிக்கரை. அவ்வளவுதான் வேறுபாடு.

ஏகாதிபத்தியமே முதலாளித்துவத்தின் உச்ச கட்டம் என்ற மாமேதை லெனின் கூற்றை நாம் எங்கும் அனுபவ ரீதியாக காணலாம். முதலாளிவர்க்க சார்பில் தோன்றி ஆட்சியைக் கைப்பற்றி அரசியல் கட்சிகள் யாவும் கடைசியில் ஏகாதிபத்தியத்துக்கே சரணடைகின்றன. இதுவே வரலாற்று உண்மை.

★

### "மார்க்சிஸத் தந்தை பென்ஷன்"

சென்ற வாரம் அவிசாவலையில் பழைய மாக்சிஸவாதி திருவாளர் பிலிப் அவர்கள் கடந்த 36 வருடமாக மக்களுக்கு சேவை செய்தும் மாக்சிஸ அறிவை வளர்த்தும் தன் வாழ் நாளை செலவு செய்து விட்டதாகவும், மக்கள் அதற்கு பதிலளிக்கும் முகமாக கடந்த 32 வருடங்களாக தன்னை பாராளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளார்கள் என்றும் கூறியுள்ளார். தான் இப்போ கிழண்டி விட்டதாகவும் தன் சேவையைத் தொடர்ந்து செய்வதற்கு தன் பிள்ளைகளில் ஒருவரை அழைக்குமாறு ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார் இதன் உண்மையான அர்த்தம் யாதெனில் தான் தொடர்ந்து வகித்த பாராளுமன்றப் பதவியை தன் பிள்ளைகளுக்கு கொடுக்குமாறு மக்களை வேண்டுகிறார். மேலும் தான் எந்த விதமான மாக்சிஸ அறிவையும், உணர்வையும் மக்களுக்கு போதித்துள்ளார் என்பதும் வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது. இவரின் சேவையைப் புரிந்து கொண்ட வெளிநாட்டு முதலாளித்துவ, ஏகாதிபத்திய வாதிகளின் செல்லப்பிள்ளையான திரு டட்லி மாமாவும் இதனைப் பெரிதும் புகழ்ந்துள்ளார். ஆனல் உண்மையில் பிலிப் அவர்கள் என்றுமே மாக்சிஸவாதியாக இருந்தது இல்லை என்றும், இவருடைய பழங்காலத்தில் தீவிர இடதுசாரிக் கொள்கையைக் கைப்பற்றி, இப்போது தன்னை படு தீவிர முதலாளித்துவக் கொள்கைக்கு தன்னை அடகு வைத்துள்ளார் என்பது அரசியல் மனம் உள்ள எவருக்கும் தெரியும். மேலும் தன்னுடைய சொத்தை எல்லாம் இழந்து விட்டதாகவும் ஒப்பாரி வைத்துள்ளார். ஆனல் இவருடைய நிகழ்கால நடவடிக்கைகளைப் பற்றி அக் கூட்டத்தில் பேசிக் கொண்ட சிலவற்றையும் சற்று பார்ப்போம். இப்போ அவிசாவலைத் தொகுதியில் கடந்த காலங்களாக நூல் நிலையம் குழாய் நீர்த்திட்டம், அது மட்டுமல்ல அங்கு லேலன்டஸ் கொம்பனி உதவியுடன் லேலன்ட்ஸ் இ. போ. ச. எஞ்சினியரிங் நிலையம் கட்டப் போவதாகவும் அதற்கு வேண்டிய ஆயத்தங்களெல்லாம் செய்கிறார்களாம், அத்துடன் அதற்கு மனேஜராக இருப்பதற்கு தன் மருமக்களில் ஒருவரையும், சீமையிலுள்ள லேலன்ட்ஸ் கொம்பனியில் பயிற்சி பெற அனுப்பியுள்ளாராம். இத் திட்டம் அமுலாவதன் மூலம் அவர் தன் தொகுதியை தன் பிள்ளைகளில் ஒருவருக்கும் மற்றும் பிள்ளைகளுக்கும் சொந்தக்காரருக்கும் நல்ல உத்தியோக வாய்ப்பையும் ஏற்படுத்தி வருகின்றார். இச் செயலின் மறு பக்கத்தைப் பார்த்தால் இது இ. போ. ச. வை முறியடிப்பதற்கும் அதாவது முந்திய அரசாங்கம் செய்த சில முற்போக்குக் காரியங்களை முறியடித்து நாட்டின் பொருளாதாரத்தை ஏகாதிபத்திய முதலாளிகட்கு அடகு வைப்பதில் உள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. பொருளாதார ரீதியாகவும் கூட இத் தொழிற்சாலை நிறுவுவதாயின் இதற்குத் தகுந்த இடம் ரத்மலானை அல்லது எக்கலை போன்ற இடம் என்பது எவருக்கும் தெரிந்த விஷயம். இது இவருடைய குறுகிய கட்டுேட்டத்தையே காட்டுகின்றது. இது இவருக்கு மட்டுமல்ல இது முதலாளித்துவ பண்புகளில் முக்கியமான ஒன்ருகும்.

# மா சே-துங் சிந்தனை எமது சித்தாந்த அணுகுண்டாகும்

**சர்வ வல்லமையுள்ள உண்மைகளான மார்க்சிஸம்-லெனினிஸமும் மா சே-துங் சிந்தனையும் உலக ரீதியான அங்கீகாரத்தையும், புகழையும் அடைந்து வரும் வேளையில், உலக ஏகாதிபத்தியம் பூரணமாக சரிந்து விழப்போகின்ற வேளையில், சோஷலிஸம் உலகம் பரந்த வெற்றியை நோக்கிச் செல்கின்ற வேளையில், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கக் கண்டங்களில் புரட்சித் தீ பற்றி சுவாலை விட்டெறிந்து கொண்டிருக்கும் வேளையில், வீரமிக்க வியட்நாமிய மக்கள் காட்டுமிராண்டித்தனமான அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் யுத்தம் நடத்தி வெற்றியை நெருங்கி வருகின்ற தறுவாயில் மா சே-துங் சிந்தனையின் வழிகாட்டலின் கீழ், லாவோஸ், பர்மா தாய்லாந்து, இந்தோனேஷியா, இந்தியா, அங்கோலா, கொங்கோ மற்றும் பல லத்தீன் அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில், ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களின் ஏவல் நாய்களுக்கும் எதிராக ஏற்கனவே ஆயுதந் தாங்கிய போராட்டம் வெடித்துள்ள வேளையில் எமது கட்சியின் ஒன்பதாவது மாநாடு நடைபெறுகின்றது.**

வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் உலகில், குறிப்பாக உலகின் எமது பகுதியில், புரட்சிகர நிலைமை மிகச் சிறந்ததாய் உள்ளது:

எமது கடந்த மாநாட்டைத் தொடர்ந்த வருடங்களில் உலக ஏகாதிபத்தியத்தின் பொதுவான நெருக்கடி படிப்படியாக மோசமடைந்து வந்துள்ளதுடன் இன்று நிலைமை படுமோசமாகியுள்ளது. வியட்நாமிய மக்களின் வீரமிக்க எதிர்ப்புப் போராட்டம் அமெரிக்காவிற்குள் பொருளாதார நெருக்கடியைத் துரிதப்படுத்தியுள்ளது. நாசகரமான ஆக்கிரமிப்பு யுத்தத்தின் காரணமாக பொருளாதார செல்வங்களை அள்ளி வீசியதன் காரணமாக அமெரிக்க டாலரின் உறுதியை உருக்குலையச் செய்துள்ளது. ஏகாதிபத்திய உலகின் இரண்டாவது மிக முக்கியமான நாணயமான பவுன் ஸ்டாலிங் நாணய மதிப்பிறக்கம் செய்யப்பட்டதும், டாலர் கூட மதிப்பிறக்கம் செய்யப்படவிருப்பதாக உள்ள நிலையும், உலக ஏகாதிபத்தியத்தை சூழ்ந்துள்ள ஆழமான பொருளாதார நெருக்கடிக்கு அறிகுறிகளாய் உள்ளன.

### ஏகாதிபத்திய வாதிகளிடையே முரண்பாடுகள்

ஏகாதிபத்திய வாதிகளிடையிலான முரண்பாடுகளும் துரிதமாக வளர்ந்துள்ளன. பிரஞ்சு — அமெரிக்க முரண்பாடுகளும், ஆங்கில-பிரஞ்சு அபிப்பிராய பேதங்களும்கூட உலக ஏகாதிபத்தியத்தின் மேல் தொற்றியுள்ள நோயின் அறிகுறிகளேயாகும். அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமுக்கு எதிராக தான் நடத்துகின்ற ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு ஆதரவாக தனது மேற்கு ஐரோப்பிய நேச நாடுகளை படை பலத்துடன் அணிதிரட்ட முடியாமல்போனதே இதன் அரசியல் விளைவுகளின் பிரதிபலிப்பாகும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது படைகளை சூயஸ் கால்வாய்க்குக் கிழக்குப் பகுதிகளில் இருந்து வாபஸ் பெறுவதற்கு எடுத்த முடிவு, இரண்டாவது பெரும் ஏகாதிபத்திய வல்லரசு நெருக்கடிக்குள்ளாகிவிட்டதை ஏற்றுக்கொள்வதாய் அமைந்துள்ளது. உலக ஏகாதிபத்தியத்தின் பூகோள மூல உபாயத்தைப் பாரதூரமாகப் பாதித்துள்ளது. உலகத்தின் ''பொலீஸ்காரனாக'' இயங்குகின்ற அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குப் பெரும் கஷ்டமான பொறுப்பாக அமைந்துள்ளது.

## கிழடுதட்டிய ஏகாதிபத்திய மரத்துக்கு திரிபுவாதம் ஒரு முண்டு! மரத்தை வீழ்த்த முண்டை வெட்டி எறிவது அவசியம்!

உலக ஏகாதிபத்தியத்தின் நெருக்கடி துரிதமடைந்து வருவதைக் காட்டுகின்ற இந்த நிகழ்ச்சிகள், உலக ஏகாதிபத்தியம் பூரணமாக சரிந்து விழுகின்ற சகாப்தத்தில் நாம் வாழ்கின்றோம் என்ற மார்க்சிஸ்ட் — லெனினிஸ்டுகளின் கோட்பாட்டை நிரூபிக்கின்றன.

### மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி

எமது எட்டாவது மாநாட்டைத் தொடர்ந்த காலங்களில், சீனவில் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி மலர்ந்ததைக் கண்டோம். இது எமது சகாப்தத்தின் மகத்தான நிகழ்ச்சிகளில் ஒன்று: மகத்தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியைப் போன்ற முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால் அதைவிடக்கூடிய பிரதிபலன்களைத் தரக்கூடியது.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி சோஷலிஷத்தின் மாற்றமடைந்த பொருளாதார அடிப்படைக்கு உகந்த முறையில் சமுதாயத்தின் கலாச்சார அரசியல் துறைகளை புனரமைக்கும் முயற்சியாகும். பழைய சுரண்டல் அமைப்புகளுடன் சம்பந்தப்பட்ட கூடாத பழைய எண்ணங்களையும் பழக்கங்களையும் வழக்கங்களையும் அழித்தொழித்து அவற்றிற்குப் பதிலாக' தொழிலாளி வர்க்கத்துடன் சம்பந்தப்பட்ட சுரண்டல் இல்லாத சோஷலிஸ அமைப்புடன் சம்பந்தப்பட்ட, புதிய எண்ணங்களை, பழக்கங்களை, உருவாக்கும் முயற்சியாகும்.

## திரிபுவாதிகளோடு எதுவித ஐக்கியத்திற்கும் இடமில்லை

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலவுகின்ற நிலைமையில் அவ்வாறான ஒரு புரட்சியை எப்படி நடத்துவது என்பது பற்றி அறிவாற்றல் மிக்க சீன மக்களின் மகத்தான தலைவர் தோழர் மா சே—துங் வழிகாட்டியுள்ளார். ருஷ்யப் புரட்சியினதும், சீனப் புரட்சியினதும் அனுபவங்களைக் கொண்டு, சோஷலிஸப் புரட்சிக்குப் பின்பும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உருவாக்கப்பட்ட பின்பும் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டங்களும் தொடர்ந்தும் இருக்கின்றன என்பதை அவர் உணர்ந்ததால் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை ஆரம்பித்து அதற்கு நேரடியான தலைமை தாங்க அவரால் முடிந்தது.

இப் புரட்சி, கட்சியினதும், அரசினதும் ஒழிந்திருந்த எதிரிகளை, குறிப்பாக முதலாளித்துவப் பாதையை எடுத்துள்ள கட்சியின் உயர்மட்ட நபர்களான சிறு கூட்டத்தினரை, தோழர் மா சே-துங் கினுடைய புரட்சிகர கொள்கைக்கு எதிராக முதலாளித்துவ பிற்போக்குக் கொள்கையை திணிக்க முயன்றவர்களை பொறுமையுடன் களைபிடுங்கியுள்ளது மட்டுமல்லாமல் சீனவில் முதலாளித்துவம் திரும்ப

## அழிவுப் பாதையில் ஏகாதிபத்தியம்

ஸ்தாபிக்கப்படுவதை தடை செய்துள்ளது. சீனவை உலகப் புரட்சியின் தளமாகப் பாதுகாத்து அதன் மூலம் உலகப் புரட்சியின் விரைவான வெற்றியை உறுதிப்படுத்தியுள்ளது. பீகிங் உலகப் புரட்சியின் மத்தியஸ்தானமாகியுள்ளது. அங்குதான் எமது சகாப்தத்தின் மகத்தான மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டும், சர்வதேச புரட்சிகர இயக்கத்தின் மகத்தான தலைவருமான தோழர் மா சே-துங் வாழ்கின்றார். ஈடிணையற்ற மேதாவிலாசத்துடன் உலகப் புரட்சிகர இயக்கத்தை வழிநடத்திச் செல்கின்றார்.

இந்த வகையில் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்புரட்சிக்கு நேரடியான தலைமை கொடுப்பதன் மூலமும், ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும் பிற்போக்குக்கெதிராகவும், நவீன திரிபுவாதத்திற்கெதிராகவும் நடத்துகின்ற போராட்டத்திற்கு உலகப் புரட்சிகர இயக்கத்திற்கு வழிகாட்டுவதன் மூலமும் தோழர் மாசே-துங் மார்க்சிஸம்—லெனினிஸத்தை ஆக்கபூர்வமாக வளர்த்தெடுத்துள்ளார். அதனை ஓர் பூரணமான புதிய கட்டத்திற்கு உயர்த்தியும் உள்ளார்; இதனை நாம் இப்போது மா சே—துங் சிந்தனை என்று குறிப்பிடுகிறோம்.

**ஏப்ரல் மாதம் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 9-வது மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் அறிக்கையின் சர்வதேச நிலைமை பற்றிய பகுதி.**

### முப்பெரும் மைல் கல்கள்

மார்க்சிஸம் — லெனினிஸத்துக்கு மா சே-துங் ஆற்றிய பங்கு என சீன தோழர்கள் குறிப்பிட்டுள்ள பின் வரும் விளக்கத்தை நாம் ஆமோதிக்கின்றோம். ''மார்க்ஸும், எங்கெல்ஸும் விஞ்ஞான சோஷலிஸக் கொள்கையை உருவாக்கினர். லெனினும், ஸ்டாலினும் மார்க்சிஸத்தை வளர்த்தெடுத்தனர். ஏகாதிபத்தியத்தின் சகாப்தத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பல பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தனர். தனி ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுகின்ற கொள்கை, நடைமுறை பிரச்சினைகளை தீர்த்துவைத்தனர். தோழர் மா சே-துங் மார்க்சிஸம்—லெனினிஸத்தை வளர்த்தெடுத்துள்ளார். இன்றைய சகாப்தத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பல தரப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துள்ளார். புரட்சியைத் தொடர்ந்து நடத்துகின்ற, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் முதலாளித்துவம் திரும்பக் கொண்டுவரப்படுவதைத் தடை செய்கின்ற பல பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துள்ளார். இவை மார்க்சிஸத்தின் சரித்திர வளர்ச்சியில் மூன்று பெரும் மைல் கற்களாகும்.''

1966ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி நிறைவேற்றப்பட்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின், எட்டாவது மத்தியக் கமிட்டியின் பதினோராவது விரிவடைந்த கூட்டத்தின் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள விளக்கத்தை நாம் அதேபோல மனப்பூர்வமாக அங்கீகரிக்கின்றோம். அதாவது ''தோழர் மா சே—துங் எமது சகாப்தத்தின் தலை சிறந்த மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட். தோழர் மாசே-துங் ஆக்கபூர்வமாகவும் பரிபூரணமாகவும் மார்க்சிஸ—லெனினிஸத்தை மேதாவிலாசத்துடன் பின் பற்றி, பாதுகாத்து, அபிவிருத்தி செய்து அதனை ஓர் புதிய கட்

14-ம் பக்கம் பார்க்க

# திரிபுவாத எதிர்ப்புப் போராட்டத்தில் நடுநிலைமை போலித்தனமானது

13-ம் பக்கத் தொடர்

டத்திற்கு உயர்த்தியுள்ளார். மா சே-துங் சிந்தனை என்பது ஏகாதிபத்தியம் பூரணமான அழிவை நோக்கிச் செல்கின்ற, சோஷலிஸம் உலக ரீதியான வெற்றிப் பாதையை நோக்கிச் செல்கின்ற சகாப்தத்தின் மார்க்ஸிஸ-லெனினிஸம்''

மார்க்ஸிஸம் என்பது கார்ல் மார்க்ஸின் சிந்தனை. லெனின் மார்க்ஸிஸத்தை ஆக்க பூர்வமாக வளர்த்தெடுத்தார். அவரது சிந்தனைகள் லெனினிஸம் என்று அழைக்கப்பட்டன. மார்க்ஸிஸ—லெனினிஸம், மார்க்ஸினதும் லெனினினதும், சிந்தனைகளாகும். தோழர் மா சே-துங் மார்க்ஸிஸம்-லெனினிஸத்தை ஓர் புதிய கட்டத்திற்கு வளர்த்தெடுத்தார். அவரது சிந்தனைகள் இன்று மா சே-துங் சிந்தனை என அழைக்கப்படுகின்றன.

லெனின் வாழ்ந்த காலத்தில் யாராவது லெனினிஸத்தைத் தாக்கினுல் அவர்கள் அடிப்படையில் மார்க்ஸிஸத்தை தாக்குகின்றனர் என்று பொருள். அதேபோல் இன்று யார் மா சே-துங் சிந்தனையை தாக்குகிருரோ அவர் அடிப்படையில் மார்க்ஸிஸம்—லெனினிஸத்தை தாக்குகிருர். அக்டோபர் புரட்சியை தொடர்ந்து லெனின் பின்வருமாறு குறிப்பிட்டார்: ஒரு சோஷலிஸ்ட் யார் என்பதற்கு உரைகல் அவர் சோவியத் யூனியனைப்பற்றி கொண்டுள்ள கண்ணேட்டம். இன்று மாசே-துங் சிந்தனை பற்றியும் மக்கள் சீனு பற்றியும் உள்ள கண்ணேட்டம் தான் இதற்கு உரை கல்லாகும்.

மா சே-துங் சிந்தனையை உணர்வு பூர்வமாகப் படித்தல் எமது மக்களின் சகல பகுதியினரும் அதனை பரந்தளவில் ஏற்றுக் கொள்ளச் செய்தல், இலங்கையின் யதார்த்த நிலைமைகளுக்கு இணங்க அதனை நடைமுறை சாத்தியமாக்குவது ஆகியன எமது கட்சியின் ஒவ்வொரு அங்கத்தவரினதும் ஒவ்வொரு மார்க்ஸிஸ்டினதும் கடமையாகும்.

### அல்பேனியாவில் நடக்கும் புரட்சிமய இயக்கம்

கிட்டத்தட்ட சம காலத்தில் சீனுவில் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி நடக்கின்ற வேலையில் அல்பேனியாவில், ஒரு வெகுஜன புரட்சிகர இயக்கம் நடைபெற்று வந்திருக்கிறது. இது சீனுவின் கலாச்சார புரட்சியின் நின்றும் உருவத்தில் வேறுபட்ட போதிலும் உள்ளடக்கத்திலும், நோக்கத்திலும் இன்று சீனுவில் நடை

பெறுவதைப் போன்ற இயக்கமேயாகும் அதாவது மக்களின் எண்ணங்களை மாற்ற, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாக்க முதலாளித்துவம் திரும்பப் புகுத்தப் படுவதை தடை செய்ய, புரட்சியை முன்னெடுத்துச் செல்ல நடத்துகின்ற இயக்கமாகும்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் அல்பேனிய தொழிற் கட்சியும் நாம் பின்பற்றி நடக்க கூடிய மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்ட் கட்சிகளின் இரு சிறந்த உதாரணங்களாகும். புரட்சிகரக் கட்சிகளை அமைத்த முறையில், மார்க்ஸிஸ—லெனினிஸ போதனைகளைப் பின்பற்றிய முறையில், புரட்சியை நடத்திய முறையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உருவாக்கிய முறையில், பின்பு ஏகாதிபத்தியத்தினதும், நவீன திரிபுவாதத்தினதும், சகலவித பிற்போக்குவாதிகளினதும் தாக்குதல்களிலிருந்தும் அதனைப் பாதுகாத்த முறையிலும் முதலாளித்துவம் மறுபடி புகுத்தப் படுவதை தடுத்த முறையிலும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாத்த முறையிலும், தமது நாடுகளில் புரட்சியை முன்னெடுத்துச் செல்கின்ற முறையிலும் உலக புரட்சிகர இயக்கத்திற்கு வழிகாட்டும் வகையிலும், இவ்விரு கட்சிகளும் சகல மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சிகளுக்கும் நல்ல உதாரணங்களாகும். நாம் அடக்கத்துடன் அவர்களது அனுபவங்களைப் படித்து அவற்றில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

டிருக்கும் உலக ஏகாதிபத்தியம் என்ற கிழடு தட்டிய மரத்திற்கு முண்டாக செயல் படுகின்றது. மரத்தை வீழ்த்துவதின் கடமையில், முண்டை வெட்டி எறிவதும் ஓர் கடமையாக உள்ளது.

### சோவியத்தை நாசப்படுத்தும் நவீன திரிபுவாதம்

சோவியத் யூனியனுக்குள்ளே படிப்படியாக முதலாளித்துவம் திரும்பப் புகுத்தப் படுதல், சோவியத் நவீன

மத்தியஸ்தானமாக கொண்ட நவீன திரிபுவாதிகள் பிற்போக்கான ஏகாதிபத்திய சார்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அப்பாவிகளைக் கூட இன்று நம்ப வைத்துள்ளன.

### ரூபிளிலிருந்து சுதந்திரம் பெற்று டாலருக்கு அடிபணிய விரும்பும் திரிபுவாதக் கூட்டத்தினர்

நவீன திரிபுவாதிகள் இனிமேலும் தமது மத்தியில் ஐக்கிய முன்னணி உண்டு என்று எள்ளளவேனும் பாசாங்கு செய்ய முடியாது. தோழர் அன்வர் ஹோஜா சுட்டிக் காட்டியதைப் போல்'' இன்று திரிபுவாத முன்னணியின் அத்திவாரமே ஈடாட்டம் கண்

டுள்ளது. ஒருவரை ஒருவர் ஒழித்தெறியத் தயாராக உள்ள ஓநாய்கள் போல் காட்சியளிக்கின்றனர். இன்று இசை அமைப்பாளரின் தாளத்திற்கு சகல திரிபுவாத கலைஞர்களையும் ஆட வைக்க முடியாதிருக்கின்றது. பல விதமான திரிபுவாதங்கள் ஒன்ருேடொன்று தமது செல்வாக்குக்காக சண்டையிடுகின்றன. ரூபிள்களிடமிருந்து முடிந்தளவு சுதந்திரமடையவும், டாலரில் அடிபணியவும் வேண்டுமென விடாப் பிடியாகப் போராடுகின்றன.''

உலக கம்யூனிஸ்ட் கட்சிகளின் சட்ட விரோதமான

தாக பாசாங்கு செய்கின்றனர். இந்த இராட்சத மயமான போராட்டத்தின் போது நடு நிலைமை வகிப்பதாகக்கூறுவது நவீன திரிபுவாதப் பாதையில் முதல்படி யாகும். திரிபுவாதத்தையும் வறட்டுத் தத்துவார்த்தத்தையும் (dogmatism) இரண்டையுமே எதிர்க்கின்ருேம் என்று கூறுபவர்களின் நிலையும்இதுவேயாகும். நாம் நவீன திரிபுவாதத்திலிருந்தும் வறட்டுத் தத்துவாதத்திலிருந்தும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமென்பதும் சரி. எதனை எதிர்த்து நாம் போராடத் தவறுகிற்ருேமோ அதனிடம் இருந்து தான் அபாயம் நிகழும் என்பது உண்மை. ஆனல் இன்று சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தில் கூடிய அபாயம் வறட்டுத்

## மா ஓ சிந்தனையையும் மக்கள் சீனத்தையும் பற்றிய கண்ணேட்டமே மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டின் உரைகல்

திரிபுவாத ஆட்சிக்கும்பலினுல் முதல் தொழிலாளர் அரசில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஒழிக்கப் பட்டமை; சகல வெளிநாட்டுப் பிரச்சினைகளிலும் உலக மக்களின் முதல் எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் அவர்கள் வெளிப்படையாக ஒத்துழைத்தல்; சகல தேசிய விடுதலைப் போராட்டங்களையும் காட்டிக் கொடுத்தல்; வியட்நாம் பிரச்சினையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்காக ஏவல் புரிதல்; அண்மையில் அமெரிக்க தூண்டுதலில் அராபிய மக்களுக்கு எதிராக இஸ்ரேல் ஆக்கிரமிப்புச் செய்தபோது அவர்

தத்துவ வாதத்தில் தான் உள்ளது என்று பாசாங்கு செய்வது வெறும் விதண்டாவாதம். வறட்டுத் தத்துவ வாதத்தை மட்டும் போராடும் நிலையை எடுப்பவர்கள் விரைவில் தவருன நவீன திரிபுவாதச் சேற்றில் புதைந்துவிடுவர்.

அண்மையில் ஓர் நிலைமை உருவாகுவதை நாம் காண்கின்ருேம். புரட்சிகர இயக்கத்தின் பெரும்பான்மையினர் நவீன திரிபுவாதத்தின் தவருன நிலையை புரிந்துகொண்டுள்ளனர்என்பதைஉணர்ந்தும், நவீன திரிபுவாதம்முன்னரைப் போல் மக்களை இனிமேலும் ஏமாற்ற முடியாது என்பதை தெரிந்துகொண்டதும் ''நடு நிலைமை'' சக்திகள் என்று கூறப்படும் சில புதிய சக்திகள் அவர்கள் கூறுவது போல் மாஸ்கோவிற்கும் பீகிங்கிற்கும் இடையே நடு நிலைமை வகிப்பதாக கூறிக்கொண்டு முன் வந்துள்ளன.

## புரட்சிகர யுத்தத்தில் மக்களை அணிதிரட்ட வேண்டும்

எமது அறிக்கைக்கு உட்பட்டகாலகட்டத்தில்சோவியத் யூனியனை தலைமைப் பீடமாகக் கொண்டுள்ள நவீன திரிபுவாதம் படிப்படியாக அம்பலப் படுத்தப் பட்டுள்ளதையும் நாம் கண்டு கொண்டோம். நவீன திரிபுவாதம் என்பது லெனின் விளக்கியுள்ளது போல் தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் உள்ள முதலாளித்துவ செல்வாக்கேயன்றி வேறு ஒன்றுமில்லை என்ற மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்டுகளின் விளக்கம் சரியானது என்பதை நடைமுறை நிகழ்ச்சிகள் நிரூபித்துள்ளன. உலக ஏகாதிபத்தியம் தனது அழிவு கிட்டிய நேரத்தில் தொழிலாளி வர்க்கத்தினுள் இருந்த தனது கடைசி சக்தியாக வரவழைத்துள்ள சக்திதான் நவீன திரிபுவாதம். அது இன்று சரிந்து வீழ்ந்து கொண்

கள் அராபிய மக்களுக்குச் செய்த துரோகம்; சீன—எதிர்ப்பு இயக்கத்தை தொடர்ந்து நடத்த பிற்போக்கு இந்தியாவிற்கு ஆயுதம் கொடுத்தும் வேறு வகையிலும் உதவி செய்தல்; கொலைபாதகமான இந்தோனேஷிய பிற்போக்கு அரசாங்கத்துடன் கொண்டுள்ள நட்பும் கொடுத்து வரும் உதவியும்; சீனுவைச் சுற்றி இராணுவ தளங்களால் முற்றுகையிட அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்தும் உலக தந்திரத்தில் பங்கு கொள்ளல்; மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சிக்கு எதிரான பிரச்சாரத்தில் அண்மையில் உலகின் படு பிற்போக்கு சக்திகளுடன் வெட்கமின்றி பங்கு கொள்ளல்-ஆகிய திரிபுவாதிகளின் இந்த நடவடிக்கைகள், சோவியத் யூனியனை

கூட்ட மொன்றை கூட்ட சோவியத் திரிபுவாத ஆட்சிக்கும்பல் எடுத்த சகல முயற்சிகளும் படுதோல்வி கண்டுள்ளன. இவை யாவும் நவீன திரிபுவாத கோட்டைக்குள் ஏற்படுகின்ற சீரழிவையும். அது இறுதியில் அழிந்தொழியப் போகிறது என்பதையும் தான் எடுத்துக் காட்டுகின்றன.

மார்க்ஸிஸம்-லெனினிஸத்திற்கும் நவீன திரிபுவாதத்திற்கும் இடையே எந்தவித சமரசமும் விட்டுக் கொடுப்பும் பாலம் கட்டலும் இருக்க முடியாது என்ற எமது உறுதியான நம்பிக்கையை நாம் வற்புறுத்த வேண்டியது அவசியம். மார்க்ஸிஸம்—லெனினிஸத்திற்கும் நவீன திரிபுவாதத்திற்கும் இடையே சில கட்சிகளும் நபர்களும் நடு நிலைமை வகிப்ப

### கொரிய கியூபக் கட்சிகள் திரிபுவாதிகளின் ஒரு பகுதியினரே

இந்தக் கட்சிகள் குறிப்பாக கொரியன் தொழிலாளர் கட்சியும் கியூப கம்யூனிஸ்ட்கட்சியும் தம்மை மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் வார்த்தைகளை உச்சரித்துக் கொள்கின்றன. ஆனல் உண்மையில் நவீன திரிபுவாத மார்க்ஸிய விரோத சிந்தனையின் வாகனங்களாக மா சே—துங் சிந்தனையின் எதிர்ப்பாளர்களாக மாறியுள்ளன. தோழர் மாசே-துங் முன்வைத்துள்ள மக்கள் யுத்தம் பற்றிய சரியான புரட்சிகர கொள்கைகளுக்கு மாருக கொரில்லா யுத்தம் பற்றியும், புரட்சி பற்றியும் சேகுவாராவினதும், பிடல் காஸ்ட்ரோவினதும் சிறு முதலாளித்துவ, அதி தீவிர எண்ணங்களையும் கொரியாவின் கிம் இல் சுங்குடைய சில குழப்பமடைந்த

— 9-ம் பக்கம் பார்க்க

# மாசே-துங் சிந்தனைக்கு விஸ்வாசம் கொள்வோம்

— 14-ம் பக்கத் தொடர்

எண்ணங்களையும் புகுத்தும் முயற்சி ஒன்று எடுக்கப்பட்டு வருகின்றது. வாலிபர்களை ஏமாற்றுவதற்கு கடுமையான முயற்சி எடுக்கப்படுகின்றது: இது நவீனதிரிபுவாதிகள் மாசே துங் சிந்தனையை அவமானப் படுத்த உலக ரீதியாக நடத்தும் இயக்கத்தின் ஓர் பகுதியாகும்.

நீண்ட நாள் யுத்தம் பற்றியும், கிராமப்புறங்களில் புரட்சிகர தளங்கள் அமைப்பது பற்றியும் மா சே—துங் சிந்தனை மக்கள் மத்தியில், குறிப்பாக வாலிபர் மத்தியில் கூடுதலான செல்வாக்குப் பெறுவதைக்கண்டு, சே குவாராபிடல் காஸ்ரோ ஆகியோருடன் சம்பந்தப்பட்ட கொரில்லா யுத்தம் பற்றிய அடிப்படையில் மார்க்ஸிய விரோத கொள்கைகளைப் பரப்புவதன் மூலம் மாசே-துங் சிந்தனையை எதிர்கும் முயற்சி நடைபெறுவதாகத் தெரிகின்றது.

எந்த ஒரு நாட்டிலும் புரட்சிகர நிலைமை முதிர்ச்சி அடைந்தால் என்ன, அடையாவிட்டால் என்ன அதாவது புரட்சி செய்ய மக்கள் தயாரா என்பதை கணக்கிலெடுக்காது, உறுதியான புரட்சிவாதிகள் சிலர், இன்றுள்ள அரசு யந்திரத்தை தூக்கி எறிந்து ஆட்சியைக் கைப்பற்றி அதற்குப் பின் மக்களை அரசாங்கத்தினர் பக்கம் வென்றெடுக்கலாம் என்ற எண்ணத்தைப் பரப்ப முயற்சி எடுக்கப்படுகின்றது.

இக் கொள்கை அடிப்படையில் மக்கள் மேல் நம்பிக்கை இல்லாத, அதி தீவிர சிறு முதலாளித்துவ சித்தாந்த ரீதியானதாகும். பல இடையூறுகளுக்கு மத்தியில் வீர தீரச் செயல்கள் செய்ய விரும்பும் தனிப்பட்ட நபர்கள் சிலரில் நம்பிக்கை வைக்கின்ற கொள்கை தான் இது.

சில நபர்கள் பொது மக்களின் ஆதரவு இல்லாமல், பாட்டாளிவர்க்க வெகு ஜனங்கள் பங்கு பற்ருமல் எதிரியை தோற்கடிக்க முடியும் என்ற கொள்கையை முன் வைக்கின்றனர். ''இது சிறு முதலாளிகள் பெரிதும் விரும்பும் போராட்ட முறை. அவர்களின் தனித் தம்பிரான் போக்கையும் பாட்டாளி வர்க்கத்துடன் சேர விரும்பாத நிலையையுமே எடுத்துக் காட்டுகின்றது.'' இப்படியான சிறு முதலாளித்துவ சிந்தனையைத் தான் தோழர் மாசே-துங் ''அலைந்து திரிகின்ற எதிர்க் கோஷ்டியினரின் சித்தாந்தம்'' என்று 1929-ம் ஆண்டில் கண்டித்தார்.

## மக்கள் மீது நம்பிக்கை வைத்தல்

இதற்கும் தோழர் மாசே-துங்கினது மக்கள் யுத்தம் பற்றிய கொள்கைக்கும் சம்பந்தம் ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாசே-துங்கின் கொள்கை பொது மக்கள் மத்தியில் பூரண நம்பிக்கை வைப்பதை அடிப்படையாகக் கொண்டது அதன்படி புரட்சிவாதிகள் மக்கள் மத்தியில் சென்று வேலை செய்ய வேண்டும். குறிப்பாக விவசாயிகள் மத்தியில் வேலை செய்ய வேண்டும், அவர்களுடன் ஒன்ருக இணைந்து கிராமப்புற புரட்சிகர தளங்கள் அமைத்து நீண்ட நாள் மக்கள் யுத்தம் நடத்தி இறுதியில் கிராமங்களில் இருந்து நகரங்களைமுற்றுகையிட்டு அவற்றை விடுவித்துக் கொள்ள வேண்டும். புரட்சிகர யுத்தம் வெகு ஜனங்களின் யுத்தம் மக்களை அணி திரட்டுவதன் மூலமும் அவர்கள் மேல் நம்பிக்கை வைப்பதன் மூலமும் அதனை நடத்த முடியும் என்று தோழர் மாசே—துங் தெளிவாகக் கூறியுள்ளார். அவ்வாருக மக்கள் யுத்தம் பற்றிய மார்க்சிஸம்-லெனினிஸக் கொள்கை புரட்சிகர ரீதியில் மக்களை அணிதிரட்டி அதுவும் தொழிலாளி வர்க்கக் கட்சியின் தலைமையில் அணி திரட்டி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அது மக்களைத் தட்டி எழுப்பி அவர்களை ஸ்தாபன ரீதியாக திரள் எதவி அளித்து போராடும் துணிவைப்புகட்டி அதுவும் ஆரம்பத்தில் தன்னை விடக் கூடிய பலம் வாய்ந்த எதிரியை எதிர்த்துப் பழக்கி போராட்டத்தின் மூலம் தமது சொந்த படைகளை வளர்த்து இறுதியில் எதிரியை முறியடிக்கக் கூடிய சக்தி பெறும்வரை தொடர்ந்து போராட உதவி செய்வதாகும்.

இதற்கும் கியூபக் கொள்கையான தொழிலாளி வர்க்கத்தினதும் அதன் கட்சியினதும் பாத்திரத்தை புறக்கணிக்கின்ற வெகு ஜனங்களின் பாத்திரத்தை புறக் கணிக்கின்ற தனி நபர்களில் அல்லது கூட்டத்தினரில் நம்பிக்கை வைக்கின்ற கொள்கைக்கும் சம்பந்தமே இல்லை.

புதிய திரிபுவாதிகள் உறுதிப்படுத்த நினைக்கின்ற இப் போலிக் கொள்கைகளிடமிருந்து உண்மையானவற்றை இனம் கண்டு கொள்ள சகல மார்க்சிஸ்ட் லெனினிஸ்டுகளும் எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும்.

மார்க்சிஸம் — லெனினிஸத்திற்கும் நவீன திரிபுவாதத்திற்கும்இடையிலான அடிப்படை வேறுபாடுகளை இங்கு மறுபடியும் கூற வேண்டியதில்லை. எமது கடந்த மாநாட்டில் இதை விரிவாக நாம் ஆராய்ந்துளளோம். இப் பிரச்சினை பற்றி எமது கட்சிக்குள் அபிப்பிராய பேதம் ஏதும் இல்லை.

மார்க்சிஸம் — லெனினிஸத்திற்கும் மா சே—துங் சிந்தனைக்கும் தங்கு தடையற்ற எமது விசுவாசத்தை இம் மாநாடு மறுபடியும் வற்புறுத்த வேண்டும். எமது காலத்து இந்த மிகவும்முன்னேற்றமான கொள்கையை நாம் எமது சகல அங்கத்தவர் மத்தியிலும் புகுத்த வேண்டும். அவர்கள் அதனைக் கற்றுக் கொள்ள இலங்கையின் புரட்சிகர நிலைமைக்குப் பயன்படுத்த உதவ வேண்டும்.

மா சே—துங் சிந்தனையை வெகு ஜனங்கள் புரிந்து கொண்டதும் அது சளைப்பு ஏற்படாது ஓர் பக்க பலமாக, நேர் நிகரில்லாத சக்தி வாய்ந்த சித்தாந்த அணு குண்டாக ஆகிவிடும் என்று தோழர் லின்பியாஓ கூறியுள்ளார். இம் மகத்தான ஆயுதத்தை பயன்படுத்த நாம் பழகிக் கொள்வோம்.

# குடியேற்ற விவசாயிகளின் ...

— 6-ம் பக்கம் பார்க்க

ளுடனும் இரண்டறக் கலந்து எங்களுடைய சரித்திரங்கள் பட்டுமெத்தையும், 'பென்ஸ்' காராலும் எழுதப்பட்டதல்ல கரயிடிடம் கடிவாங்கியதும். முதலையால் இழுத்துச் செல்லப் பட்டதும், யானையால் அடித்துக் கொல்லபப்பட்டதும் பாம்புக் கடிவாங்கி இறந்ததும் போதிய போக்குவரத்து வசதி இல்லாததால் பெண்கள் குழந்தை பெற முடியாமல் மரணமடைந்தும், நோயாளிகளைக் 'காவு' கட்டித் தோளில் 10, 12 மைல் காவிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதும் எங்கள் வாழ்க்கை அமைந்திருக்கின்றன. ஆனல் காட்டில் பெய்யும மழை அரசாங்கக்குளத்தில் தேக்கிவைக்கப்பட்டதும் பணக்காரரின் உரிமைப் பொருளாக மாறுவது எப்படி? அப்படியானல் இங்குள்ள கஷ்டங்களை மட்டும் அனுபவிப்பதற்கு நாங்களும், நன்மைகளை அனுபவிப்பதற்கு மட்டும் பெரும் நிலச்சொந்தக் காரர்களுமா? இந்த நிலைமை நீடிக்கத்தான் வேண்டுமா? ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகளின் பஞ்சத்திலும் பசியிலும் வாழ ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடிய பெரும் பணக்காரர் சொத்து மேல் சொத்து சேர்க்க நாம் அனுமதிக்க வேண்டுமா?

## எமது விமோசனப் பாதை எது?

காலம் காலமாகக் கஷ்டங்களை அனுபவித்து வரும் எமது விமோசனத்திற்கான பாதை எது? கடந்த இருபது ஆண்டு காலமாகப் பாராளுமன்றத்திற்கு வெவ்வேறு பிரதிநிதிகளை அனுப்பி வைத்தோம். அவர்களில் ஒருவராவது எங்களுக்குச் சார்பான நடவடிக்கைகளை ஒரு சிறிய அளவிலேனும் எடுத்தார்களா? பாராளுமன்றம் சென்றவர்கள் பணத்தையும், பதவிகளையும், காணிகளையும் தாங்கள் பெற்றுக் கொண்டார்களே யொழிய எமது வறுமை நிலையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. பல குடியேற்றவிவசாயிகளின் கோரிக்கையின் பேரில் தண்ணீர்க் கூட்டத்திற்கு சமூகமளித்திருந்த தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. பொ. இரத்தினம் வாய்மூடி மௌனியாக வீற்றிருந்து எல்லோருக்கும் 'நல்லபிள்ளையாக' நடித்துவிட்டுச் சென்றுவிட்டார். அவர் எப்படித் தனது வர்க்கத்திற்கும் தனது கட்சியின் 'அடிப்படைக் கொள்கைகளுக்கும்' துரோகமிழைக்க முடியும். குடியேற்ற விவசாயிகளுக்காக ஒரு வார்த்தை அக் கூட்டத்தில்பேசாத அவர் யார் பக்கம்? அன்றைய சமசமாஜக் கட்சியின் தோழரும், அன்றைய தமிழ்க் காங்கிரஸ் பிரமுகருமான திரு. வீ. ஆனந்த சங்கரி இன்னும் ஒரு படி மேலான தந்திரத்தைக் கையாண்டு விட்டார். அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் எமக்காகப் பட்டின சபைத் தலைவர் என்ற முறையில் வாதாடவேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தும் எங்கே பணக்காரர் கோபித்துக்கொண்டு விடுவார்கள் என்று பயந்தோ என்னவோ தண்ணீர்க் கூட்டம் நடந்த பக்கம்கூட எட்டிப் பார்க்கவில்லை. எங்னே அவர் சாமர்த்தியம். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது இந்தப் பாராளுமன்ற மோகத்தில் தடுமாறுபவர்கள் எமக்காக வாதிடவோ, போராடவோ துணிந்து முன்வர மாட்டார்கள்! ஏனெனில் அவர்களுக்குத் தேர்தல் காலத்தில் தேனய் ஓடுவது பெரும் நில முதலாளிகளின் பணம் தானே!

ஆகவே நாம் செய்யவேண்டியது என்ன?

இந்த நீர்ப்பிரச்சனையென்பது கிளிநொச்சி விவசாயிகளுக்கு மட்டும் தனித்துள்ள ஒரு பிரச்சனையல்ல. நாடு பூராவும் உள்ள நிலப் பிரபுக்கள் ஏழை விவசாயிகளுக்குச் சேரவேண்டிய நீரைப் பறித்தெடுத்து தாங்கள் மேலும் பணக்காரர்கள் ஆகிக் கொண்டிருக்கிறுர்கள். ஆகவே அடிப்படையில் இப்பிரச்சினையைத் தீர்க்கும் ஓரே வழி கிளிநொச்சிப் பகுதியில் உள்ள சகலவிவசாயிகளும் ஐக்கியப்படுவது மட்டுமன்றி இலங்கையில் உள்ள ஏனைய விவசாயிகளுடன் ஐக்கியப்பட்டு நம் நாட்டின் குளங்களை ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமாக்கும் போராட்டத்தில் முன் செல்வதே! இதை தனிப்பட்ட ஒரு சிலர் செய்வார்கள் என்று எதிர்பார்த்தோமாயின் கடந்த காலங்களைப் போன்று நாங்கள் ஏமாற வேண்டியவர்களாவோம். இவ்விடத்தில் சீனத்தின் எழுபது கோடிமக்களின் இணையற்ற தலைவரான மாசே- துங் அவர்கள் சொன்னதை நினைவுகூர்வது மிகவும் பயனுடையதாகும், ஒடுக்கப்பட்ட மக்களும், தேசங்களும் தங்கள் விடுதலைக்கான நம்பிக்கைகளை ஏகாதிபத்தியவாதிகள் மேலும் பிற்போக்கு வாதிகளினதும் 'புத்திசாலித்தனத்தில்' வைக்கக் கூடாது. மாருக தங்கள் ஐக்கியத்தைப் பலப்படுத்தி போராட்டத்தில் விடாப்பிடியாக இருப்பதால் மட்டுமே அவர்கள் வெற்றியடைவார்கள்.''

இன்றைக்கு இலங்கையிலுள்ள சகல விவசாயிகளையும் ஜாதி, மத, இன பேதமின்றி ஐக்கியப்படுத்தக்கூடிய ஒரே சங்கம் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளமே. இது வரை எமது சம்மேளனத்தில் இணையாத விவசாயிகள் அங்கத்தவராகச் சேர்வதன்மூலம் எமது ஐக்கியத்தை வலுப்படுத்திப் போராட்டத்தை விடாப்பிடியாக இறுதிவெற்றி வரை எடுத்துச் செல்வதற்கு முன்வரும்படி அறைகூவி அழைக்கிறோம்.

அகில இலங்கை விவசாயிகள்
சம்மேளனம்
கிளிநொச்சிப் பிரதேசக்
கிளை

## விடுதலைப் படையில்

### ஓர் அங்கமாவாய்

விண்ணுயர உயர்ந்து நிற்கும் கோபுரமும்
விண்டுரைக்கும் உன்பெருமை உலகினுக்கு-ஆனல்
பன்னீரும், பஞ்சனையுமாய்ப் படுத்துறங்கும்
பகல் கொள்ளை முதலாளித்துவம் உணரவில்லை
கண்ணீரும் செந்நீரும் சிந்தி நீயும்
கடுமையாய் உழைத்திடல் கண்டு நிதம்
ஊனும் கள்ளும் உண்டு வாழும்
உன்மத்த முதலாளித்துவம் இதை உணராதப்பா;

நெஞ் சொடிய பஞ்சையாய் உழைக்கும் உந்தன்
நெஞ்சுக்கு என்றுமே நீ விரோதியல்ல; ஆனல்
கந்தையாய்க் கபோதியாய் அலைய விடும்
காண்டுமிராண்டி முதலாளித்துவம் என்ற
விரோதியப்பா

விந்தையோ விநோதமோ இல்லையபா
விஞ்ஞான மார்க்ஸிஸம் உரைப்ப தெல்லாம்.
நெஞ்சிலே நிறுத்தி அதை செயல் முறையில்
நடத்திஞல் வெற்றி உந்தன் பங்கமப்பா

தென் கிழக்கில் சிவப்பின் ஒளி தெரியுதப்பா
செஞ்சினம் நலிவுற்ரோர் தலைமையபபா
உமைத்த முதலாளித்து வெறிய ரெல்லாம்
ஊளையிடும் நரிகளாய் ஒடுங்குதப்பா;
அடக்கு முறை சுரண்டலுக்கு ஆட்முட்டு
அல்லலுற்றது போதும் போதும் நீ எழும்பி நின்று
மிடுக்குடன் செங் கொடியைக் கரத்திலேந்தி
விடுதலைப்படை அணியில் ஓர் அங்கமாவாய்

- இரா-பாலா

## கோஷங்கள்

◎ —1ம் பக்கத் தொடர்

◎ தொழிலாளர்களே, விவசாயிகளே, ஐக்கியமுறுவீர்!

◎ ஏகாதிபதியம், நிலப்பிரபுத்துவம், யூ. என். பீ. அதன் பிற்போக்கு சகாக்கள் ஆவற்றிற்குகியஎதிரான சகலசக்திகளையும் ஐக்கியப்படுத்துவோம்!

◎ சாதி ஒடுக்கு முறைக்கும் நீண்டாமைக்கும் எதிரான போரட்டத்தை ஆதரிப்போம்!

◎ அமெரிக்க ''சமாதானப் படை''யை நாட்டை விட்டு வெளியேற்று!

◎ அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அவற்றின் அடிவருடிகள் ஆகியோரிடளிடமிருந்து இலங்கையை விடுவிக்க முன் வருவோம் செல்வோம்!

◎ புரட்சிகர கண்ணோட்டத்தின் கீழ் சகல தொழிலாளர்கயும் ஐக்கியப் படுத்துவோம்!

◎ அவசரகால நிலைமையை ரத்துச் செய்!

◎ வியட்நாமுக்கு எதிரான அமெரிக்க ஆக்கிரமிப்பு ஒழிக!

◎ விடுதலைப் போரில் வியட்நாமிய மக்களது துணிகரமான பதிற் தாக்குதலுக்கு முழு ஆதரவையும் அளிப்போம்!

◎ அமெரிக்காவில் இன பாகுபாட்டுக்கு எதிரான நீக்ரோக்கள் போராட்டத்திற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்!

◎ பாலஸ்தீனத்தின் விடுதலைக்கான அரசபிய மக்களின் போராட்டத்தை ஆதரிப்போம்!

◎ சீனுவின் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி நீடூழிவாழ்க!

◎ எமது யுகத்தின் தலை சிறந்த மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டான தோழர் மா சே-துங் நீடூழி வாழ்க!

◎ ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்கள் நீடூழி வாழ்க!

◎ நவீன திரிபுவாதம் ஒழிக!

◎ அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான உலக ஏகாதிபத்தியம் ஒழிக!

◎ மார்க்சிஸம்—லெனினிஸமும் மா சே—துங் சிந்தனையும் நீடூழி வாழ்க!

◎ உலகப் புரட்சியின் வெற்றி நோக்கி முன் செல்வோம்!

◎ உலகத் தொழிலாளர்களே, சகல ஒடுக்கப்பட்ட மக்களே, ஐக்கியமுறுவீர்!

## சாதி அமைப்பு . . .

◎ —12ம் பக்கத் தொடர்

சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கான தொடர்ச்சியான போரட்டத்திற்குத் தயாராகிக் கொள்ள வேண்டும்.

போராட்டத் திசை திருப்பு வாதம், சமரசக் குருட்டு வாதம், இரண்டு ஆண்டுகள் பொறுத்திருந்து போராடும் மலட்டுவாதம் ஆகியவைகளுக்குக் கொஞ்சமேனும் இடமளியாமல் செய்ய வேண்டியவைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

### அம்பலப்படுத்துங்கள்

சாதிக் கோட்டை சரியத் தொடங்கியிருக்கும் சரியான காலம் இதுவே! இவ்வேளை வலுப்பெற வேண்டிய இயக்கம், பல விதத்தில் பலரால் காட்டிக் கொடுக்கப்படலாம். காட்டிக் கொடுப்பவர்கள் யாராயிருப்பினும் தயவு தாட்சணியம் இன்றி அவர்களை அம்பலப்படுத்திச் செல்லாக் காசாக்க வேண்டும்.

''நாம் சுத்தசைவர்கள், சைவ ஆகம விதிகளின்படி நடப்பவர்களை மட்டும்'' கோவிலுக்குள் அனுமதித்தால்போதும். என்னதான் குறையிருப்பினும் நாம் அந்நிய மதத்தவர்களாக கூடாது, நாம் சைவர்களாகினுல் சாதியே ஒழிந்துவிடும் என்று யாராவது கூறினுல் இவர்கள் காட்டிக்கொடுப்பவர்கள்: சாதி வெறியர்களின் கையாட்கள் என்று எண்ணுங்கள்; இவர்களை அம்பலப் படுத்துங்கள்!

''இப்போது ஆலயப் பிரவேசப் பிரச்சினையை மட்டும் கொண்டு செல்வோம், 'தேநீர் கடைப் பிரச்சினையைப் பிறகு பார்ப்போம்; கொஞ்ச கொஞ்சமாகப் பார்ப்போம்'' என்று யாராவது கூறினுல் இவர்கள் காட்டிக் கொடுப்பவர்கள்; சாதிவெறியர்களின் கையாட்கள் என்று எண்ணுங்கள்: இவர்களை அம்பலப்படுத்துங்கள்!

''கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டும் ஏன் இந்த அக்கறை? இவர்கள் ஊரைத் தூண்டிவிட்டு கலகங்களை வருவித்து அதிகாரத்தைப் பிடிக்கப் பார்க்கின்றனர், உந்த மாசே-துங்காரரை நம்பாதியுங்கோ'' என்று யார் கூறுகிறுர்களோ; அவர்களே காட்டிக் கொடுப்பவர்கள்; சாதி வெறியர்களின் கைக் கூலிகள்: அரசியல் மலடர்கள் என்று நினையுங்கள்; ஈவு, இரக்கம், தயை, தாட்சணியமின்றி இவர்களை அம்பலப்படுத்துங்கள்!

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் திக்கெட்டும் பரவட்டும்!

## தொழிலாளர் வர்க்க ஐக்கியம் படைப்போம்

● 11-ம் பக்கத் தொடர்

கிடைக்கும் சம்பளம் நாளுக்கு 5/10 சதமும் நாணய மதிப்பிறக்க அலவன்ஸ் 40 சதமுமாகும் இங்கும் வேற்றுமை 1/- ரூபாவாக உள்ளது.

ஒரு என்ஜினியரிங் ஸ்தாபனத்தை எடுத்துக்கொள்வோம் புதிதாக சேவையில் சேர்ந்த ஒரு லிகிதருக்கு மாதம் 240/- ரூபாவும் நாணய மதிப்பிறக்க அலவன்ஸ் 10/- ரூபாவும் கிடைக்கின்றது. இது ஒரு நாளுக்கு 9/60 சதமாகும். ஆனுல் இதே முதலாளி தனது கம்பனியில் பிரதானமான வேலைகளைச் செய்கின்ற பிட்டர், மெக்கானிக், மோல்டர் போன்ற பயிற்றப்பட்ட தொழிலாளர்களுக்கு ஒரு நாளுக்கு 5/60 சதமும் 40 சதம் நாணய மதிப்பிறக்க அலவன்சும் கொடுக்கின்றுர்.

இந்த வேற்றுமையை அகற்றுவதற்கான இயக்கத்தை நடத்துவோம் என மாநாட்டில் நாம் தெரியப் படுத்துகின்றோம். லிகிதர்களினதும். பியோன்மார்களதும் சம்பளத்தைக் குறைக்குமாறு நாம் கேட்கவில்லை ஆனுல் தொழிலாளர்களது சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

### சி. எம். யூ:வின் சீர்குலைவு

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தையும் (சி. எம். யூ) அதன் சீர்குலைவு நடவடிக்கைகளையும் பற்றி இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை இன்று அது நடத்துகின்ற வேலை நிறுத்தம் தமது சங்கத்தில் அங்கம் வகிக்காத தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய் செய்யப்பட வேண்டுமென கோரிச் செய்கின்ற ஒரே ஒரு வேலை நிறுத்தம் எனலாம், இந்த நடவடிக்கையை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது ஆதலால் நாம் வேலை நிறுத்தத்தை ஆதரிக்க வில்லை. அதே வேளையில் துறைமுகத்தில் உள்ள எமது தொழிற் சங்கம் வேறு சில தொழிற்சங்கங்களைப் போல் கருங்காலித்தனம் செய்யவும் இல்லை. இத்த விஷயத்தை எமது அங்கத்தவர்களுக்கும் பொது மக்களுக்கும் பல பொய்கள் கூறியுள்ள திரு. தம்பு அவர்களுக்கும் தெளிவு படுத்த வேண்டியது அவசியம்.

தொழிற் சங்கத் துறையில் சி. எம். யூ. தலைவர்கள் செய்கின்ற சீர்குலைவுச் வேலைகளைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படி எமது அங்கத்தவர்களை நாம் கேட்டுக் கொள்ள விரும்புகின்றோம் லிகிதர் சேவையில் உள்ளவர்களை பிரதிநிதித்துவப் படுத்துவதுடன் திருப்தி கொள்ளாமல், சி. எம். யூ. இன்று தொழிலாளர்களுக்கு நல்ல சேவை செய்துள்ள தொழிற் சங்கங்களுடன் சகோதரர்களைச் கொலை செய்கின்ற ரீதியிலான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. இப்படியான நடவடிக்கைகள் தொழிலாளர்களைப் பலவீனப் படுத்தவும் முதலாளிகளுக்கு ஒத்தாசை அளிக்கவுமே உதவும்.

சி. எம். யூ. தலைவர்களின் அரசியல் அமைப்பைப் பார்க்கும் பொழுது இதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமே இல்லை. சி. எம். யூ. வுடன் சம் சம்பந்தப் பட்டுள்ள அரசியல் தலைவர்கள்—எட்மண்ட் சமரக்கொடியும் மெரில் பெர்ணுண்டோவும் 1964 டிசம்பர் 3—ம் திகதி கூட்டரசாங்கத்தை வீழ்த்த யூ. என். பி. க்கு உதவியதன் மூலம் தொழிலாளர்களின் நிரந்தரமான வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டனர். ''தேசிய அரசாங்கம்'' அமைக்கப் பட்டதும் திருவாளர் தம்பு அரசாங்கத்தின் செல்லப் பிள்ளையாக மாறி பல தகராறுகளைத் தீர்ப்பதில் தொழிலமைச்சரிடம் இருந்தும் பிரதமரிடம் இருந்தும் கூடப் பல சலுகைகளைப் பெற்றுர். அன்று முதல் ஆசிய பவுண்டேஷனும் இலங்கையில் உள்ள அமெரிக்க ஸ்தானிகராலயமும் ஒழுங்கு செய்த இலவச பயணத்தை மேற்கொண்டு அமெரிக்க ஏகாதிபத்திய மண்ணில் சுற்றுப் பயணம் செய்ததும், அவரது மனைவி இன்னுமோர் இலவசப் பயணத்தில் மேற்கு ஜெர்மனி சென்றதும், மேற்குஜெர்மனிய ஈபர்ட் பவுண்டேஷனை சி. எம். யூ. அங்கீகரித்ததும்—ஆகிய இந்த நடவடிக்கைகள் மூலம் இவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் மேற்கு ஜெர்மன் யுத்த வெறியர்களினதும் அடிவருடிகள் என்ற நாமத்தைத் திட்டவட்டமாகச் சூட்டிக் கொண்டனர்.

முதலாளித்துவச் சார்புடைய பிற்போக்கான தற்கொலைப் பாதையில் சி. எம். யூ. செல்கின்றது என்பதைப் பற்றி எமது அங்கத்தவர்களை மட்டுமல்லாது இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்திலுள்ள முற்போக்காளர்களையும் நாம் எச்சரிக்க விரும்புகின்றோம்.

எம்மைப் பொறுத்தவரை பரிபூரணமான புரட்சிகரக் கண்ணோட்டத்துடன் சி. டி. யூ. எப்-பின் புரட்சிகரத் துவஜத்தின்கீழ் தொழிலாளர் வர்க்கத்தின் ஒள்றுமையை உருவாக்குவோம் என்ற உறுதியுடன், விவசாயிகளுடனும் ஏனைய கிராமப்புற மக்களுடனும் நெருங்கிய தொடர்புகள் ஏற்படுத்துவோம் என்ற உதிதியுடன் இம் மாநாட்டிலிருந்து புறப்படுவோம்! அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், யூ. என். பி, அதன் பிற்போக்கு சகாக்கள் யாவரையும் தோற்கடிக்க இந்த வகையில்தான் முடியும். (முற்றும்)

4-ம் பக்கத்தில் வரும் ''நம்மைச் சுற்றியின் தொடர்ச்சியை 15ம் பக்கத்தில் பார்க்க என்று தவறுதலாக அச்சிடப் பட்டிருக்கிறது. அத் தொடர்ச்சியை 12ம் பக்கத்தில் பார்க்கவும்.

14ம் பக்கத்தின் தொடர்ச்சியை 9ம் பக்கம் பார்க்க என தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளது அத் தொடர்ச்சியை 15ம் பக்கத்தில் பார்க்கவும்.

# புரட்சிகரமேதினம்

**கொழும்பு ஹைட் பார்க்கில்**

**4-30 மணிக்கு**

# பொதுக் கூட்டம்

**தலைவர்: ஆரியவன்ச குணசேகர**
(தலைவர் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம்)

**பேச்சாளர்கள்: என். சண்முகதாசன்,**
(பொதுச் செயலாளர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி)

**எஸ். டி. பண்டாரநாயக்க, எம். பி.**

**வாட்சன் பெர்ணுண்டோ,**
(தலைவர், சி. டி. யூ. எப்.)

**ஹிக்கொட தர்மசேன,**
(உப-தலைவர், சி. டி. யூ. எப்.)

**எம். சி. எம். ஷாபி,**
(உதவிச் செயலாளர் சி. டி. யூ. எப்.)

**ரொஸாரியோ பெர்ணுண்டோ,**
(உப-தலைவர் இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடிச் சங்கம்)

**ஏ. ஆர். எட்மண்ட்**
(இலங்கை வாலிபர் சங்க சம்மேளனம்)

**பிரதான ஊர்வலம் பகல் 2 மணிக்கு**
**ஹைட்பார்க்கிலிருந்து புறப்படும்**

**கிளை ஊர்வலங்கள் பகல் 12 மணிக்கு**
**கிராண்ட்பாஸ் சிலோன் டிரேடிங் கம்பனிக்கு அருகிலிருந்தும்**
**வெள்ளவத்தை நெசவாலைக்கருகிலிருந்தும் புறப்படும்**

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி,
இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்,
அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம்,
இலங்கை வாலிபர் சங்க சம்மேளனம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'', அச்சகம் 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2